பதிவு எண் 2041

KUDI ARASU.

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா }

குடி அரசு

வருட சந்தா முன் பணம் ...	...	ரூ 3—0
6 மாத சந்தா ,,	...	ரூ 1–12
வெளி நாட்டிற்கு ,,	...	ரூ 4—0

வாரப்பதிப்பு.

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 3. | ஈரோடு, பிரபவ ஞ பங்குனி மீ 20உ (1—4—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 49.

இனும்! இனும்

முனையில் இரிடியம் உள்ள 14-Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனாம்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்திரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

கையில் கட்டும் ரோல்டு கோல்டு ஸ்பிரிங் செயினும், பௌண்டன் பேனாவும் இனாம்.



நூதனமாக வரவழைத்த எங்களின் 22 காரட் ரோல்டு கோல்டு கை கெடியாரம், 5 வருஷம் உத்திரவாதம் புதுமாதிரி பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான காலத்தைக் காட்டும்.
விலை ரூ. 6—8—0. தபால் கூலி வேறு.

லண்டன் வாட்ச் அவுஸ்.
3, பார்க் டவுன், (தா) சென்னை.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு! புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

முத்துமாமா.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் 4½ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

டேபில் டைம்பீஸ் இனாம் !!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில் வைக்கக்கூடியதொரு அழகான டேபில் டயம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி மதராஸ்.

முன் விலை ரூ. 14 இப்பொழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தவேஷப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras

மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஞ ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மென்ட் லைசென்ஸ வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார்
இஞ்சினியரிங்ஒர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—8—0.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

இனாம்! இனாம்!!

சாரவிவேகி சதானந்தன் சம்பாஷணை 'கிழவன் குமாரனன்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனாமாக அனுப்புவோம்.

ஸ்ரீ சர்து இரத்தினசற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.

கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று மிகவும் சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக கலியாப்தம் கடிதம் எழுதும்போதாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

நமது வைத்தியசாலை பழனியில் ஸ்தாபித்து 26—ஞுமாகிறது. பழனியில் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்டு உலக மெங்கும் நல்ல பேர் எடுத்த வைத்தியசாலை இதுவேயாகும்.

வைத்திய சாஸ்திரத்தில்-மகாநிபுணர், மூப்புவைக் கண்டுபிடித்தவர்.

ரிஜிஸ்டர்
TRADE MARK

இம் மருந்துகள் மூதல்தரமான தேவ ஒளஷதங்களென்று 1923-ல் திருநெல் வேலியில் கூடிய சித்தர் ஆயுள் வேத மெடிகல் கான்பரென்சிலும 25-8-23-ல் சென்னையில் நடந்த ஷை கான்பரென்ஸ் அண்டு எக்ஸிபிஷனிலும், தங்க மெடலும் "வைத்திய ஆசிரியர்" என்று பட்டமும் பெற்றவர். ஒவ்வொரு மருந்துகளுக்கும் கணக்கற்ற நற்சாக்ஷிப்பத்திரங்கள் வந்து வண்ணமாயிருக்கின்றன. அவற்றுள் சில அடியில்காண்பன.

தாதுபுஷ்டியில் மன்மதனுக் கொப்பாவர்.

பலனில்லாவிடில் பணத்தை திருப்பிக்கொடுக்கப்படும்.

நீங்கள் என்றுமழியாத இளமைப் பருவத்தை அடைய வேண்டுமானல்,

பழனி ஆர். எம்; கே.

த ங் க ப ஸ் ப ம்

நரசிங்க லேகியத்தில் சாப்பிடுங்கள்.

இது ஒரு கற்பத்திற்கு சமானமானது. உலகப்பிரசித்தி பெற்றுவிட்டது.

தாது புஷ்டிக்கு இதற்கு நிகரான மருந்து ஒன்றுமேயில்லை! இது பிரபுக்கள் சாப்பிடவேண்டிய மருந்து! மற்றவர்கள் சாப்பிட்டு தாங்கமுடியாது.

இதிலமைந்திருக்கும் ஓர் அபூர்வசக்தி உபயோகித்தவர்களுக்குத்தான் இதனருமை தெரியும். இதைக் காலை மாலை கோய்பலம்போல் 1, மண்டலம் உட்கொண்டால் வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும், பலத்தையும் கொடுத்து இழந்து போன ஆண்மைத்தனம் முழுமையும் திரும்பிவரும்படி செய்கிறது. இக்குணம் இதிலமைந்திருப்பது மகா ஆச்சரியமாயிருக்கிறது. இப்படியும் ஒரு மருந்துண்டாவென்று பிரமிக்கச்செய்கிறது. தாதை கட்டுவதில் அபாரசக்தி வாய்ந்தது. இதின் பெருமையை எழுதி முடியாது. நீரிழிவு, பிளவை, குன்மம், காசம், க்ஷயம், ஈளை, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, குஷ்டம், சூலை, கிரந்தி, கருமேகம், செம்மேகம், வெள்ளை, வெட்டை, கடுப்பு, எரிச்சல், மூலம்; பவுத்திரம் சகலவித கர்ம வியாதிகளையும் நிவர்த்தி செய்து, தாதுபுஷ்டியை உண்டாக்குவதில் இதற்கு மிஞ்சின ஒளஷதமில்லை. பத்தியமில்லை: 100 நாளைக்கு தங்க பஸ்பமும், நரசிங்க லேகியமும் ரூபாய் 100. 50 நாளைக்கு ரூபாய் 50. 25 நாளைக்கு ரூபாய் 25.

மேகரோகம் கொடிய வியாதியில்லாதவர்கள் தாதுபுஷ்டி சரீரதிடம் அடைய தங்கபற்பத்தை அனுபானம் மகா மன்மத கேசரி அல்வாவில் சாப்பிடவும். காமகேசரி அல்வாவும் தங்கபற்பமும் 100 நாள் மருந்து ரூபாய் 50. 50 நாளைக்கு ரூபாய் 25. 25 நாளைக்கு ரூபாய் 12—8—0.

நற்சாக்ஷி:— 1-9-24ல் கோலாசெலங்கர் டிஸ்டிரிக்ட் ஹாஸ்பிடல் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன் தமது தங்க பஸ்பத்தைப் பற்றி புகழ்வதை கவனியுங்கள்:— அன்பார்ந்த வைத்திய ஆசிரியர் ஆர். எம். வேலுசாமி பிள்ளை அவர்களுக்கு அதிக பக்தியுடன் எழுதுவது யாதெனில், தங்க பஸ்பமும், சாலாமிசிரி லேகியமும் இரு நோயாளருக்கு 50 நாட்களாக கொடுக்கப்பட்டது. இருவரும் தங்கள் குறைகள் நீங்கி நல்ல சவுகரியத்துடனிருக்கிறார்கள். தாங்கள் அருமையாகச்செய்த பஸ்பமும், லேகியமும் யாவராலும் கொண்டாடத்தக்கதே. இன்னும் 100 நாளைக்கு தங்க பஸ்பமும், சாலாமிசிரி அல்வாவும் ரூபாய் 50 க்கு வி. பி. செய்யவும். ஷை டாக்டர் அவர்களே 19-1-25ல் எழுதுவதை கவனியுங்கள்:— தங்களின் அருமையும் பெருமையுமான தங்க பஸ்பமும், சாலாமிசிரி லேகியமும் ஒரு நோயாளி ஒருவருக்குக்கொடுத்தேன். அவரின் எத்தனையோ விதமான நோய்கள் பஞ்சுபோல் பறந்து போய்விட்டது. இப்போது அவர் நல்ல திடதேகியாயிருக்கிறார். ஆகையால், அடியிற்கண்ட மருந்துகளை அனுப்பவும். தாம்பிர பஸ்பம் 80—வேளை தாளிசபத்திரி சூரணம் 40-வேளை ஒருமாதம் சாப்பிடக்கூடிய நரசிங்க லேகியம், தங்க பஸ்பம் ரூபாய் 50. செலவு ரூபாய் 2. ஆக ரூபாய் 97-க்கு வி. பி. செய்யவும்.

ஷை டாக்டர் அவர்களே 2-6-25-ல் எழுதுவதை கவனியுங்கள்:— ஸ்ரீமான் வைத்திய ஆசிரியரவர்களுக்கு தங்களின் மருந்துகள்யாவும் நோயாளர் யாவருக்கும் சுகத்தையும், மனதிருப்தியையும் கொடுத்திருக்கின்றது. தங்கள் மருந்துகளின் அருமையையும், பெருமையையும் நான் அனேகருக்கு அனுபோக அத்தாக்ஷியுடன் எடுத்துக் காட்டியிருக்கிறேன், தங்கள் மருந்துகளுக்கு சர்டிபிகேட் தேவையில்லை. மருந்துகள் தாமே தங்கள் பெயரை எங்கும் விளங்கச்செய்கின்றது. ஆகையால் தாம்பிர பஸ்பம், நரசிங்க லேகியம், பவள பஸ்பம் இவ்வகளை வி. பி. செய்யவும். (ரூபாய் 238-க்கு வி. பி. ... சவில் அனுப்பியிருக்கிறது.) P- Nagalingan Hospital C/o Disrict Hospital Kualaselenger.

வைத்திய ஆசிரியர்,

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,

சித்த வைத்தியசாலை, பழனி

தந்தி விலாசம்:— "சித்தர்" பழனி.

நமது பிராஞ்சு வைத்தியசாலை 29, பிராட்வே மதராஸ்.

குடும்பத்துக்கோர் பொக்கிஷம்.

சில மாதங்களுக்குள்

"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்"

11,000 பிரதிகள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒருவர் வாங்கிப் படித்தால் அவர் தம் நண்பர்கள் யெல்லோரையும் வாங்கும்படி தூண்டுகிறார். எனவே இப்புத்தகத்திற்கு உள்ள மதிப்பை நாங்கள் சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம்.

இல்வாழ்வை நல் வாழ்வாக

நடத்த உத்தேசிக்கும் ஸ்திரீ புருஷர்கள் கையில் இந்நூலின் பிரதியொன்று இருந்தே தீரவேண்டும்.

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

மூன்றாம் பதிப்பு விலை ரூ. 2.

ஒவ்வொரு ஊரிலுமுள்ள புஸ்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும். போலிப் புஸ்தகங்களை வாங்கி ஏமாறுதீர்கள். புஸ்தகத்தின் மேலில் "வாசன் புஸ்தகசாலை" என்ற பெயர் இருக்கிறதாவென்று பார்த்து வாங்குங்கள்.

எமதுவிலாசம்:—

வாஸன் புஸ்தகசாலை,

244, தங்கசாலை வீதி, தபால் பெட்டி 119, மதராஸ்.



Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம். போட்டோவின் அளவு 3½"x 2½" ஆகும். இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி.

பிரம்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்.

பனி! பனி! பனி!

குளிர் காலத்திற்கு அடக்கமான கம்பளிப் போர்வைகள் சுத்தமான உரோமத்தால் நம் நாட்டில் நெசவு செய்யப்பட்டவை. 6 முழ நீளம் 3 முழ அகலமும் அழகிய பல நிறங்களில் கிடைக்கும்.

நெ. 1.	6 முழ நீளம்	3 முழ அகலம்	ரூ.	15.
2.	,,	,,		12.
3.	,,	,,		10.
4. 5	,,	2½	,,	8.

கம்பளித் தொப்பி நெ.	1	உருப்படி 1-க்கு	3-8-0
டை	2	டை	2-8-0
,,	3	,,	2-0-0

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணாமல் போனதைக் கண்டெடுத்தல், இருக்குமிடத்திருந்தே தூர தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியன எழுதப்பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். ஆரியன் ஸைன்டிபிக் இன்ஸ்டிடியூட், செனாய்பேட்டை, மதராஸ்.

9-ம் பதிப்பு! வெளி வந்து விட்டது 9-ம் பதிப்பு!!

ஆங்கில ஆசான் (ஒன்பதாம் பதிப்பு)

தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற்கக்கொடுத்ததும், இதைப்போன்ற அநேக புஸ்தகங்கள் பின்னால் பணம் பறிக்கும்பொருட்டு அநேகரால் தயார் செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும், பிரசித்தமும், நற்கியாதியும் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும் சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிடமிருந்து உயர்ந்த நற்சாக்ஷிப் பத்திரம் வாங்கப்பட்டதுமான எமது ரிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க் போட்டுள்ளது.

ஆங்கில ஆசான் என்ற பெயர் பார்த்தும், இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள்.

800 பக்கம் புறா காலிகோ பயிண்டு விலை ரூ. 2—0—0

வி. பி. தபால் செலவு அணா 0—8—0.

தி. இராஜகோபால் முதலியார், 302 தங்கசாலைத் தெரு, மதராஸ்.

பார்ப்பனீயம் ஒழிய

குடி அரசையும், திராவிடனையும் படியுங்கள்.

திருச்சியில் 'திராவிடன்' நிதிக்காக நடந்த நாடகம்.

அன்பர்களே நமது ஊரில் நடந்த 24—7—27 ல் 'திராவிடன்' பத்திரிகைக்கு நிதி சேர்க்கும் பொருட்டு ஜூப்லி சகோதரர்கள் சங்கம் சார்பாக நடத்திய "மூன்று நண்பர்கள்" என்ற நாடகத்தின் கணக்கும் வரும்படி பணமும் இன்னும் 'திராவிடன்' பத்திரிகைக்கு அனுப்பாமல் இருக்கிறது. இப்பொழுது அப்பணங்களை வசூலிப்பதற்காக நடந்த 17—3—28 ல் கூடிய சங்கக் கூட்டத்தில் அடியில் கண்ட ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறது.

கமிட்டி மெம்பர்கள்:— திருவாளர்கள் அ. இராவணதாசன், நா. வாசுதேவன், அ. சண்முகசுந்தரம், செ. செங்கசாமி, கி. ஆ. பெ. விஸ்வநாதம், மு. இலக்ருமணன், ந. சின்ன கிருஷ்ணன், சா. திருவேங்கடம், கு. சுந்தரம், இ. ஆறுமுகம், கே. கலியப்பெருமாள்.

டிக்கட்டுகளை விற்ற நமது நண்பர்கள் மேலே காட்டிய கமிட்டி மெம்பர்களில் எவரிடமாவது தாமதம் செய்யாது பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

மு. இலக்குமணன், அமைச்சர்,
தமிழர் சீர்திருத்தக் கழகம், திருச்சி.

பூளைமேடு P. S. G. நாயுடு அண் சன்ஸ், அறநிலையச் சருவசனக் கல்லூரி விடுதி மாணவர் கழக ஆண்டு விழா.

இவ்வாண்டு விழா மயிலாப்பட்டி உயர் திருவாளர் பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார் அவர்கள் தலைமையில் 10—3—28 சனிக்கிழமையில் நிறைந்த சிறப்புடன் நடைபெற்றது.

பல அறிஞர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள் மாணவர்கள் பரிசுகள் வழங்கப்பெற்றனர்.

மாணவர்களும் தலைவர்களும் புகைப்படமெடுக்கப்பெற்றார்கள். தலைவர் முடிவுரை கூற விடுதித் தலைவர் திருமிகு பி. எஸ். வேணுகோபால் நாயுடு வந்தனோபசாரம் வழங்க ஆண்டு விழா இரவு 9 30 மணிக்கு இனிது நிறைவு பெற்றது.

பிறகு உயர் திருவாளர் அவைத்தலைவர் முடிவுரை கூறி அருளினார்கள். ஒரு நிருபர்,

---

அநேக காட்சிகளில் பொன், வெள்ளி மெடல்கள் பெற்ற
விதைகள் செடிகள்

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுபழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி, கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள்:— 20 சாம்பிள் பாக்கெட் ரூ. 2. 10 பாக்கெட் ரூ. 1—4. நாட்டுக் காய்கறி 20 பாக்கெட் ரூ. 2—8. ச. கொ. இ. காதர்மீரா சாய்பு,
ஹெட்ரர்சா தோட்டம், சேலம்.

உயர்வான பனியன்கள்! விலை மலிவு! வெகுநாள் உழைப்பது!

விரைவில் வாங்குங்கள்.

பெயருக்காகப் போலி பனியன்களை வாங்கி ஏமாறுதீர்கள்.

நமது நாட்டில் தொழிலனுபவ மிக்க தன வைசியர் ஒருவரின் நேரான மேற் பார்வையில் ஒழுங்காக நடைபெறும் தன வைசிய தொழிற்சாலை எமது ஸ்ரீ மீனாட்சி விலாஸ் நிட்டிங் பாக்டரி ஒன்றேயாகும். இதிலிருந்து விதவிதமான பனியன்கள் வெவ்வேறு அளவுகளில் கண் கவர் வனப்புடையனவாய் உறுதியும் சேர்த்தியுமிக்க நூல்களைக்கொண்டு தயார் செய்து விற்பனை செய்யப்பெறுகிறது. உடலின் பக்கவசத்தில் தையல் இல்லை. குறைந்த விலையில் சிறந்த பனியன்களை விரிவாக விற்பதே எமது நோக்கம். ஒருமுறை வரவழைத்து உபயோகித்துப் பார்ப்பின் உண்மை விளங்கும். உள் நாட்டிலும், மலாய் பர்மா முதலிய வெளி நாடுகளிலும் ஏராளமாக விற்பனையாகிறது. வியாபாரிகளுக்கும் மொத்தமாய் வாங்குபவர்களுக்கும தக்க கமிஷன் கொடுக்கப் பெறும். ஆர்டர்கள் உடனுக்குடன் கவனித்து ஒழுங்காக நிறைவேற்றப்பெறும். ஆர்டர்கள் அனுப்புகிறவர்கள் பத்திரிகையைக் குறித்து எழுதுவதுடன் நூற்றுக்குப் பத்து வீதம் முன்பணம் அனுப்ப வேண்டும். வி. பி. சார்ஜ் பாக்கிங் சார்ஜ் பிரத்தியேகம்.

A/1 டைமண்ட் நிட் திக் பனியன்கள்.

24 இஞ்சு டஜன் 1-க்கு	ரூ. 4-2-0	30 இஞ்சு டஜன் 1-க்கு	ரூ. 6-0-0
26 ,, ,,	ரூ. 4-8-0	32 ,, ,,	ரூ. 6-12-0
28 ,, ,,	ரூ. 5-4-0	34 ,, ,,	ரூ. 7-8-0

ஷை ரகங்களில் நைஸ் பனியன்கள் டஜன் 1-க்கு 12 அணா அதிகம். சாம்பிள் பனியன்களுக்கு வி. பி. சார்ஜ் பாக்கிங் சார்ஜ் இனாம். முழு விபரத்திற்கும் மானேஜருக்கு எழுதி தெரிந்து கொள்ளவும்.

சொந்தக்காரர்
வ. ராம. கு. முத்து
முத்துக்கருப்பஞ் செட்டியார்.
தேவகோட்டை.

M. முத்துராமன் செட்டியார்,
மானேஜர்,
ஸ்ரீ மீனாக்ஷிவிலாஸ் நிட்டிங் பாக்டரி,
பெருந்துறை Perundurai (S. I. R.)

விபவவருடத்திய சுயமரியாதைப் பஞ்சாங்கம்.

சென்ற வருடம் போலவே இவ்வருடமும் சுயமரியாதைப்பஞ்சாங்கம் அச்சியற்றி வருகிறோம். பார்வைக்கு மிக்க அழகாக நான்கு வித வர்ணங்களில் சென்னை சோல்டன் கம்பெனியில் அச்சியற்றப் பெறுகின்றன. இதில் சித்திரை முதல் பங்குனி முடிய 12 மாதங்களுக்கும் பனிரண்டு தாள்கள் தனித் தனியே அச்சியற்றி நமது மாபெருந்தலைவர் வைக்கம் வீரமூர்த்தியின் பெரிய திருவுருவம் 6 அங்குல அளவில் அச்சியற்றிய நல்ல பளபளப்பான அட்டையின் கீழ் சேர்க்கப்பெற்றது. மேல் அட்டையில் நமது இயக்கத்தின் முக்கிய கொள்கைகளை அச்சியற்றியிருப்பதோடு 12 மாதங்களிலும் சுயமரியாதை உணர்ச்சியை உண்டாக்கக்கூடிய வாக்கியங்களையும் சேர்த்திருக்கின்றோம். சென்ற வருடத்திய வாக்கியங்கள் முழுதும் எடுக்கப்பெற்று இவ்வருடம் வெவ்வேறு வாக்கியங்களைப் பொறித்திருக்கின்றோம். வழக்கம் போலவே, தமிழ் தேதி, ஆங்கில தேதி, திதி, வாரம நட்சத்திரம், அமிர்தாதி யோகங்கள், இராகு, குளிகை, வார சூலை முதலியவைகள், விரத நாட்கள், பண்டிகை முதலிய விசேஷ தினங்கள் யாவும் விளக்கமாக இப்பஞ்சாங்கத்தின் மூலமாய் நன்கறிந்து கொள்ளலாம். நமக்கு அதிக விலை அடங்குகிறது. ஆனாலும் சுயமரியாதைப் பிரசாரத்தின் நோக்கமாக அணா இரண்டிற்கே கொடுக்க நிச்சயித்து விட்டோம். ஆங்காங்குள்ள நமது சுயமரியாதை வீரர்கள் வரவழைத்து தங்கள் தங்கள் ஊர்களில் பரவச்செய்து பெரும்பலனடைய வேண்டுகின்றோம். 15—4—28-க்குள் கிடைக்கின்ற ஆர்டர்களுக்கு மட்டுமே காலண்டர்கள் அனுப்பமுடியும். விலை அணா 2. வி. பி. செலவு வேறு. கி ஆ பெ. விசுவநாத பிள்ளை,
மணிவாசகத் தமிழகம், திருச்சி.

அறிக்கை.

எங்களிடம் பிரான்ஸி நல்ல ரகமுள்ள வெள்ளி ஜரிகை மாக்குகளும், பாம்பே குவாலிட்டி மேல் கண்ட மாக்குகளும், சூரத் மாக்குகளும் கைவசமிருக்கிறது. உள்ளூர் ஜவுளி தினுசுகளும் இருக்கிறது. விலைஜாப்தா வேண்டியவர் எழுதினால் அனுப்பித்தருகிறோம்.

சி. லிங்கி செட்டி,
எஸ். வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம்,
கோயமுத்தூர்.

நாயக்கர் பிரசாரமும் மனுஸ்மிருதியும்.

(கைவல்ய சாமியார் எழுதுவது)

அநேகர், மிஸ்மேயோ எழுதின 'இந்தியமாதா' என்னும் புஸ்தகத்திலுள்ள சில பாகங்களை ஒத்துக்கொண்டு சில பாகங்களைக் கண்டித்தார்கள். சில பாகங்கள் மிகைபட எழுதியிருப்பதாகக் குற்றஞ் சொன்னார்கள். நல்லதை விட்டுவிட்டு கெட்டதையே எழுதியிருப்பதாகத் தீர்மானித்தார்கள். சில தமிழ் பத்திரிகைகள் 'குப்பைவாரி மேயோ' என்று கூக்குரலிட்டன. நம் தேசத்துப் பெண்கள் விபசாரமுடையவர்கள் என்று எழுதினதைக் கண்டு அநேகர் கோபித்தார்கள். புஸ்தகத்தைக் கொளுத்தினார்கள்; மறுப்பெழுதினார்கள். தேசத்திற்கே ஆபத்து வந்து விட்டதாகப் பயந்தார்கள். மிஸ் மேயோ எழுதின புஸ்தகத்தில் ஒத்துக்கொண்டபாகங்களை சீர்திருத்தி செம்மைப் படுத்த யாரையும் காணோம். 'மிஸ் மேயோ புஸ்தகத்தை வெள்ளைக்காரர்கள் மறந்து விடட்டும்; இந்தியர்கள் மறக்கவேண்டாம்" என்று இங்கிலாண்டு பேப்பர் எழுதின உண்மைச் சத்தியத்தை யாரும் கவனிக்கவில்லை. நம் தேசத்தையும் நம ஜனங்களையும் கேவலமாக எழுதிவிட்டாளே என்று கோபம் கொண்டார்களே யொழிய நம நாட்டிலிருக்கும் கொடுமைகளையும் அநுசிதங்களையும் அன்னியர்கள் கண்டு அவமதிக்கிறார்களே என்று வெட்கப்பட்டு வெட்கத்தை உண்டு பண்ண ஏதுவாகவிருக்கும் காரணத்தைக் கோபிப்பவர்களைக் காணோம். அவைகளை எடுத்துச் சொன்னால் 'மதம் போச்சு, கடவுள் போச்சு, மதக்கிரந்தங்களையே அழிக்க வந்திருக்கிறார்கள்' என்று அவர்களைக் குற்றம் சொல்லுகிறார்கள்.

மிஸ் மேயோ புஸ்தகம் நம் தேசப்பெண்களை விபசாரத்திற் குட்படுத்தியிருப்பதால அது கண்டிக்கத்தக்கதே; அதில் யாருக்கும் ஆக்ஷேபனை இருக்காது. இன்னொரு விஷயம் எனது நண்பர்கள் கவனிக்க வேண்டியிருக்கிறது. அதை கீழே எழுதுகிறேன். அதைப் படிப்பதற்குமுன் ஞாபகத்தில் மனதை நிறுத்தி நியாயத்தீர்ப்புக்கு புத்தியை விட்டுவிடுங்கள். அதாவது மனுதர்ம சாஸ்திரத்தில் பெண்களைப்பற்றி சொல்லியிருப்பதை சொல்லுகிறேன். மனுதர்ம சாஸ்திரத்தைக் குற்றம் சொல்லும் 'குடி அரசை' குற்றம் சொல்லப்புறப்பட்டிருக்கிறவர்களும சனசமூகங்களும் தெரிந்து கொள்ளட்டும். மனுதர்ம சாஸ்திரத்தில் பெண்களைப்பற்றி சொல்லியிருப்பவை அநேகருக்குத் தெரியாமலிருக்கலாம். 'தமிழ் நாடு' பத்திரிகை மிஸ் மேயோ புஸ்தகத்தைப் படித்தது போல் மனுதர்ம சாஸ்திரத்தையும் படித்திருந்தால் நம் நாட்டில் நிறைந்து சாஸ்திர மென்று பெயர் வாங்கிக் கிடக்கும் குப்பை கூளங்களைத் தங்கள் உயர்விற்கு துணையாகவே வைத்துக்கொண்டிருக்கும் கூட்டத்தாரின் மன எண்ணத்தின் வழியே தானும ஓடுவது தேசபக்தியாகாது என்பதை உணரும்.

"மனுஸ்மிருதியைக் கொளுத்தி அதற்குப்பின் சைவ வைஷ்ணவ நூல்களைக் கொளுத்த வந்து விட்டால் சைவர்களும் வைணவர்களும் என்ன செய்வீர்கள்" என்று சர்வ மத சகோதர சங்கம் என்னும் பேரைப் போர்த்துக்கொண்டு சிலர் நாயக்கர் பிரசாரத்தைக் குற்றம் சொல்லப்புறப்பட்டிருக்கிறார்கள். வைணவ, சைவ, சமய நூல்களை அழிக்கவோ அதனால் பிழைக்கவோ நாயக்கர் பிரசாரம்வந்ததன்று. 'சைவ, வைணவ இதிகாச புராணங்களிலிருக்கும் ஆபாசக் கதைகளும் அதையே சாஸ்திரமென்று முன் நிறுத்தி செய்யும் கிரிகை வழிபாடுகளும் அதன் மூலமாக மனிதனை மனிதன் கீழ் மேல் கற்பித்து கொடுமைப் படுத்தும் ஆசார அனுஷ்டானங்களும் நம் கடவுளுக்கு பெருமையாக முடியவில்லை. மதத்திற்கு அனுகூலப்படவில்லை, சனசமூகம் ஒன்று சேர முடியவில்லை, தேசம் அன்னிய ஆட்சிக்கு அடிமையாகி விட்டது. இந்த சாஸ்திரத்தை நம்பி நாம் செய்த பூஜை ஆசார அனுஷ்டானங்களெல்லாம் ஒரு பயனுமளிக்கவில்லை. அளித்திருந்தால் நம் கடவுளுக்கு வாத்தியம் வாசிக்கக்கூட வக்கீலுக்குப் பணம் கொடுக்கவேண்டியதில்லை. நாமும் நாலு பேரோடு ஒருவராய் நடக்க ஏன் முடியவில்லை. மனிதனுக வாழும் சனசமூகத்திற்கு மூட்டை தூக்குகிற வேலைக்குக் கூட நம்மை அங்கீகரிக்க வேண்டுமானால் நம் கடவுளையும் ஆசார அனுஷ்டானங்களையும் வீட்டில்விட்டு அவைகளைப் பார்த்துக்கொள்ள ஐந்து ரூபாய்சம்பளத்தில் ஆளல்லவா வைத்துப்போக வேண்டியிருக்கிறது' என்கிற விஷயங்களே நாயக்கர் பிரசாரம்.

நம் நாட்டில் தினமும் அநேக தெய்வங்கள் உற்பத்தியாகியும் அழிந்தும் வருகின்றன. இத்தனை தெய்வங்களில் கைக்கூலியும் பிரதி பலனும் வேண்டாத தெய்வங்களுண்டா? எத்தனை கொடுத்தாலும் அந்த தெய்வங்களுக்கு நம் பேரில் கவலையுண்டா? வேலன், முருகன், அச்சுதன், மாயன் என்கிற நம் கடவுளின் பேரை வைத்துக்கொண்டிருப்பவர்களிடம் நம் கடவுளுக்கு சிநேக முண்டா? அந்த கடவுளைப்பற்றின சாஸ்திரத்திற்காவது இரக்கமுண்டா? அப்படியிருந்தால் அன்னிய மதப்பேரை அணிந்து கொண்டவர்களை கெருட மண்டபத்திற்கு அழைப்பித்து மாலை போட்டு மரியாதை செய்து தன் ஆபரணங்களை யெல்லாம் காட்டி அவர்களைத் திருப்தி பண்ணும் நம் கடவுள் அவர் பேரையும் அவர் பால் பக்தி யுடையவர்களையும் ஏன் புறக்கணிக்க வேண்டும்? இதற்கெல்லாம் காரணமாக இருக்கும் சமய கிரந்தங்களும் வழக்க மென்று சொல்லும் கொடுமைகளும் ஒழியவேண்டுமென்று நாயக்கர் பிரசாரம் செய்தால் அதை மறைத்து நாயக்கர் 'கடவுள் இல்லை என்கிறார், மதக்கிரந்தங்களை அழிக்கிறார்' என்று குற்றம் சொல்லுவதில் என்ன பிரயோஜன முண்டாய் விடும். கோடிக்கணக்கான ஜனங்களை பரிசுத்தம் பண்ணி உலகத்தில் எல்லா சுவாதந்திரியங்களையும் பொதுப்படுத்திக் காட்டும் அன்னிய மதமும் அதன் மந்திரங்களும் குருக்களும் முன்னால் நிற்கையில், நம்மைப் போன்ற ஒரு மனிதன் நம்மதஸ்தன், நமக்குத் துணையாக இருப்பவன், நாம் பிறப்பதிலிருந்து சாகிறவரையிலும் ஊழியம் செய்து செத்தபின் பிணத்தை காத்துச் சுட்டு சுடுகாடு கழுவுகிறவரையிலும் நமக்குதவியாக விருப்பவர்களை வீதியில் விட்டாலும் தேர் திருநாளுக்கு விட்டாலும் நாமும் நம் சாமியும் தீட்டுப்பட்டு நம்மை நரகத்துக்கனுப்பினால் அப்படிப்பட்ட கடவுளும் அது சம்மதமான மத சாஸ்திரங்களும் குருக்களும் இருப்பதைவிட அழிந்து போவதில் உலகத்திற்கு என்ன நஷ்டமென்றே நாயக்கர் பிரசாரம் செய்கிறார்.

நம் நாட்டு வழக்கங்களில் சில தோஷங்களை நினைத்து நம பெண்கள் விபச்சார தோஷமுடையவர்களென்று மிஸ் மேயோ எழுதினது அக்கிரமம் என்றாலும் அவள் நினைத்த அனுச்சார வழக்கங்கள் நம்மிடமிருந்து நீங்கிவிட்டால் நம பெண்கள் விபசாரத் தோஷத்திற்கு ஆளாகமாட்டார்கள் என்பது அந்த புஸ்தகத்திலிருக்கிறது. மனுதர்ம சாஸ்திரத்தில் விபச்சாரம் நம் பெண்கள் கூடவே பிறந்திருக்கிற தென்றும், பிரமாவினால் பெண்கள் சிருஷ்டிக்கப்படுகையிலே விபசாரமும் பெண்களுக்கு சிருஷ்டிக்கப் பட்டதென்றும், மாதர்கள் எப்பொழுதும் பொய்யைப்போல் அசுத்தமுடையவர்களென்றும், மாதர்கள் கற்பின்மையும் நிலையாமனமும் நட்பின்மையும் இயற்கையாக உடையவர்களென்றும், ஒவ்வொருவனும் தன் தாய் விபச்சாரம் செய்திருப்பாள் அல்லது மானசிய விபச்சாரமாவது செய்திருப்பாள் என்று நினைத்து பிராயச்சித்தம் செய்து கொள்ளவேண்டுமென்றும், மாதர்கள் பெரும்பாலும் விபச்சார தோஷமுடையவர்களென்று அநேக சுருதிகளிலும் சாஸ்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறதென்றும் மனுதர்ம சாஸ்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. மிஸ் மேயோவை 'குப்பைவாரி' என்று பல்லை நெறநெற வென்று கடித்த 'தமிழ் நாடு' பத்திரிகையும் மனுதர்மத்தைக் குற்றம் சொல்லவந்த 'குடி அரசை'க் கோபிப்பவர்களும் கீழே காணும் மனுதர்ம சாஸ்திரங்களின் வாக்கியங்களைப் படித்து 'குடி அரசு'டன் சேர்ந்து கொள்ளுவார்களென நினைக்கிறேன்.

மனுதர்ம சாஸ்திரம் 9-வது அத்தியாயம்,
மாதர் தருமம்:—

'மாதர் ஆடவரிடத்தில் அழகையும் பருவத்தையும் விரும்பாமலே ஆண் தன்மையை மாத்திரம் முக்கியமாகவெண்ணி அவர்களைப் புணருகிறார்கள்' 14வது சுலோகம்.

'மாதர்கள் கற்பு நிலையின்மையும், நிலையாமனமும் நட்பின்மையும் இயற்கையாக வுடையவராதலால் கணவனால் காக்கப்பட்டிருப்பினும் அவர்களை விரோதிக்கிறார்கள்' 15வது சுலோகம்.

'மாதர்களுக்கு இந்த சுபாவம் பிரமன் சிருஷ்டித்த போதே யுண்டானதென்றறிந்து ஆடவர்கள் அவர்களை கெடுமல் நடப்பதற்காக மேலான முயற்சி செய்யவேண்டியது' 16வது சுலோகம்.

'படுக்கை, ஆசனம், அலங்காரம், காமம், கோபம், பொய், துரோக சிந்தை இவற்றினை மாதர் பொருட்டே மனுவானவர் கற்பித்தார்' 17வது சுலோகம்.

'மாதர்களுக்கு ஜாதக கர்ம முதலியவை மந்திரத்தோடு கிடையாது. இவர்களுக்கு மனச்சுத்தியும் கிடையாது. பாவத்தை போக்குகிற மந்திரோபதேசமுமில்லை. ஆகையால் பொய்யைப் போல சுத்த மில்லாதவர்களா யிருக்கிறார்கள்' 18வது சுலோகம்.

'மாதர்கள் பெரும்பாலும் விபசார தோஷமுள்ளவர்களென்று அநேக சுருதிகளிலுஞ் சாஸ்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. அதற்குத் திருஷ்டாந்தமாக அந்த விபசாரத்திற்கு சுருதியால் சொல்லிய பிராச்சித்தங்களைக் கேளுங்கள்' 19வது சுலோகம்.

'ஒருவன் தன்னுடைய தாய்க்கு மானஸ விபசாரம் நேரிட்டதாக அறிந்து அதற்குப் பிராய்ச்சித்தம் செய்கிறான். என் தாயானவள் கற்பின்றி அயலான் வீட்டுக்குப் போய் அங்கு பரபுருஷனைப்பார்த்து யாதாவது மனதினாலாசைப்பட்டிருந்தால் அந்த ஆசையினாலுண்டான ரேதஸை என்பிதா தனது ரேதஸினால் பரிசுத்தஞ் செய்யக்கடவன். இதுவே மாதர்கள் நிலையில்லா மனமுடையவர் என்கிறதற்கு திருஷ்டாந்தம்' 20வது சுலோகம்.

'மேற் சொல்லிய பிராயச்சித்தம் கணவனுக்கு விரோதமாக பர புருஷனை மனதினால் நினைப்பதாகிற மானஸ விபசாரத்திற்கு விதிக்கப்பட்டது. இந்த பிராயசித்தமும் பெண்கள் வயிற்றில் தான் பிறந்ததற்காக புத்திரன் செய்துகொள்ள வேண்டியதே அல்லது பெண்களுக்கன்று' 21வது சுலோகம்.

'இந்த விதமாக எழுதப்பட்டிருக்கும் மனுதர்ம சாஸ்திரம் பழய காலத்து நூல்; அதைப்பற்றி நமக்கென்ன கவலை. அதை யார் இப்பொழுது

இதன் தொடர்ச்சி 20ம் பக்கம் பார்க்க.

செய் நன்றி யறிதலும் திருவள்ளுவரும்.

சாமி சிதம்பரனார் எழுதியது

கட்டுரை 12

செய் நன்றி யறிதல் என்பது பிறர் செய்த நன்மையை மறவாமலிருத்தலாகும். இத்தன்மை யில்லாதவர் பகுத்தறிவுடையவர் என்று கொள்ளத் தகாதவராவர். இவ்வியல்பே மக்களை ஒருவர்க்கொருவர் தொடர்புடையவராகவும், உடன் பிறந்தோராகவும் ஆக்கி வாழச் செய்வதாகும். உதவி இரண்டு வகையாகும். ஒருவர் தமக்கு உதவி செய்தவர்க்குத் தாமும் உதவி செய்வது. அல்லது தாம் உதவி செய்தால் தமக்கு அவர் உதவி செய்வார் என்றெண்ணிச் செய்வது ஒரு வகை. தமக்கு யாதொரு உதவியும் செய்யாதவர்க்கோ அல்லது தமக்கும் உதவி செய்ய வேண்டுமென்று எதிர் பாராமலோ நன்மை செய்வது ஒருவகை. ஆக இரண்டுவகையாகும். இவ்விருவகையிலும் கைம்மாறு கருதாமற் செய்யும் நன்மையே சிறந்ததாகும். அந்நன்மைக்கு எதிர் நன்மை செய்வதென்பது இயலாததும் ஆகும். இதனை (1) "தனக்கு உதவி செய்யாத ஒருவனுக்கு, தான் சென்று உதவி செய்தால் அவ்வுதவிக்கு மண்ணுலகையும், விண்ணுலகையும் மாறாகக்கொடுத்தாலும் ஈடாகாது" என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

நாமறிந்தவரையில் நேரே பார்க்கும்பொருள்களிற் பெரிதாகக் காணப்படுவது இவ்வுலகமாகும். இதனைவிடப் பெரிதாக எண்ணப்படுவது பிறர் செய்த நன்மையாகும். ஒருவன் துன்பமுற்று அதிலிருந்து மீளமுடியாமல் ஆழ்ந்து கிடக்குங்காலத்தில் ஒருவர் உதவி செய்து துன்பத்தினின்றும் மீட்பாராயின் அவ்வுதவி தக்ககாலத்தில் செய்த உதவியாகும். அவ்வுதவியின் அளவை இவ்வளவென்று கூறவொண்ணாது. காணப்படும் இவ்வுலகைவிட மிகவும் பெரிதென்றுதான் கூறலாம். அவ்வுதவி பேருதவியாயினும் சிறு உதவியாயினும் இவ்வுலகை விடப்பெரிதென்றுதான் கூறவேண்டும். இதனை (2) "ஒருவனுக்குத் துன்பம் வந்தகாலத்திற் செய்த நன்மை சிறியதாயிருப்பினும், அது இவ்வுலகை விட மிகவும் பெரியதாகும்" என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

எல்லாமக்களும் தமது வேலைக்குக் கூலியை எதிர் பார்ப்பது இயற்கை. கூலியை எதிர் பாராமல் வேலை செய்வோரைக் காணுதல் அரிது. அதைப்போலவே பிறர்க்கு உதவி செய்கின்றவர்களும் தமக்கு அவரிடத்திலிருந்து பிற்காலத்திலாவது நன்மை கிடைக்கக்கூடுமென்றெண்ணியேசெய்வார்கள். மக்களால் அவ்வாறு நன்மைசெய்வோர் கோடியில் ஒருவர் காண்பதரிது. அத்தகையவர் செய்யும் நன்மையினளவை அளந்தறியவொண்ணததாகும். அதன் அளவைக் கூறவேண்டுமானால் கடலினும் பெரிது என்றுதான் கூறலாம். இதனை (3) "தமக்குக் கிடைக்கும் பயனை ஆராயாமல் செய்த உதவியின் நன்மையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலினும் பெரியதாகும்." என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

ஒருவர் செய்த நன்றி பெரிதாயிருந்தால். அதனை மறவாமலிருக்கவேண்டுமென்றும், ஒருவர் செய்த நன்றி சிறிதாயிருந்தால் அதனை மறப்பதாற் குற்றமில்லையென்றும் நினைப்பது தவறாகும். நன்றியின் பயனை எண்ணிப் பார்க்க வேண்டுமேயன்றி, அதன் சிறுமை பெருமைகளை நோக்குதல் கூடாது. அறிஞர்கள் நன்றியின் பயனைத்தான் ஆராய்ந்தறிவார்கள். நன்றியின் பயனை ஆராய்ந்தறியும் அறிஞர்கள், செய்யப்பட்ட நன்றி சிறிதாயிருப்பினும், அதனை மிகப் பெரிதாக எண்ணுவார்கள். இதனை (4) "நன்றியின் பயனை ஆராய்ந்தறியும் அறிஞர்கள் தினையளவு சிறிய நன்றியைப் பனையளவு பெரிதாகக் கொள்ளுவார்கள்" என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

நல்லோர்களுக்குச் செய்யும் உதவி என்றும் அழியாமற் கல்லின் மேல் வெட்டப்பட்ட எழுத்தைப் போலப் பிற்காலத்திலாயினும் காணும் படி நிலைத்து நிற்கும். செய்ந்நன்றியறியாத தீயவர்களுக்குச் செய்த உதவியோ அப்பொழுதே மறைந்துபோகும். இதற்கு உதாரணம் கூறவேண்டுமானால், நீரின் மேல் எழுதப்படும் எழுத்தைத்தான் கூறலாம். நாம் நீரின்மேல் எழுதுவோமானால் நாமே பார்க்கமுடியாமல் எழுத எழுத அழிந்து கொண்டே வருவது போலத் தீயவர்களுக்கு எவ்வளவு உதவி செய்தாலும் அவர் அதனை மறந்துகொண்டே தீமையைச் செய்து கொண்டேயிருப்பார்கள். ஆகையால் நாம் செய்யும் உதவியின் பெருமை அதன் அளவைப்பொருத்ததன்று. யாருக்குச் செய்கின்றோமோ அவருடைய பெருமையைப் பொருத்ததாகும். நன்றியறிவற்றவர்களுக்கு அளவற்ற உதவிகளை இடைவிடாமற் செய்தாலும், அவ்வுதவி பெருமை யுடையன வாகா. நன்றியறிவுள்ள பெரியோர்களுக்குச் சிறிய உதவியைச் செய்தாலும் அதுமிகவும் பெருமையுடையதாகும். இதனை (5) "உதவியின் அளவுடையதன்று உதவியின் பெருமை. உதவி அதனைப் பெற்றவர்களது பெருமையின் அளவினதாகும்." என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

அறிஞர்களின் கூட்டுறவை பெறவேண்டுவது யாவருக்கும் முதன்மையானதாகும். தவறான நெறியிற் செல்லத்தொடங்கும் போது அறிஞர்கள் அவ்வழியில் உள்ள நன்மை தீமைகளை எடுத்துக்காட்டி நன்னெறியிலுய்விப்பார்கள். ஆகையால் குற்றமற்ற பெரியோர்களின் நட்பை மறவாமலிருத்தல் வேண்டும். தீயவர்களின் நட்பை உடனே மறத்தல்வேண்டும். ஏனெனில் நாம் கெடுவழியிற்போகாமலிருப்பினும் தீயவர்களின் சேர்க்கையால் தீ நெறியிலொழுகும்படி நேர்ந்து விடும். ஆனால் தீயவர்—அதாவது நட்பாகக்கொள்ளத்தகாதவர் நமக்குத் துன்பம் நேர்ந்தகாலத்தில் ஒருநன்றிசெய்து காப்பாற்றியிருப்பாரானால், அவர் தீயவராயினும் அவர் நட்பைத் துறத்தல் அடாது. ஆகவே யாராயிருப்பினும் நன்றி செய்தவர்களின் நட்பை எப்பொழுதும் மறத்தல் நன்றாகாது. இதனை (6) "குற்றமற்றவர்களின் நட்பை மறவாதிருக்க. துன்பம் வந்தகாலத்தில் உதவி செய்தவர்களின் நட்பை நீக்காதிருக்க" என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

நல்லோர்கள், தம்முடைய துன்பத்தை நீக்கியவர்களின் நட்பை எக்காலத்திலும் மறவாமலிருப்பார்கள். இதனை (7) எழுமை பிறந்து இறந்தாலும் நல்லோர் தமது துன்பத்தை நீக்கியவர்களின் நட்பை மறக்கமாட்டார்கள்." என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

ஒருவர் நமக்குச் செய்த நன்றியை மறவாமல் நினைத்துக்கொண்டேயிருப்போமாயின், நாமும் நன்றி செய்யும் குணமுடையவராவோம். ஒருவர் செய்த தீமையை நினைத்துக்கொண்டேயிருப்போமாயின் நாமும், நமக்குத்தீமை செய்த அவருக்கோ அல்லது அவரைச் சேர்ந்தவர்களுக்கோ தீமை செய்வதற்கு எதிர்பார்த்துக்கொண்டேயிருப்போம். ஆகையால் நன்மை செய்யும் எண்ணமுடையவர்கள் பிறர் செய்யும் நன்மைகளை மறவாதிருத்தல் வேண்டும். எண்ணத்தின் படியே செய்கைகளும் நிகழும். ஆகையால் எண்ணத்தில் நல்ல செய்திகளே பதிந்திருத்தல் வேண்டும். இதனை (8) "பிறர் செய்த நன்மையை மறப்பது நன்றன்று. பிறர் செய்த தீமையை அப்பொழுதே மறப்பது நன்று." என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

நமக்கு நன்மை செய்த ஒருவர் பிறகு மனம்மாறுதலடைந்து தீமை செய்யத் தொடங்கினால், நாம் அவர் செய்த நன்றியை மறத்தல் கூடாது. கொலையை யொத்த தீமையைச் செய்தாராயினும், பொறுமையோடு அத்தீமை நம்மிடம் அணுகாமற் காத்துக்கொண்டிருப்பதே பெருந்தன்மை யாகும். தீமை செய்கின்றவர்கள் மீது சினமுண்டாவது யாவருக்கும் இயற்கை. அதனைத் தடுத்துக்கொள்ளுதல் அறிவுடைமையாகும். நமக்கு நன்றி செய்தவர்கள் மீது உண்டாகும் கோபத்தைத் தடுப்பதற்கு அவர் செய்த ஒரு நன்றியையாவது நினைப்பதே யாகும். இதனை (9) "தமக்கு முன் நன்மைசெய்தவர், பின்பு கொலையையொத்த துன்பத்தைச் செய்தாராயினும், அவர் நமக்குச் செய்த ஒரு நன்றியை நினைக்க அவர் செய்த துன்பம் நம் மனத்தை விட்டகலும்." என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

வேறு எந்த நன்மைகளை மறந்தாலும், பிறர் தக்ககாலத்திற் செய்த நன்றியை மட்டிலும் மறத்தல் கூடாது. அவ்வாறு மறக்கின்றவர்களுக்கு எக்காலத்திலும் எவ்வகையிலும் நன்மையுண்டாகாது. இதனை (10) "எந்த நன்மையை அழித்தவர்களுக்கும் தப்பித்துக்கொள்ள வழியுண்டு. ஆனால் செய்ந்நன்றியை மறந்த ஒருவனுக்குத் தப்புவதற்கு வழியில்லை" என்று திருவள்ளுவர் கூறுகிறார். செய்ந்நன்றி மறந்தவர்களை கடவுள் ஒறுப்பது ஒருபுறமிருக்க, இவ்வுலகிலும பலர் அவர்களை உயிரோடு துன்புறுத்துவதையும் காணலாம். செய்ந்நன்றி மறவாத தன்மை நம்மக்களிடமிருந்தால் நாம் இவ்வளவுதுன்புற வேண்டியதில்லை. ஒரு வருக்கொருவர் செய்யும் கொடுமைகள் அகன்றொழியும்

அன்றியும் பண்டைக்கால முதல் பார்ப்பனரல்லாதார்கள் பார்ப்பனர்களுக்குச் செய்து வந்த நன்மையைப் பார்ப்பனர்கள் மறவாமலிருந்தால், சமூககொடுமைக்குக் காரணமாயிருப்பார்களா? பார்ப்பனர்கள் செய்ந்நன்றி கொன்ற மக்களாயிருப்பதனாலன்றோ நாம் எவ்வளவு நன்மை செய்தாலும், நமக்குத் தீமையே செய்யத் தொடங்குகின்றார்கள்? மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பார்கள், ஆதிதிராவிடர் முதலியவர்கள், வேலை செய்து உயர்ந்த வகுப்பினர் என்று சொல்லிக்கொள்வோர் நலமடையச் செய்வதை நினைத்துப் பார்க்கின்ற யார்தான், தாழ்த்தப்பட்டவர்கள் பால் இரக்கங் காட்டமாட்டார்கள்?

அன்றியும் தந்நலங் கருதாது உலகிற்கு நன்மை செய்யத் தோன்றும்,பெரியார்களில் காலஞ்சென்ற டாக்டர் நாயரும், சர். தியாகராயர் முதலியவர்கள் பார்ப்பனரல்லாதார்க்குச் செய்த நன்றி மறப்பதற்குரியதாகுமோ?

இந்நாளில் பார்ப்பனரல்லாதார்க்கு நன்றிசெய்யும், திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கரை மறக்கும் தமிழ் மக்கள் நன்றியறிவுடையவராவார்களா? ஆகவே தமிழ் மக்களாகிய நாம் நமக்கு நன்றி செய்த பெரியார்களை யெல்லாம் மறவாமல் அவர்களைப் பின் பற்றி வாழ்வோமாக.

அம்பாசமுத்திரம் பார்ப்பனரல்லாதார் வாலிபர் கழகம் அநுதாபக்கூட்டம்,

டி கழகத் தலைவர்களும், தாலுகா போர்டு தலைவர்களும் நீதிவாதியவர்களுமாகிய உயர் திரு ராவ் சாகிப் வி. பி. காந்திமதிநாத பிள்ளையவர்கள் தேக வியோக மெய்தினமைக்காக நம் கழகத்தில் 18-3-28 யென்று டி. என். சண்முகசுந்தரம் பிள்ளையவர்கள் தலைமையின் கீழ் ஓர் அநுதாபக் கூட்டம் நடை பெற்றது. அத்தினம் கனம் பிள்ளையவர்கள் பேரில் இயற்றிய இரங்கற்பாக்கள் வாசிக்கப்பட்டன. பார்ப்பனரல்லாதார் வாலிபகழ அங்கத்தினர்கள்:

ஆலயங்கள் இருக்கவேண்டுமா?

'தெய்வங்களின் யோக்கியதை'

கட்டுரை 1. (மார்ச்சு 18உ தொடர்ச்சி)

ராமன்.

நரபலியாகத்தை நான் ஆராயுமுன் இங்கு விஸ்வாமித்திரனின் ஒரு "யோக்கிய தாம்சத்தை"யும், அவனது முழுமூடத்தனத்தையும் ஒரு சிறிது பாருங்கள்: விஸ்வாமித்திரன் தன் சகோதரி மகனுக்காகத் தன் மகனை நரபலி யாகத்திற்குச் சென்று பலியாகவிடச் சொன்னான். இப்படி, நரபலி யாகங்களில் ஒரு 'ரிஷி' யென்பவனுக்கே பெரும் பற்றாம், யாகத்தில் எத்தனை உயிரேயாயினும் எச்சமயத்தும் செலவிடுதல் நல்ல காரியம் என்னும் அபிப்பிராயமும் ஏற்பட்டிருந்திருக்கையில்மற்ற அக்காலவருணாசிரமபார்ப்பனர்களுக்காவது, மன்னர்களுக்காவது அதை அடிக்கடி செய்வதில் எப்படி ஆவல் குறையும்? ஆகவே, பார்ப்பனரும் பார்ப்பன மந்திரிகளும் இப்படிப்பட்ட 'ரிஷி'களும் வைதீக வேள்விகள் செய்து 'பரமேஸ்வரனை திருப்தி செய்து' வந்திருக்கவேண்டியது சர்வசாதாரணமானவிஷயமன்றோ? இந்த விஸ்வாமித்திரன் ஒரு 'ரிஷி'யாம். இவன் பற்றற்றவனாம். அக்காலச் சாமியார்களும், சந்நியாசிகளும் இப்படியிருந்திருந்தால் எவ்வளவு உயிர்க்கொலைகள் நிகழ்ந்திருக்கவேண்டும்! நம திருவள்ளுவர் கொள்கைக்கும் இவனதும்—இவனைப்போன்ற அகங்கொடூர அயோக்கியர்களது கொள்கைக்கும் வித்தியாசம் கண்டீர்களா? நம் ஜஸ்டிஸ் கட்சியிலுள்ள ஒரு சாதாரண இளைஞருக்கு இருக்கக்கூடிய அவ்வளவு பொதுஅறிவேனும் அக்காலத்தியபல 'ரிஷிகள்' என்பருக்கில்லை யென்றாயிற்று. ஆனால் வேள்விப் பலிக்கென கொண்டுபோகப்பட்டவர்களோ அலறிக்கொண்டுதான் செல்வர்! வேள்வி மன்னன் அவர்களைப் பிணித்துக் கட்டிக்கொண்டேகினான். இப்படிப்பட்ட 'தர்மங்களை' ஒவ்வொரு யுகமும நிலைநாட்ட 'அவதாரம்'செய்த 'பரப்ரமமம்' இவை ஒழுங்காக நடப்பதைக்கண்டு சிந்தை அயர்ந்தனவனாய் மேலும்கதைகேட்கிறான். இச்சரித்திரத்தை அவன் 'ஆராபிக்கதைகளை' வாயைமூடிக்கொண்டு கேட்கவேண்டியதைப்போல எண்ணி விட்டானன்றே!

விஸ்வாமித்திரன் தன் சகோதரிமகனுக்குஒரு மந்திரம் சொல்லிவைத்ததன் பயனாய் அவன வைதீகயாகத்தில் வெட்டப்படப்போகும் தருணத்தில் அயோக்கிய—மனுஷக்கறிதின்கிற—(Cannibal-gods) 'தெய்வங்களான' சிவனும், விஷ்ணுவும், பிர்மனும் வந்துவிட்டனர் (அவமானம்!) அம் மந்திரமஇல்லாவிடில்இவர்கட்கு அவனது யாகக் கறி உணவு கிடைத்திருக்கும். இங்கு நோக்கவேண்டியதென்னெனில், இந்த விஸ்வாமித்திரன் முதலிலேயே ஏன் அப்படி மந்திரம் சொல்லி வைத்து அவனையாவது, தனது மகனையாவது அனுப்பியிருக்கக்கூடாது? ஏன் அவனது மக்கள்யாவரும் வேடாகிவிடவேண்டி அனுவசியமாய் சபிக்கவேண்டும்? அவர்களை ஏன் முதலில்போகிறீர்களாவென்று கேட்கவேண்டும்! தான் பெற்றபிள்ளைகளைஎவன் அனுவசியமாய்க்கெடுத்திட்டான்? இதனால் அவனை நான்முழுமூடனென்றால் அதை எந்த அறிவுடையவரேனும் தவறென்பரோ? வாசிப்பவர்களே கேளுங்கள்! கொடுமை! பொல்லாக்கொடுமை!! இப்படிப்பட்டவனே ராமனுக்குக் குருவாய் ஆனான்! ஆகவே அவன் போதித்த போதனைகள் என்ன வாயிருக்கவேண்டுமென்று இதிலிருந்து நீங்கள் நினைத்துக்கொள்ளலாமல்லவா? அக்கால பல 'ரிஷி'களது அக்கிரமப் போதனைகளும் அவற்றின்படி நடந்த அக்கிரம அரசர்களது கொடுமையும் ஒருபுறமிருக்க, வேள்விகளுக்கென அவர் பிள்ளைகளை விற்ற பற்பல பெற்றோர்களது கயமைக்குணத்தையும சற்றே எண்ணிப்பாருங்கள். ராமன் ஆண்ட 11,000 ஆண்டுகளில் ஒரு நிமிஷமேனும் அவன் இம்முறைகளின் அநியாயத்தை யொழிக்க அறிவு கொண்டிலனே. இம்முறைகள் வைதீக வேள்வி நடத்திய அம்பரீஷன் காலத்திற்கு முன்னரே முதற்கொண்டு நடந்தனவாய், ராமன்காலத்திலும் ஒழியாதும, ராமனுக்குப் பின்னரும் ஆங்காங்கு நடந்தும், இப்படியாக புத்த அவதார காலம் வரைக்கும் நடந்துவந்தனவாயன்றோ? இப்போக்கைத் திருத்தவேண்டுமென ராமன் தன காலத்தில் ஒரு நிமிஷமாவது செலவிட்டு, அக்கால அரசர்களுக்கு போதித்திட எண்ணவில்லையென நான் இப்பொழுது புகார் செய்திட்டால் அவன் இன்னும கொள்ளைப் பாடங்களும், கொள்ளைக் கொடுமைகளும் காட்டவல்லவன் என்பதை நான் மேலமேலும் காட்டிக்கொண்டே போகப் போகிறேனே; ஆதலால் இதைப் பெரிது செய்யாமல் மேல் செல்லுகிறேன். அவன் வஸிஷ்டரால் கற்றுக்கொள்ளலாய பாடங்கள் இன்னும் கொடியவென்பதை இங்கு குறிப்பாய் உரைத்திடுவேன். யாகசம்பந்தமாய் விஸ்வாமித்திரனைப்போல பாவ போதனைகள் செய்த ரிஷிகள் பலருளர். 100-க்கு 90-பேர் அப்படியே இருந்தனர் என்பேன். வழி வழிபடியான ரிஷிகள் போக, சமீப காலத்திய வரைக்கொண்டே உதாரணம் காட்டுகிறேன்.

திருஞானசம்பந்தர் 'வேதவேள்வியை நிந்தனை செய்துழல் ஆதமில்லி' என்றும், 'பசு வேட்டெரி யோம்பும் சிறப்பர் வாழ் தில்லை' யென்றும் இப்படிப்பல விடங்களில் பாடுகிறார். "மறைவழக்கமிலாத மாபாவிகள்" என்றும், "வைதிகத்தின்நெறி யொழுகாத அக் கைதவத்தர்" என்றும் இப்படியாகப் பலவிடங்களில் பாடியுள்ளார். மற்ற நாயனாரும் இப்படியே கொள்ளையாகப் பாடியுள்ளனர். ஆழ்வாராதிகளும் இப்படியே கொள்ளையாகப் பாடியுள்ளார்; இன்றைக்கும் இப்படிப்பட்ட போதனை இறங்கிவிட்டது. 'பசு' என்னுல் ஈர் உயிர் முதல் சகல உயிர்களுக்கும் பரிபாஷை போல் பார்ப்பனரால் உபயோகப்படுத்தப்படுவதால் திருஞான சம்பந்தர் அப்பதத்தைப் பிரயோகித்திருக்கிறார், நாம் வைதீக யாக முறைகளைக் கூடாதென்பதால் நாம் அவரது வாக்கியப்படி 'பாவி' களும் 'கைதவத்தர்'களும் ஆயினேம். இன்னும் கூத்தென்னவென்றால், எல்லா வேள்விகளும் 'மறைவழக்கம்' ஆகவும் 'வேதவேள்வி' ஆகவும் உள்ளனவாயிருக்க, நாம் அவற்றைக் கண்டிருக்கிறோமே; நாம் 'பாவிகள்' தானே? இந்தத் திருஞானசம்பந்தனாவது அல்லது எந்த ஆழ்வாராவது வேதத்தில், பௌண்டரீக யாகம் செய்முறையைக் கூறும் பாகத்தையாவது, அல்லது, கொழுப்பெடுத்த அஸ்வமேதங்களையாவது சுபநலமாய் ஸ்வர்ப்பணத்தைக்கொண்டு 'பசு'க்கள் கொன்று யாகம் செய்தலையாவது ஆமை, பாம்பு, ஆடு, மாடு இவற்றைக்கொன்று யாகம்செய்தலையாவது பார்ப்பானுக்கு கூட்டிக் கொடுக்கநேர்கின்ற யாகங்களையாவது செய்யவே கூடாதென்று குறிப்பிட்டுச் சொன்னதுண்டா? இவையும் இவற்றைப்போல ஒரு கோடி ஆபாசமும் இல்லாவிடில் 4-வேதம் ஏது? இவற்றைக் கழித்தால்வேதமபோய் 'மறைவழக்கம்' 'வைதிகம்' ஆகியவை கெடாதா! அன்றியும் பாருங்கள் அஸ்வமேதயாகம் முதலியவை செய்து 'தேவதைகளைத்திருப்தி செய்ய' நம்மால் முடியாவிடினும், தேவலமாக, கும்பகோணப் பார்ப்பானைப்போல் ஒருவர் பௌண்டரீக யாகமாவது நடத்தி எல்லாத் 'தேவதையும் திருப்தி செய்யக்கூடாதா! ஏனெனில் அந்த யாகத்தில் பார்ப்பனச் சபைநடுவில் பார்ப்பார தடியனும், பார்ப்பார தடிச்சியும் வெட்கம் மறந்து 'பத்தியாய்' புணர்ச்சி செய்கையில், வைதீக திருஞானசம்பந்தர் முதலிய 'வேதவேள்வி' நாயனார்களும் 'தேவகாரியம் செய்து வேதம் பயின்று வாழ்கின்ற ஆழ்வார் கூட்டத்தினரும் கிட்டநின்று தாமும் 'பத்தியாய்' வேடிக்கை பார்ப்பார்கள் என்று நான் சொல்லுகிறேன்.

எவரேனும் வேதத்தில் உபனிஷத்பாகம் உளதென்பரேல், அப்பாகமுன்ன பாகங்களை யெல்லாம் இன்றே கொளுத்தி விட்டாலும் கூட, பிர்ம ஞானிகள் மூலமாயும் (திருவள்ளுவர்-ராமகிருஷ்ண-விவேகாநந்தர் முதலியோர் போன்றோர் மூலமாய்) என்றும் தெரிந்துகொள்ளலாம் ஞானிகள் உள்ளவரைக்கும ஞானபாகத்திற்கு எக்காலும் அழிவில்லையாதலால், ஏனையபாகங்களையும் சேர்த்தும் பெரிது செய்து பாடி, வைதீக பெரியார் என்ற ஆசாமிகள் எல்லா ஜனங்களையும மூடர்களாகப் பலவழியாலும் ஆக்கிவைத்திட்டதால்தான் வைதீக யாகங்கள் கண்டிக்கப்படலாகிறது. அக்கால விஸ்வாமித்திரனிடம் ராமன் பாடம் கற்று அமுல் நடத்தியதுபோல, மேற்கண்ட ஆசாமிகளிடமும் எல்லாரும் பாடம்கற்றதால், நாம் இப்படிப்பட்ட 'ஞானிகளை'த்தொலைதூரத்தில் விட்டு விட்டு அவர்களின் அற்ப அறிவுக்கும் கேவல ஆராய்ச்சிக்கும் நாம் பெரிதும் இரங்கத்தான் வேண்டும் என்பதற்கு இன்னும் ஒரு உதாரணம் மட்டும் காட்டிவிடுகிறேன்.

திருஞான சம்பந்தன், "கற்றுங்கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார் வாழ் தில்லை..." என்று கூறுவதையும் அப்பர் "...நிலைமலி வெய்த்தானத்தோ டெத்தானத்தும நிலவு பெருங்கோயில் பல கண்டால் தொ

இதன் தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

இதிகாசங்கள்.

இராமாயணம்—பாலகாண்டம்

6-ஆம் கட்டுரையின் தொடர்ச்சி.

திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுவது.

கடலைக் கடைவதற்குக் காரணம் தேவர்களும் அசுரர்களும் ஒன்று கூடி தாம் சாவாமலிருக்கும் பொருட்டு அமுதம் பெற எண்ணிய எண்ணமே யாம். இவ்வால்மீகி கூற்றுக்கு மாறாகக் கம்பர் புதியதோர் கதை கட்டினர். அதாவது ஓர் வித்தியாதரப்பெண் வைகுந்த மடைந்து திருமகளைப் புகழ, அவர் மகிழ்ந்து கொடுத்த மாலையை வாங்கி வந்து துர்வாச முனியிடம் கொடுக்க, அம்முனி வந்து இந்திரனிடம் கொடுக்க, அவன் யானைத் தலையில் வைக்க, அது கையாலெடுத்து காலால் நசுக்க, அதைக் கண்ட முனி சினந்து 'உனது செல்வமெல்லாம் கடலில் விழ நீ துயருறுக' எனச் சபிக்க, அவ்வாறே இந்திரன் வளங்குன்றி வருந்தக்கண்ட தேவர்களும், சிவபெருமானும், நான்முகனும் திருமாலையடைந்து வேண்ட, அவருத்தரவுப்படி இழந்த செல்வங்களை யடைய கடலைக் கடைந்தனர் என்பதுமாம். இப்புனைகதைக்கு ஆதாரம் வால்மீகி ராமாயணத்தில் ஓரிடத்திலும் கிடையாது. இதனால் கம்பர் கூறுவனவெல்லாம் ஒரு சிலவே வால்மீகி போக்குடன் ஒத்திருப்பதும் மிகப் பல மாறுபட்டிருப்பதும் புலனாம். இதனால் கம்பர் தமது மனம்போலெல்லாம் கதையைக் கொண்டுபோகிறாரே ஒழிய வான்மீகியைப் பின்பற்றுகின்றிலர். இப்புனைகதையைப் படிப்பதால் தமக்குப் பிள்ளைப்பேறு முதலியன கிடைக்குமென மயங்கிப் படிப்போரது அறிவுதானென்னே! கம்பருடைய கவிகளும் மிகவும் அருமையானவைகளாயிருந்தாலும் அவை முழுவதும் பொய்புனை கதைகளாகவேஉள. ஆதலின் அவை முழுவதும் பயனில் சொற்களே ஆகும். அதனால் இராமாயணத்தைப் படித்துப் பாராட்டுவதெல்லாம் பயனில் சொற்பாராட்டுதலேயாம் என்று துணிக.

கடலை கடைந்ததற்குக் காரணம் அதனுள்ளே புகுந்திருந்த இந்திரனுடைய செல்வங்களைத் திரும்பவும் அடைவதே என்றால் அசுரரும் ஓர்புறம் கடைந்தனரென்றல் அறிவிலாரும் அறிந்த கூற்றாகும். ஏனெனில் அசுரர் தேவர்களுக்குப் பிறவிப்பகைவர். ஆதலின் வால்மீகி முனிவர் கூறும் காரணமே அறிவுடையார் ஒப்புமாறுளது. தேவாசுரர்கள் கடலைக்கடைந்தபோது அவர்களுக்குச் சிவபெருமானாவது திருமாலாவது நான்முகனாவது உடனிருந்து உதவியவரல்லர்.

வால்மீகியார் கதைப்படி முதலில் ஓராயிரமாண்டுகள் கடைந்து ஒன்றும் எழவில்லை. அப்போது பாம்பு வாசுகி நஞ்சைக் கக்கிற்று. அந்த ஆலகாலமென்ற நஞ்சால் யாவரும் வருந்தி அலறிச் சிவபெருமானிடம் அடைந்தனர். அப்போது திருமாலும் அங்கே வந்து சிவபெருமானை நோக்கி "சுவாமி! தேவரீர் தேவர்களிலெல்லாம் தலைசிறந்தவர். ஆதலின் முதல் மரியாதை தமக்காம். ஆகலின் தயவுசெய்து நஞ்சையுண்டு காத்தருளும்" என்று வேண்டிப்போயினர். சிவனும் நஞ்சை யுண்டு உலகத்தைக் காத்தார். இவ்வரலாற்றைக்கூறாது நஞ்சும் பிறையும் கடலில் தோன்றின, அவைகளைத் திருமால் மங்கைபங்கனுக்களித்தார் என்று கம்பர் கூறுகிறார். இவை உண்மையை மறைக்கும் தன்மைகளாம். இவர் வைணவ ஆரியரிடம் தயவு பெற வேண்டியமையின் இவ்வாறு மறைத்தனர் போலும். இவரைப் போலவே வால்மீகி மொழிபெயர்ப்பாளராகிய வைணவ பண்டித அநந்தாச்சாரியர் இவ்வரலாற்றை மூலத்தை மட்டும் பதித்து மொழி பெயர்க்காது விட்டிருக்கிறார். இதுவே கம்பர் போக்குக்கும் ஓர் தகுந்த எடுத்துக்காட்டாம். ஆனால் பண்டித நடேசசாஸ்திரியாரும் மன்மதநாத தத்தரும் தங்கள் மொழிபெயர்ப்பில் நன்கு இவ்வரலாற்றை மொழி பெயர்த்துளர்.

கடலிலிருந்தெழுந்த பெண்களில் வாருணி என்பவளைத் தேவர்கள் கைப்பற்றி மயிர்க்கூச்சடைந்து தழுவினர் என்றும் அசுரர் அப்பெண்ணை ஏறெடுத்தும் பார்த்திலர் என்றும் வரலாறு கூறுவதால் தேவர்கள் காமிகளென்பது புலனாகிறது. அசுரர் காமத்தில் கடுபடாதவர் போலும்! சுராபானம் செய்பவர் அதாவது கள்ளைக் (சுரா—கள்) குடிப்பவர்கள் சுரரென்றும் சுராபானம் செய்யாதவர்கள் அசுரரென்றும் பெயர் பெற்றதற்கொப்ப இங்கே சுரர் காமிகளாயிருந்ததையும் காண்கின்றோம்.

அமுத மெழுந்தபோது சுராசுரர் அது பற்றிப் போரிட்டனர். அதுதான் நல்ல சமயமென்று திருமால் மோகினி உருவெடுத்து அதைத் தூக்கிச்சென்றனர். இந்திரன் அசுரரையெல்லாம் கொன்று திருமாலைப்பணிந்து அமுதம் பெற்று வாழ்வடைந்தான். இதனால் திருமால் செய்த வஞ்சகம் புலனாகிறது. முன்னரும் திருமால் இந்திரனுக்காகச் செய்த தீச்செயல்களைக் கண்டோம். இவ்வாறு வஞ்சகச் செயலைத் திருமாலின் மேல் ஆரியர் ஏற்றினர்.

தனது மக்களாகிய அசுரர் மடிந்தமை கண்டு வருந்தி இந்திரனைக் கொல்லத்தகுந்த பிள்ளையை அடையத் திதி தவம் புரிகின்றனள். அதைத்தெரிந்த இந்திரன் அவளையடைந்து அவளுக்குப் பணிவிடை செய்து அவளை ஏமாற்றி அவளோடு உடன் வாழ்கின்றனன். தவம் செய்பவளாகிய திதிக்கு உடம்பு பிடித்தல் முதலிய பணிவிடைகளையும் அவன் செய்தனனாம். திதியும் அதற்கு இணங்கியிருந்தனளாம். அவள் செய்த தவத்தின் மேன்மைதானென்னே! முழுமகனும் இந்திரனைத்தன் உடம்பு பிடித்தல் முதலிய பணிவிடை செய்யத் திதி இடங்கொடுத்தனளே. இவளுடைய பெண் தன்மைதானென்னே? இவன் தன் சக்களத்தி மகன் என்பது பற்றிப் போலும். இத்தகாத செயல்களுக்கு அவள் இடங்கொடுத்தனள். காமியும் வஞ்சகனுமாகிய இந்திரன் கருப்பமுற்றிருக்கும் தனது பெரிய தாயாகிய திதியின் உடல் பிடித்தல் முதலிய பணிவிடை செய்திருக்கும்போது ஒரு நாள் அவள் தலைமாடு கால்மாடு, கால்மாடு தலைமாடாக மாறி படுத்தனளாம். அதனால் அவள் தன் ஒழுக்கம் கெட்டதாம். என்னே இவ்வாரியர் தம் ஒழுக்கத்தைப்பற்றிய கோட்பாடு? இதனை ஒரு பெரிய ஒழுக்கக்கேடாகக்கொள்கின்றனரே!

உடனே இந்திரன் தனது பெரிய தாயாராகிய திதியின் பெண்குறிக்குள்ளே நுழைகிறான். என்னே இப்பாதகனின் இழிசெயல்! தன் பெரியதாயாரின் குறிக்குள்ளே நுழைந்து கருப்பப்பையையடைகிறான். அங்கிருந்த சிசுவை இரக்கமில்லாமல அது அழ அழ ஏழு துண்டுகளாக வெட்டுகிறான். இவ்வாறு சிசுக்கொலை கருவழித்தல் முதலிய மனத்தினாலும் நினைக்க முடியாத பெரும் பாதகங்களை இந்திரன் செய்கின்றான். தலைமாறிப்படுத்ததைப் பெரிய குற்றமாகக் கருதும் ஆரியர் இந்திரனுடைய இவ்விழி செயல்களைக் குற்றமாகக்கருதாது இந்திரனைப்பாராட்டுகின்றனர். இவ்விந்திரனுக்காக நான்முகனும் திருமாலும் பல உதவிகளைச் செய்கின்றனரென்றும கதைகளெழுதுகின்றனர். தனது தந்தைக்கு முதல் மனைவியாகிய திதியின் பெண்குறியை அவள் தூங்கும்போது பார்த்து அதன் வழியாகக் கருப்பையில் நுழைய இப்பாவி இந்திரனின் மனம் எவ்வாறு துணிந்ததோ? இவ்வளவு ஆபாசமான கதைகளையெல்லாம் கம்பர் எவ்வாறு தமது பாடலில் எழுதுவார்? அவர் தமிழ் மகனாதலின் இவைகளையெல்லாம் ஒழித்து சுருக்கமாக ஒரே பாடலில் திதி தவம் செய்வதை உணர்ந்த இந்திரன் அவளை யடைந்து பணிந்திருந்து அவள் வயிற்றிலிருந்த குழந்தையை எழுகூறுகளாக வெட்டினன் என்று கூறிவிடுகிறார். அப்பால் வருமாறு

"கேட்டவாசவன் தன்னைவட்கடிமையிற்கிடைத்து
வாட்டமாதலத் துணர்ந்தவன் வயிற்றுறு மகவை
வீட்டியே யெழு கூறுசெய்திடுதலும் விம்மி
நாட்டநீர்தர மருத்தெனு நாமமு நவின்றான்"

இப்பாற்கடல் கடைந்ததும், திதி தவஞ்செய்ததும், இந்திரன் கருவழித்ததுமாகிய வரலாறெல்லாம் கம்பர் கங்கை வரலாறு கூறுமுன் சோணை நதிக்கரையிலுள்ள ஓர் சோலையில் நடந்ததாகக் கூறுகிறார். இது பெரிய பிழை. முதல் நூலாசிரியராகிய வால்மீகி முனிவரோ இக்கதை விசாலையென்னும் நகரம் உண்டாவதற்கு முன் அங்கிருந்த சோலையில் நடந்ததாகக்கூறுகிறார். இது ஒரு முக்கியமான மாறுபாடே. விசாலா நகரத்திற்கு கங்கையைக் கடந்து கோசிக முனிவரும் வந்தனர். அவ்வூர் மன்னவன் உபசரிக்க அங்கு அன்று தங்கி மறுநாள் மிதிலை கண்டனர் அம்மூவரும் என்று கம்பர் கூறுகிறார். விசாலையைப்பற்றி விசாரித்ததும் அதன் பழைய வரலாறு கூறியது மாகிய ஒன்றும் அவர் கூறிற்றிலர். இவ்வாறு கம்பர் வால்மீகி கூறுவதை மாற்றி மாற்றியும் மறைத்து மறைத்தும் புதுவது புதுவது புனைந்தும் கம்பர் தமது பாடல்களைப்பாடிப்போகின்றனர். இனிமேற் செல்லுதும்.

அருப்புக்கோட்டை.

சுகாதார வார சுயமரியாதை கேஸ்.

21-3-28ல் இக்கேஸ் சப்மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரிகளான பிராமணரல்லாத 11 வாலிபர்கள் சார்பில் மதுரை வக்கீல்கள் ஸ்ரீமான்கள் முத்து திரு மேனியா பிள்ளையவர்களும் சாத்தூரிலிருந்து திருமிகு டி.எஸ். கந்தசாமி முதலியாரும் ஆஜராகி இருந்தார்கள். தாழ்வாரத்தில்கூட இடமில்லை. ஆரம்பத்தில் இனங்காட்டுதல் (Identificotion parade) வைத்துக் கொள்ளப் பட்டது. 11 எதிரிகளுக்கும் தகப்பன் பெயரும் முழு விலாசமும் கொடுத்த ரிப்போட்டரும் பிராசிகியூஷன் முதல் சாக்ஷியுமான ஹெல்த் இன்ஸ்பெக்டர் 2 எதிரிகளைத் தவிர மற்றவர்களைக் காட்ட முடியவில்லை. அவருடைய பியூன் எதிரிகளில் 5 பேரையும் எதிரியல்லாத ஒருவரையும் காட்டினர். கூட்டத்துக்கு அக்கிராசனராக இருந்து கொண்ட சாஸ்திரிகள் 1 வது எதிரியை மாத்திரம்காட்டினர். பாட்டு பாடிய பாகவதர் 2 எதிரிகளைக் காட்டத்தான் முடிந்தது. மற்ற 3 சாட்சிகள் இரண்டொரு எதிரிகளை மாத்திரம் காட்டினார்கள். இதில் முக்கிய விஷேயம் கடைசி 2 சாட்சிகள் இக்கேசுக்கு முக்கிய காரணஸ்தர் என ரிப்போர்ட்டில் சொல்லப்பட்ட ஸ்ரீமான் சோமசுந்தரம் செட்டியாரை காட்டக்கூடவில்லை. ஆனால் கூட்டத்தில் கலந்திருந்தவர்கள் எனவும் 11 எதிரிகளில் கட்டுப் பட்டவரெனவும் கருதப்பட்ட சில எதிரிகளை மாத்திரம் காட்டினார்கள், கேஸ் போலீஸ் சார்ஜ் ஆனபடியால் நடபடிக்கைக்கு பிராசிக்யூட்டிங் இன்ஸ்பெக்டர் ஆஜராகாமல் இருந்ததால் 2-4-28 உ வாய்தா போடப்பட்டிருக்கிறது.

பார்ப்பனீய மோட்ச சாதனம்.

கட்டுரை 1.

ஒன்றிலொன்று அதிகமோசமாக பிராமணர் உண்டாக்கிய சரியை, கிரியை, யோகம், என்னும் மூன்றையும் சொல்லிய மூன்று சூத்திரங்களில் முதலாம் சூத்திரத்திலுள்ளசரியையை இதில்எடுத்துக்காட்டுகிறோம்.

முதலாம் சூத்திரம்.—

"விளக்கிடல் தீர்த்தம் வெண்ணீருத்திராட்சம் புத்திரன்பார்ப்பான்புராணம் கீர்த்தனை-அர்ச்சனை அட்சரம அறங்கள் பலவே"

அதாவது திருவிளக்கு எற்றல்; 2. புண்ணிய ஸ்தல யாத்திரை; 3. தீர்த்தமாடல்; 4. விபூதி தரித்தல்; 5. உருத்திராட்சமணிதல்; 6. நற்புத்திரனை சார்ந்திருத்தல்; 7. பிராமணநேசம்; 8. புராணங்கேட்டல்; 9. நாமகீர்த்தனம் பாடல்; 10. சிவார்ச்சனை செய்தல்; 11. பஞ்சாட்சரம் ஜபித்தல்; 12. அறம் முப்பத்திரண்டு ஆகிய இவைகளில் ஒவ்வொன்றும் மோட்ச சாதனமாம். முதலாவது, விளக்கேற்றதலுக்கு சொல்லப்பட்ட பலனைப்பற்றி ஆராய்வோம்.

விளக்கேற்றல்.

"வரமளிக்கும் தண்டலையார் திருக்கோவில் உட்புகுந்து வலமாய் வந்தே
ஒரு விளக்காயினும் பசுவின் நெய்யுடன்தாமரை நூலக்கொணடொளிரவைத்தால்
கருவழிக்கும் பிறப்புமில்லை இறப்புமில்லை கயிலாயம் காணியாகும்" (தண்டலையார் சதகம்.)

இதன் பொருள் "சிவனுடைய கோவிலுட்போய், பிரதட்சணம் வந்து, ஒரு விளக்கேன்கிலும் பசுவின் நெய்யிலே தாமரை நூலிட்டு, எற்றிவைத்தால் கருவிலே உண்டாகும் பிறப்பு மற்று, இறப்புமற்று, சிவபதவியாகிய கயிலாயம் அவனுக்குக் காணியாட்சியாயிருக்கும். அவனைப் பிடித்த துன்பம் எல்லாம்தீரும்" என்பதே.

பூர்வகாலத்தில் வேதாரணியம் என்கிற சிவஸ்தலத்திலே ஒரு நாள் பாதிராத்திரி நேரத்தில் சந்நிதானத்திலிருந்த விளக்கு அணைகிற தருணத்தில், அதிலிருந்த நெய்யைக் குடிக்கப்போன ஒருஎலியானது தணிகிற திரியை தற்செயலாய் இழுந்துவிட, அதினால் அணையப்போன விளக்கு துலக்கமாய் எரிந்தது. அதுகண்டு சிவன் சந்தோஷப்பட்டு, அந்த எலிக்குத் தரிசனையாகி, அது மாவெலிச் சக்ரவர்த்தியாய்ப் பிறந்து, பரலோகம், பூலோகம், பாதாளலோகம் என்னும் மூன்று லோகத்தையும் ஆள வரம் கொடுத்தார். அந்தப்படி அந்த எலியானது மாவெலிச் சக்கரவர்த்தியாய், பூமியிலே பிறந்து, மூன்று லோகத்தையும் ஆண்டது என்கிற புராணக்கதையுண்டு.

தெளிதல்.

இதை வாசிக்கிற நண்பர்களே! நெய் திருடப்போன எலிக்கு வந்தயோகத்தைப் பார்ப்பீர்களாக. அந்ததிருட்டு எலி தணிகிற திரியை எரியப்பண்ணினதினால், மாவெலிச் சக்ரவர்த்தி என்னும் பெரிய ராஜாவாய்ப் பிறந்து, மூன்று லோகத்தையும் ஆண்டது மெய்யானால், அந்த விளக்கை ஏற்றிவைத்தவனுக்கு வந்த பலன் என்னவோ? அவன் என்னவாய்ப்பிறந்து, எந்த உலகத்தை ஆண்டானோ? அவனுக்கு அப்படி ஒன்றும் இல்லையென்றால், சிவன் பாதகம்பண்ணினார் போலாயிற்றே; ஏனென்றால், தம்முடைய சந்நிதி பிரகாசித்திருக்க விளக்கேற்றிவைத்தவனை விட்டுவிட்டு, அந்த விளக்கிலிருக்கிற நெய்யைக்குடித்துப்போகவந்த எலியை இத்தனை பாக்கியமுள்ள ராஜாவாக்கிவைத்தாரே! இதெப்படிப்பட்ட அநீதம்? இது தேவநீதிக்கு ஒத்திருக்குமோ? பின்னையும், ஒருவிளக்கு வைக்கிறவன் பிறப்பு இறப்புமற்று, கயிலாயம் அடைவானேயானால், அநேகம் விளக்கு வைக்கிறவனுக்கு எவ்வளவு அதிக பலன் உண்டாகவேணும்? இப்படிப்பட்ட காரியத்தை நம்புகிறவர்கள் தங்கள் மனதின்படி சகல அநீதங்களையும் செய்து நியாயத்தைப்புரட்டி, பாதகம் பண்ணி, கடைசியில் ஒரு காசுக்கு நெய்யைவாங்கி, ஒரு விக்கிரகத்தின் முன்னே ஒரு விளக்கு எற்றி வைத்துவிட்டு, தாங்கள் செய்த சகல பாவமும் தொலைந்ததென்று கவலையற்றிருப்பார்களே? ஆனதினாலே மேற்சொல்லிய அற்ப நெய்யினாலும், திரியினாலும் எற்றப்பட்ட விளக்கினாலே வரும் மோட்சம் எப்படிப்பட்டதாயிருக்கும்! இந்தப்பிரகாரமாக மோட்சம் அடையலாம் என்று நினைக்கிற ஒருவனுக்கு நல்லொழுக்கம் உண்டாகுமா? மேலும் மோட்சத்தைக் குறித்து ஒருவனுக்கு அற்பமென்று நினைப்பு உண்டானால் அவனே அற்பனாகி ஆண்டவருக்குக் கீழ்ப்படியாமல் சகல பாவங்களையும் செய்வானே செய்யமாட்டானே!

புண்ணிய ஸ்தலம்.

"தரிசிகைப்பிரதரிசி ஜநநா கமலாலயே காசியாந்து மாணா முக்திஸ்மரணா-அருணாசலம் அதலாபுத்திர சங்கதௌ"

அதாவது அப்பிரதசியாகிய சிதம்பரத்தைத் தரிசிக்கக, மலாலயமாகிய திருவாரூரிலே பிறக்க,காசியிலிறக்க, அருணாசலத்தை நினைக்க முத்தியாம். மேலும் இதற்கிசைவாக அருணாசல புராணம், அருணைமாநகர்ச்சருக்கம், 45-ம் பாட்டில் "தில்லையைக்காண, காசியிலிறக்கச், சிறக்குமாரூர்தனில் பிறக்க, எல்லையில் பெருமை அருணையை நினைக்க, எய்தலாமுத்தி யென்றுரைத்தீர்" என்கின்றது.

மகாபாவங்களைச்செய்த ஒரு செட்டியானவன் திருக்குற்றாலத்திற்கு வந்து, தீர்த்தமாடாமலும், சிவனை வணங்காமலும், மூன்று நாள் அங்கிருந்து செட்டிமாத்திரம் பண்ணிக்கொண்டு போனான். அதுநிமித்தம் அவன் மரணகாலத்திலே முத்தி அடைந்தானாம். ஆனதினால் அந்தஸ்தலத்திலே மூன்று நாள் வசிக்கிறவர்கள் முத்தி அடையலாமென்று சொல்லுகிறார்கள்.

மேலும், மகாபாவங்களைச்செய்திருந்த ஒருவன் மரணமடைய யமதூதர் அவனைப்பிடித்துக்கொண்டுபோய்க் கட்டி அடித்தார்கள். அப்பொழுது அவன் அறியாமையாய்க் 'குற்றாலம்' என்றான். உடனே சிவகணங்கள் வந்து யமதூதரைத்துரத்திவிட்டு, அவனை விமானத்திலேற்றிப்போய், கயிலாயத்திலே வைத்தார்கள் என்று தாமிரபரணி மகத்துவத்திலே எழுதியிருக்கிறது.

கோகருணத்திலே சிவராத்திரித்திருவிழாநடந்தபொழுது, ஒரு தூர்த்தனானவன் இரண்டு தாசிகளைக்கூட்டிககொண்டு வீணையும் கையிலேந்திக்கொண்டு உல்லாசமாய் அங்கேபோய், சற்றாகிலும் 'சிவசிந்தனை'யில்லாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டு, அந்த இரண்டு வேசிகளுடனேயும் பொழுதுபோக்கிக்கொண்டிருந்தான். அன்றிரவிலே பரமேஸ்வரனும் பார்வதியும் நகர்சோதனை பார்க்கவந்தார்கள். பார்வதி சிவனுடனே "இத்தனை ஜனத்திரளுக்கும் கயிலாயத்திலே இடமுண்டோ" என்றாள் அதற்குச்சிவன் "இவர்களெல்லாரும் அங்கேவரமாட்டார்கள். இதோ இரண்டு வேசிகளோடே திரிகிறானே, இவன் மாத்திரம் வருவான்" என்றார். என்று பிரமோத்தரகாண்டம் என்ற நூலில் எழுதப்பட்டிருக்கிறது.

வாசகர்களே! சிதம்பரத்தைத் தரிசித்தவர்களும், திருவாரூரில் பிறந்தவர்களும், காசியில் இறந்தவர்களும், திருக்குற்றாலத்திலே மூன்று நாள் தங்கினவர்களும், கோகருணத்திலே வேடிக்கைபார்க்கப்போனவர்களும், இலகுவாய் முத்தி அடைகிற அதிசயத்தைப்பார்க்கிலும், ஒரு வருத்தமுமில்லாமல் அருணாசலம், அல்லது குற்றாலமென்று நினைத்தவர்கள் எல்லாரும் மோட்சத்திற்குப்போகிறார்கள் என்று இங்கே சொல்லப்பட்டது அதிசயத்திலும் அதிசயம்.

அப்படியானால் சகல அநீதங்களையும் செய்து, சாகிறபோது அருணாசலம், அல்லது குற்றாலம் என்று ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லிவிட்டு மோட்சத்திறகுப்போகலாம் என்று கவலை அற்றிருக்கலாமே.

இந்தப்பிரகாரமாகவே சகல ஸ்தல புராணங்களிலும், அந்தந்த ஸ்தலங்களைச் சிரேஷ்டமாய்ச் சொல்லியிருக்கிறவைகள் பார்ப்பனர்களின் கட்டுக்கதைகள் என்பதை அறியுங்கள். மோசம் போகாதீர்கள். நாம் தெளிவுறவேண்டி தமிழ் மெய்யடியார்கள் நூல்களில் வெளியிட்டு எச்சரித்திருக்கிறதில் சிலவற்றை பிதனடியில் காண்பித்திருக்கிறது.

தாயுமானவர்:— "எங்கணும் நீ யென்றாலிருந்தபடி எய்தாமல்
அங்குமிங்கு மென்றலைய லாமோ பராபரமே"

சிவவாக்கியம்:— "காணவேணு மென்றுநீர் கடல்மலைக ளேறுவீர்
ஆணவம தல்லவோ அறிவில்லாத மூடர்காள்
வேணுமென்று சர்பாத மெய்யுளே விளங்கினால்
காணலாகும் நாதனைக் கடந்து நின்ற சோதியை"

"ஓடியோடி யோடி யோடி உட்கலந்த சோதியை
நாடி நாடி நாடி நாடி நாள்களும் கழிந்துபோய்
வாடி வாடி வாடி வாடி மாண்டுபோன மானிடர்
கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே"

3—தீர்த்தம்.

அருணாசல புராணம், அருணைமாநகர் சருக்கம் 9-ம் பாட்டு.

"காசியெனு மிருதலமக் கயிலையிலும் சிறப்புளது கங்கை தீர்த்தம்
வீசுதிரைக் கொழுந்தோட்டம் பாகத்திக்கு-வேரோட்டிவிழுது மோட்டும்
மாசினுட லதிலிறந்தால் மரமேனும் விலங்கேனு மனிதரேனும்
ஈசருளுபதேசம் செவிப்புகலால் இறைவன்னை இருக்கலாகும்".

இதன் பொருள்:—காசி என்கிற விசேஷித்த ஸ்தலம் உயர்ந்த கயிலாயத்தினும் சிறப்பு உடையது. அங்கே கங்காநதி உண்டானது. அந்த கங்கையினுடைய அலை பாகதிக்கு வேரோட்டி விழுதுமாகத் துணை செய்யும். மாசாகிய மலபாண்ட சரீரங்கள் அந்த ஸ்தலத்தில் இறந்தால் மரங்கள், மிருகங்கள், மனிதர் முதலான ஜீவராசிகளுக்கும் சிவன் எழுந்தருளிவந்து, செவிவழியாய் உபதேசம்பண்ணி ரட்சிப்பதினால், அந்த ஜீவராசிகள் இறைவனைப்போலே சொரூபத்தை அடைந்திருக்கும் என்பதே.

விருத்தாசல புராணம், தீர்த்த சருக்கம் 3—ம் பாட்டு

"மணிமுத்தாற்றிற் காற்றணைந்தமனிதர் பறவை மிருகங்கள்
தணியக்கிருமி கீடங்கள் தருப்புற் கொடிகள் சாசரங்கள்
அணியத்தேவருலகாளு மாற்றிற்படிவார் தமக்கன்பும்
துணிவும் தவமும் பேரறிவும் தோன்றும் தொழும்புமுளதாமால்"

இதன் பொருள்:—மணி முத்தா நதி என்று சொல்லப்பட்ட வெள்ளாற்றில் விழுந்த காற்றால் நீண்டப்பெற்ற மனிதர், பறவை, மிருகங்கள், பூச்சிகள், புழுக்கள், மரங்கள், புல்லுகள், கொடிகள் மற்றும் சாசரங்கள் எல்லாம் தேவலோகம்

இதன் தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க

பாலிய விவாகம்.

குழந்தை:— என்னடி அம்மா நேற்று என் கழுத்தில் போட்டிருந்த நகையைக் காணோமே! அதை யார் எடுத்தார்கள்?

தாயார்:— அடி பாவி அது நகையல்ல; தாலி. அதை ராத்திரி அறுத்தாய்விட்டது

குழந்தை:— எனக்குத் தெரியவில்லையே.

தாயார்:— ராத்திரி 11-மணி இருக்கும் அப்போது தூங்கிவிருந்து கொண்டிருந்தாய் ஆகையால் உனக்குத் தெரியவில்லை.

குழந்தை:— அதை ஏன் அறுத்தார்கள்,

தாயார்:— அத் தாலியைக்கட்டின உன் புருஷன் இறந்துபோய்விட்டானல்லவா அதனால் அறுத்துவிட்டார்கள்.

குழந்தை:— அவன் போனால் போகட்டுமே. வேறுயாரையாவது கட்டச்சொல்லுவது தானே. அதையேன் எனக்குத் தெரியாமல் கழட்டிக்கொண்டாய். அதை மறுபடியும் என் கழுத்தில் போட்டால்தான் சாப்பிடுவேன், ஊ! ஊ!! ஊ!!!

திருச்சி மருத்துவர் சங்கம்.

திருச்சி வாணகேரி மேட்டுத்தெருவு க. பிச்சைமுத்து பண்டிதர் வைத்திய சாலையில் 24-3-28-உ மாலை 6-மணிக்கு திரு. சி. அய்யாக்கண்ணு தலைமையில் கூடிற்று. தலைவர் சங்க விஷயமாகவும் கல்வி விஷயமாகவும் சொற்பொழிவு நிகழ்த்தியபின் அடியில் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிர்மானிக்கப்பட்டன.

(1) அரசாங்கத்தார் காலியாயிருக்கும் சட்ட மெம்பர் பதவியை பார்ப்பனரல்லாதார் ஒருவருக்கு கொடுக்கும்படி கவர்ன்மெண்டாரை இச் சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

(2) சைமன் கமிஷனுக்கு தென்னிந்திய மருத்துவர்களும் வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுத்து நமது நிலைமையை நன்றாய் எடுத்துரைத்ததற்காக இச்சங்கம் நன்றி செலுத்துகிறது.

(3) நமது 3-வது மகாநாட்டை கூடிய சீக்கிரம் கூட்டும்படி நமது தலைவர்களையும் சங்கங்களையும் கேட்டுக்கொள்ளுகிறதுடன் இந்த வைத்திய விஷயமாய் மருத்துவர்முன்னேற்ற விஷயமாயும் ஒரு பத்திரிகை நடத்தும்படி இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

(4) அகில இந்திய மருத்துவர்கள் நமது வைக்கம் வீரரின் ஆற்றலில் நடந்துவரும் 'குடி அரசு' 'திராவிடன்' பத்திரிகைகளை வாங்கிப்படித்து உண்மையை உணர்ந்து 11-லட்சம் மருத்துவர்களும் வைக்கம் வீரரின் தலைமையின் கீழ் சத்தியாக்கிரகம் செய்து அயோக்கியத்தனத்தையும் கொடுமையையும் உயர்வு தாழ்வையும் இந்தியாவைவிட்டு விரட்டி சுயமரியாதையை நிலைநாட்டும்படி இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

வந்திருந்தவர்களுக்கு சந்தன தாம்பூலம் வழங்கப்பெற்று சுமார் 9-மணிக்கு கூட்டம் கலைந்தது.

க. பிச்சைமுத்து

அரசாங்க உத்தியோகங்களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்.

(குமரன்)

கீழ்க்காணும் புள்ளி விவரங்களை வாசகர்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு சென்னையரசாங்க அறிக்கையினின்றும் எடுத்துப் பிரசுரிக்கின்றோம். இதினின்றும் 1925 ஏப்ரல் மாதம் முதல் தேதியிலும், 1926 ஏப்ரல் மாதம் முதல் தேதியிலும், 1927 ஏப்ரல் மாதம் முதல் தேதியிலும் சென்னை அரசாங்க ஊழியர்களில் எந்தெந்த வகுப்பார்கள் எத்தனை எத்தனை பேர்களாக இருந்தனரென்பது விளங்கும். 1926-ம் ஆண்டுப் புள்ளி விவரத்தில் சென்னை உயர்தர நீதி மன்றத்திலும் ஜில்லாக் கோர்ட்டுகளிலுமுள்ள உத்தியோகஸ்தர்களின் விவரம் சேர்க்கப்படவில்லை யென்பது கவனிக்கத்தக்கது. விவரம் வருமாறு:—

உயர்தர உத்தியோகஸ்தர்கள்.

	1925	1926	1927
பார்ப்பனர்கள் ...	594	402	599
பார்ப்பனரல்லாதார் ...	280	215	282
இந்தியக் கிறிஸ்தவர் ...	125	102	120
மகமதியர் ...	59	53	64
ஆசியக்காரரல்லாதாரும் ஆங்கிலோ இந்தியரும்	481	408	543
தாழ்த்தப்பட்ட இனத்தார் ...	...	...	...
ஏனையோர் ...	7	16	17

கீழ்தர உத்தியோகஸ்தர்கள்.

மாதம் ஒன்றுக்கு ரூ **100** க்கு மேல் சம்பளம்

	1925	1926	1927
பார்ப்பனர்கள் ...	2769	3409	3627
பார்ப்பனரல்லாதார் ...	1366	1901	1995
இந்தியக் கிறிஸ்தவர்கள் ...	365	456	506
மகமதியர் ...	254	323	331
ஐரோப்பியரும் ஆங்கிலோ இந்தியரும்	399	456	506
தாழ்த்தப்பட்ட இனத்தார் ...	1	2	5
ஏனையோர் ...	7	12	16

கீழ்தர உத்தியோகஸ்தர்கள்.

மாதம் ஒன்றுக்கு ரூ **35** முதல் ரூ **100** வரை சம்பளம்

	1925	1926	1927
பார்ப்பனர் ...	10984	8197	10220
பார்ப்பனரல்லாதார் ...	7003	5238	7367
இந்தியக் கிறிஸ்தவர். ...	1135	643	1141
மகமதியர் ...	1479	1439	1721
ஐரோப்பியரும் ஆங்கிலோ இந்தியரும்	219	106	93
தாழ்த்தப்பட்ட இனத்தார் ...	41	54	56
ஏனையோர் ...	34	17	41

கீழ்தர உத்தியோகஸ்தர்கள்

மாதம் ஒன்றுக்கு ரூ **35** க்கு குறைந்த சம்பளம்

	1925	1926	1927
பார்ப்பனர் ...	1810	928	1238
பார்ப்பனரல்லாதார் ...	37125	29357	35314
இந்தியக் கிறிஸ்தவர் ...	2386	1888	2220
மகமதியர் ...	11817	9445	19119
ஐரோப்பியரும் ஆங்கிலோ இந்தியரும்	23	33	55
தாழ்த்தப்பட்ட இனத்தார் ...	1198	1175	1329
ஏனையோர் ...	17	198	225

அலசந்தாபுரத்தில் நடத்தப்பட்ட ஓர் சுயமரியாதைச் சடங்கு.

ஜோலார்பேட்டைக்குச் சுமார் 11 மைல் தூரத்தில் உள்ள அலசந்தாபுரம் கிராமமானது நான்கு பக்கங்களிலும் பல குன்றுகளாலும், காடுகளாலும் சூழப்பட்ட மேட்டுப் பாங்கான ஒரு உள் நாட்டுக் கிராமம். இக்கிராமத்திற்கு ரோட்டு வசதிகளோ வண்டி வசதிகளோ இல்லாததால் அரசியல் புரட்டுக்காரர்களோ மற்றவர்களோ அடிக்கடி வரமுடியாமலும், வந்தாலும் ஜனங்களைச் சரியான வழியில் திருப்ப முடியாமலும் போய் விட்டதால் அலசந்தாபுரத்து கிராமவாசிகள் வருணாசிரமக் கொடுமைகளையும், பார்ப்பனீயச் சுயநல சூழ்ச்சிகளையும் அறிய முடியாமல், பார்ப்பனர்கள் இட்டதே கட்டளை, சொன்னதே வேதம், என்று பழயகாருடைய பழக்கவழக்கங்களையும் மதக்கோட்பாடுகளையும், குருட்டுத்தனமாய் நம்பி மோசம் போய்க் கொண்டுவந்தனர். நற்காலமாக பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் சண்டை தோன்றிய பின்னர் ஸ்ரீமான் நாயக்கர் அவர்களாலும் அவர் 'குடி அரசு' பத்திரிகையாலும் தென்னாடு விழிப்படைந்து அரசியல், சமூகம், சமயம், எல்லாவற்றிலும் சீர்திருத்தம் பெற்றுவரும் போது அந்த சண்டமாருதக் காற்று அலசந்தாபுரத்திலும் வீச ஆரம்பித்து விட்டது. அலசந்தாபுரம் மட்டும் அல்ல, அதைச் சுற்றிலும் உள்ள ஒன்பது கிராமங்கள் வரையில் இதனால் சுயமரியாதை அடைந்து விட்டன என்றே கூறலாம்.

அலசந்தாபுரத்தில் பெரிய பிரபல தனவந்தராயும், மிராசுதாரராயும், வைதீகத்தில் அனுபோகமும் பற்றும் கொண்ட தர்மிஷ்டராயும், பார்ப்பனீயமே மோட்ச சாதனம் என்று நம்பியிருந்தவராயும், தெய்வ பக்தி, பெரியோர் பக்தியுள்ளவராயும் சுமார் 55 வயதுள்ளவராயும் உள்ள ஸ்ரீமான் கந்தசாமிக் கவுண்டர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர்களுக்குச் சென்ற வருஷந்தான் முதன் முதலில் அம்பலூர் ஸ்ரீமான் கரியக் கவுண்டர் அவர்களால் சுயமரியாதை உபதேசம் செய்யப்பட்டு 'குடி அரசு' தர்ம சாஸ்திரமும் சிபார்சு செய்யப்பட்டது. அன்று முதல் ஸ்ரீமான் கந்தசாமிக் கவுண்டரவர்கள் 'குடி அரசு' பத்திரிகையை படிக்கஆரம்பித்தார். படிக்கப்படிக்கத் தாம் இதுவரையில் நம்பி ஆயுட்கால மெல்லாம் ஏமாந்து செய்துவந்த மத சம்பந்தமான சடங்கு பழக்க வழக்கங்களெல்லாம் பார்ப்பனர் சூட்சியே என்றுணர ஆரம்பித்தார். பின்னர் 'திராவிடன்' 'ஜஸ்டிஸ்' போன்ற சீர்திருத்த சமத்துவப் பத்திரிகைகளையும் வரவழைத்துப் படிக்கவும் கேட்கவும் செய்தார். தம் புத்தியில் தப்பென்று பட்டதை யெல்லாம் ஆயுட்காலமெல்லாம் அநாவசியமாய் செய்ததை எல்லாம் உணர்ந்து வருந்தி ஒவ்வொன்றாய் சீர்திருத்தி சுயமரியாதைத் துறையில் இறங்கி கடனாற்ற ஆரம்பித்தார். தாம் கட்டிய பிள்ளையார் கோவிலில் ஜாதி உயர்வு கருதியே அமர்த்தப்பட்ட பார்ப்பனப் பூசாரியை விலக்கி சுயமரியாதையும் உயர் குணமும் சமத்துவசகோதரத்துவமும் உள்ள ஒரு பார்ப்பனரல்லாதாரையே அக்கோவிலுக்குப் பூஜை செய்ய நியமித்தனர். தம்மால் செய்யப்பட்டு வந்த சிரார்த்த திதி காரியங்களுக்கும் உயர்வு கருதி பார்ப்பனர்களைக் கூப்பிட்டுக் கொடுக்கும் அநியாய வழக்கத்தை அடியுடன் நிறுத்தி ஏழைகளாய் உள்ள எல்லா மக்களையும் சமமாய் நினைத்து தர்மம் வழங்கிவந்தார். தம்முடைய செல்வாக்கிற்குட்பட்ட பந்துமித்திரர் அனைவர்களுக்கும் தாம் உணர்ந்த சுயமரியாதையை உபதேசித்து தம்மைப்போல் அனுஷ்டானத்தில் நடக்கும்படியாய் சீர்திருத்தி வந்தார். இப்படிப்பட்ட உத்தமருக்கு காலனும் கடுகி வர எண்ணியிருக்கும் உணர்ச்சி தோன்றி விட்டது.

ஸ்ரீமான் கந்தசாமிக் கவுண்டர் தமது மூத்த பிள்ளையாகிய ஸ்ரீ சிரங்க கவுண்டரை தம் பக்கத்தழைத்து உற்றார் உறவினர்கள் சூழ்ந்திருக்கும் போது, அவர் சொன்னதாவது;—"நான் கூடிய சீக்கிரம் இம்மண்ணுலகைத் துறக்க வேண்டிவருமாதலால் நான் இறந்தவுடன் எல்லோரும் விசனப்படாமல் சந்தோஷமாக விருந்து செய்து சாப்பிட்டுவிட்டு ஆடம்பரமில்லாமல் சாதாரணமாய் என் சரீரத்தை எடுத்துக்கொண்டு போய் குறிப்பிட்ட இடத்தில் (வழக்கத்திற்கு விரோதமானதும்) சமாதி செய்யவேண்டும். கருமாந்தரம் வரையில் எனக்காக யாரும் துக்கப்படவேகூடாது. என் பெயரைச்சொல்லி என்னுடைய மோட்சத்திற்காக மதசடங்குகளின் பேரால் ஒரு பைசா கூட அயோக்கியப் பார்ப்பனர்களுக்குத் தானமாகக்கொடுக்கப்படாது. அவர்களை இதற்காக வரவழைத்து என் கருமங்களைச் செய்யவுங்கூடாது. இதோ இருக்கிறது ரூ 1000 (படுக்கையிலிருந்து ரூ1000 ரொக்கமாக எடுத்து பிள்ளையிடம் கொடுக்கின்றார்) இந்த ஆயிரம் ரூபாயைக் கொண்டு என்னுடைய கரும காரியங்களை சுயமரியாதையுள்ள பார்ப்பனரல்லாதார்களையும் சுயமரியாதைத் தலைவராகிய ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களையும்கொண்டு நடத்தி வந்தவர்களுக்கெல்லாம் சமபந்தி போஜனமளித்து தானம் வழங்கி மேற்படி தலைவர்களைக்கொண்டு சுயமரியாதைப் பிரசங்கக் காலட்சேபமும் செய்விக்கவேண்டும். "குடி அரசு" "திராவிடன்" போன்ற பத்திரிகைகளையும் ஆதரித்து அதன்படி நடந்து வரவேண்டும்" என்பதாகச்சொன்னார். காலனும் சுயமரியாதை வீரர் கந்தசாமி கவுண்டரின் உயிரினைக் கவர்ந்து கொண்டுபோயினன். என்செய்வது, சுயமரியாதை அடைவதில் கடவுளுக்கும் பொறாமை போலிருக்கிறது.



பார்ப்பனீயத்தை அறவே ஒழித்து தாம் இறந்த பிறகும் தமக்குச் செய்யவேண்டிய சடங்குகளை பார்ப்பனரல்லாதாரைக் கொண்டே செய்யும் படிக்கும் அவர்களுக்கே சகல தான தர்மங்களும் செய்ய வேண்டுமென்றும் சாசனம் எழுதி அதற்காக ரூ. 1000 தம் குமாரரிடம் கொடுத்துவிட்டு காலஞ்சென்ற அலசந்தாபுரம் சுயமரியாதை வீரர்

திருவாளர் கந்தசாமிக் கவுண்டர்.

உடனே பந்து மித்திரர்களெல்லாம் காலஞ்சென்றவரின் கட்டளையை மீறுவதற்கஞ்சி பயபக்தியுடன் அவர் சொன்னபடி பெரிய விருந்து செய்து எல்லோரும் சாப்பிட்டு முடிந்த பின் மாலை 5 மணிக்குச் சந்தோஷமாகச் சரீரத்தை எடுத்துக்கொண்டுபோய் குறிப்பிட்ட இடத்தில் சமாதி வைத்து வீடு திரும்பினர். 20—3—28ல செவ்வாய்க் கிழமையன்று மோட்ச தீபம் (கருமாதி அல்லது கருமாந்திரம்) என்றும், அன்று சடங்குகள் கிரியைகள் எல்லாம் பார்ப்பனரல்லாதார்களாலேயே செய்விக்கப்பட்டு அவர்களுக்கே தானதர்மங்கள் வழங்கப்படுமென்றும், காலஞ்சென்றவரின் புதல்வராகிய ஸ்ரீமான் சிரங்க கவுண்டர் அவர்களால் பறைசாற்றுவிக்கப்பட்டு பல கிராமங்களுக்கும் அறிக்கைகள் வெளியிடப்பட்டன. அன்று மாலையே சுயமரியாதைத் தலைவர்களாகிய ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர்முதலியவர்களால் பிரசங்கம் செய்யவும் ஏற்பாடு செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இவற்றையெல்லாம் கேட்ட பரம்பரையாய்ப் பிடுங்கித்தின்ற பார்ப்பன புரோகிதர்களும், பஞ்சாங்கப் பார்ப்பனர்களும், அடிவயிற்றில் இடிவிழுந்தாற் போல ஏங்கி, ஏமாற்றிப் பிழைக்கும் பிழைப்பு போச்சே என்றலறி, ஸ்ரீ ரங்க கவுண்டரை தனித்தனியாகவும் கூட்டங்கூட்டமாகவும் அணுகி "அப்பா இறந்து விட்டார், மிகவும் நல்லவர். அவருடைய பிள்ளையாகிய நீங்கள் வைதீகமாய் எங்களைக்கொண்டு சாஸ்திர சம்பிரதாயத்துடன் கரும காரியங்களைச் செய்தால்தான் உங்கள் தந்தையார் யம வேதனையின்றி சந்தோஷமாய் சுவர்க்கம் புகுவார். நீங்களும் பிள்ளைகுட்டிகளுடன் பாரம்பரியமாய் சந்தோஷமாய் வாழமுடியும்" என்று உபதேசம் செய்தனர். "பழக்கத்திற்கு விரோதமாய் செய்தால் குடும்பம் நசித்து விடும். பெரியோர் போனவழியே நாம் போகலாம்" என்று உண்மையறியாத சில சுயமரியாதையற்ற பார்ப்பனரல்லாதார்களையுங்கொண்டு சொல்லச் செய்தனர். யார் சொல்லியும் ஸ்ரீ ரங்கக் கவுண்டர் மனம் திரும்பவில்லை. "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்றதையே தலையாகக்கொண்டு தந்தையர் இஷ்டப்படியே நடத்த முடிவு செய்து விட்டனர். ஸ்ரீமான் நாயக்கர் போன்றவர்களுக்கெல்லாம் அழைப்பும் ஆளும் அனுப்பப்பட்டன. இவ்வழைப்பிற்கிணங்கி ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்கள் தமது நண்பர்களாகிய 'திராவிடன்' பத்திராதிபர் திரு கண்ணப்பர் அவர்களையும் சிதம்பர தேசபக்தா திரு என். தண்டபாணி பிள்ளையவர்களையும் உடன் அழைத்துக்கொண்டு 19 தேதி இரவு சென்னையை விட்டுப் புறப்பட்டு ஜோலார்பேட்டை வந்து சேர்ந்தார்.

சுயமரியாதை வீரர்களின் விஜயத்தை முன்னிட்டும், பார்ப்பனீயம் ஒழிந்த ஒரு பெரிய இடத்துக் கருமாதியைப் பார்க்கவேண்டுமென்கிற அவாவினாலும் அலசந்தாபுரத்திற்குச் சுற்றுப்பக்கமுள்ள சுமார் 50 கிராமவாசிகளில் முக்கியமானவர்களெல்லாம் ஆணும் பெண்ணுமாக 20ந் தேதி காலையிலேயே அலசந்தாபுரம் வந்துசேர்ந்தார்கள். அலசந்தாபுரம் கிராமமானது கொடிகளாலும், தோரணங்களாலும் தெருக்கள் தோறும் அலங்கரிக்கப்பட்டு வைக்கம் வீரரே வருக! வருக!! சுயமரியாதை வீரரே வருக! வருக!! என்ற வளைவுகளும் நாட்டப்பட்டிருந்தன. இக்கிராமம் என்று

இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.



அனைத்துயிர் ஒன்றென் றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகுந்தானே.

குடி அரசு

ஈரோடு பிரபவ ஹு பங்குனி மீ 20 உ

ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியின் 'ஞானோதயம்'

ராஜீய உலகத்தில் பார்ப்பனர்களுடையவும் அவர்களது வால்களினுடையவும் நாணயமும் யோக்கியதையும் அடியோடு ஒழிந்து அவர்களின் அயோக்கியத்தனம் வெளியாய் விட்டதால் இந்த சமயம் அவர்களுக்கு ஆதரவு கொடுக்க யாரும் இல்லாததை அறிந்து, ஸ்ரீமான் காந்தி காலத்தில் அவர் நிழலில் யோக்கியதை பெற்ற ஸ்ரீ சி. ராஜகோபாலாச்சாரியார் இப்போது வெகு மும்முரமாய் முழு பார்ப்பன வேஷத்தோடு ஆதரிக்க வெளிவந்துவிட்டார்.

முதலாவதாக மனுதர்ம சாஸ்திரத்தை ஆதரித்து எழுதினர். பிறகு 'ஜஸ்டிஸ்' கட்சியை வைது எழுதினர். இப்போது அரசியலே அயோக்கியத்தனமென்றும், தற்கால மந்திரிகள் ராஜினாமா கொடுக்கவேண்டுமென்றும் எழுதியிருக்கிறார் ஸ்ரீ ஆச்சாரியார் அரசியல் அயோக்கியத்தனம் என்பதை என்றைய தினம் தெரிந்து கொண்டார்? திருட்டுத்தனமாய் பார்ப்பனர்களுடன் சேர்ந்துகொண்டு ஒத்துழையாமைக்கு டில்லியில் உலைவைத்தாரே அன்று? அல்லது காகினாடாவில் சட்டசபைக்கு போனவர்களை ஆதரித்தாரே அன்று? அல்லது ஜமன்லால்பஜாஜ் இடம் ரூ 50000 வாங்கினாரே அன்று? அல்லது புதுப்பாளையம்ஜமீன் தாரிடம் 10000ரூ பொறுமான தோப்பு தானமாய்வாங்கினாரே அன்று? அல்லது ஸ்ரீ வெங்கட்டரமணய்யங்காருக்கு ஓட்டு வாங்கிக்கொடுக்க நாயக்கர் மார்கள் கிராமங்களில சுத்தினாரே அன்று? அல்லது மது விலக்கின் பெயரால் சுயராஜ்யக் கட்சிக்கு ஓட்டுச்செய்யும்படி பத்திரிகைகளில் கோடுகட்டிய குறள்கள் எழுதிவந்தாரே அன்று? அல்லது சட்ட சபை தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சிக்கு பலம் குறைந்ததாக தெரிந்தவுடன் சென்னைக்கு ஓடி டாக்டர் சுப்பராயனை முதல் மந்திரி ஆக்கினாரே அன்று? அல்லது தமிழ்நாட்டில் எந்தப் பார்ப்பனரும் வெளியில் தலை காட்டுவதற்கு போகவழி இல்லாமல் போன சமயம் பார்த்து ஸ்ரீமான் காந்தியை தமிழ்நாட்டுக்கு அழைத்து வந்து வருணாசிரம பிரசாரம் செய்வித்து அவரை அடியோடு ஒழித்தாரே அன்று?

அல்லது ஸ்ரீமான் காந்தி செய்த பிரசார தைரியத்தை வைத்துக்கொண்டு மனுதர்ம சாஸ்திரப் பிரசாரம் செய்யத் துணிந்தாரே அன்று? அல்லது புதுப்பாளையத்தில் பார்ப்பனரல்லாத ஜமீன்தாராகிய ஸ்ரீ ரத்தினசபாபதி கவுண்டர் தானமாய் கொடுத்த தான பூமியில் இருந்துகொண்டு 'பத்மாசூரன் கதைபோல்' அந்த சமூகத்தையே ஒழிக்க ஒரு பத்திரிகை சீக்கிரத்தில் ஆரம்பிக்க முடிவு செய்தாரே அன்று? அல்லது இவர் பார்ப்பனருக்கு அனுகூலமாக பிடித்துவைத்த மந்திரிக்கு பார்ப்பனரல்லாதார் அபிமானம் சிறிது தோன்ற ஆரம்பித்ததே அன்று? என்று கேட்கின்றோம். நமது ஆச்சாரியாருக்கு தானும் தன் இனமும் என்ன அயோக்கியத்தனம் செய்தாலும் அது காந்தியம், ஒத்துழையாமை, தேசாபிமானம், ஆஸ்ரமத் தன்மை முதலியவைகள் ஆகிவிடுகின்றது.

பார்ப்பனல்லாதார் நன்மைக்காக ஏதாவது ஒரு சிறு நன்மை காணப்பட்டால் அது திடீரென்று தேசிய அயோக்கியத்தனமாகிவிடுகின்றது. இதுவே தற்கால பார்ப்பனரல்லாதார் நிலைக்கு உதாரணம் போதும். 'நம்மவரே நம்ம குலத்தைக் கெடுக்க கைப்பிடியாய் இருக்கும் போது இருப்பு என்ன செய்யும்' என்று ஒரு மரம் சொல்லிற்றாம். அதுபோல் பார்ப்பனரல்லாதாரிலே உள்ள கோடாலிக் காம்புகளை நினைக்கும்போது ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரின் நடவடிக்கை நமக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லை.

"ஆனால் இந்து மதத்தை ஒழித்துவிடுவதே மேல்"

சுவாமி ராமதீர்த்தாவின் வாக்கியம்.

இந்திய சட்டசபையில் குழந்தைகள் விவாகத் தடுப்பு மசோதாவின் பேல் விவாதம் நடக்கையில் "சென்னை பிரதிநிதிகளான" அய்யங்கார் கூட்டத்தைச் சேர்ந்தவரும சட்டசபை பிரயாணச் செலவிலேயே பெரிதும் வாழ்க்கை நடத்துகிறவருமான ஸ்ரீமான எம். கே. ஆச்சாரியார் அவர்கள் மேற்கண்ட மசோதாவை எதிர்த்துப் பேசும்போது இந்தியாவின் செல்வாக்குள்ள சனாதனதர்மிகளின பிரதிநிதியாகவே தான் அச்சபையில் இருப்பதாகவும், எவ்வித சீர்திருத்தமும் சட்டத்தின் மூலம செய்யக்கூடாதென்றும், மதத்தில் தலையிட யாருக்கும் இடம் கொடுக்கக்கூடாதென்றும், அதிலும் சர்க்கார் தலையிட கொஞ்சமும் இடம் கொடுக்கக்கூடாதென்றும் சர்க்காரை பிரட்டிப் பேசினபோது அதற்கு பதில்சொல்ல கிளம்பிய ஸ்ரீமான ஈஸ்வரசரண்முன்ஷி அவர்கள், வைதிகர்களில் சிலர் இம்மசோதாவை எதிர்த்தாலும் ஏராளமான பொது ஜனங்கள் இம்மசோதாவை ஆதரிக்கிறார்கள் என்றும், ஸ்ரீமான் எம். கே. ஆசாரியார் இம்மசோதாவை எதிர்ப்பதன் இரகசியம் தனக்கு விளங்கவில்லை என்றும், இன்று இந்து மதம் அடைந்திருக்கும் கேவல நிலைக்கு ஸ்ரீ ஆச்சாரியார் போன்றவர்களே காரணம் என்றும், "இந்து மதம் முன்னேற்றத்திற்குத் தடையாயிருக்குமானால் அதை ஒழித்துவிடுவதேமேல்" என்று சுவாமி ராமதீர்த்தர் கூறியிருக்கின்றார் என்றும் கூறினாராம்.

இந்து மதத்தை காப்பாற்றத் தோன்றியிருப்பதாய் நடிக்கும் நமது 'தமிழ்நாடு' பத்திரிகையோ அல்லது ஒரு ஸ்ரீ வரதராஜுலுவோ இந்திய சட்டசபையிலும் இருந்திருந்தால் "முன்ஷி ஈஸ்வரசரணரின் நயவஞ்சகம்" என்றோ, அல்லது "ஈஸ்வரசரணர் பிரசாரம்" என்றோ தலையங்கம் கிளப்பியிருக்கும். அவைகள் அருகிலில்லாதது ஸ்ரீ ஈஸ்வரசரணர் நல்ல காலமே ஆகும். தவிர பொது ஜனங்களின் பிரதிநிதி என்று சொல்லி சட்டசபைக்கு போய் அதனால் வயிறு வளர்க்கும் ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியர் இப்போது தாம் சனாதன வைதீகர்களின் பிரதிநிதி என்று சொல்லிக்கொள்ளும அயோக்கியத்தனத்தை அறிந்து அவருக்கு பொதுஜனங்கள் தக்க புத்திகற்பிப்பார்களா என்றும் கேட்கின்றோம்.

சர். பாத்ரோ ஆச்சாரியார்

சென்னை சட்டசபையில், பால்ய விவாகத்தை தடுக்க ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மாளால் கொண்டுவரப்பட்ட ஒரு சிபார்சு தீர்மானம் விவாதத்திற்கு வந்த காலத்தில சர். பாத்ரோ அவர்கள் அத்தீர்மானத்திற்கு எதிரிடையாய் அதாவது மதத்தில் சர்க்கார் பிரவேசிக்கக்கூடாது என்று பேசியிருக்கிறார். இது யோக்கியமா என்று கேட்கிறோம். இந்த சம்பவம பார்ப்பனரல்லாதார் கட்சிக்கே ஒரு பெரிய மானக்கேடு என்று சொல்லுவோம. பணிதர்கள் அரசியலில் கரணம் போடுவதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ஏனென்றால் அரசியல் என்றாலே அயோக்கியத்தனம, [illegible]த்தனம், தேசத்துரோகம, என்பவைகள் நமது அகராதி அர்த்தம். காங்கிரஸ் கொள்கை முதல்கொண்டு, அதை ஆரம்பித்த பெரியார்கள் என்பவர்கள் முதல்கொண்டு, அதில உள்ள தலைவர்கள் எனபவர்கள் முதல் கொண்டு, எல்லாவற்றிலும பெரும்பான்மையாக அந்த எண்ணத்தைக்கொண்டே ஆரம்பித்து நடத்திவரப்படுகின்றது என்பதே நமது முடிவு. ஆனால் சமூக சீர்திருத்த விஷயத்திலாவது மேலகண்ட குணங்கள் இல்லாமல யோக்கியமாய் நடந்து கொள்ள

வேண்டாமா என்று கேட்கின்றோம். சர் பாத்ரோ பிரம்ம சமாஜி என்று சொல்லிக் கொள்ளுபவர். உண்மையிலேயே அவருக்கு மதத்தில் சர்க்கார் பிரவேசிக்கக்கூடாது என்கின்ற அபிப்பிராயமிருக்குமானால் தேவஸ்தான சட்டம் செய்ததைப்பற்றியும் யூனிவர் சிடியில் செய்ததைப் பற்றியும் மன்னிப்பு கேட்டுக்கொண்டு மரியாதையாக பார்ப்பனரல்லாதார் கட்சியைவிட்டு வெளியில் போய்விடும்படியாக வேண்டிக்கொள்ளுகின்றோம். ஸ்ரீ பாத்ரோ ஆச்சாரியாரைவிட ஸ்ரீ வரதராஜுலு அய்யங்காரோ மேல்என்று ஜனங்கள் நினைக்கும்படி நடந்துகொண்டதற்கு நாம் மிகுதியும் பரிதாபப்படுகிறோம்.

"தமிழ்நாடு" பத்திரிகையின் புரட்டு.

'தமிழ்நாடு' பத்திரிகை 6000 பிரதி வெளியாகின்றது என்று சூழ்ச்சி அறிக்கை வெளியானதைப்பற்றி நாம் முன்னமேயே அச்சூழ்ச்சிக்கு ஆதாரவாய் இருந்த சர்க்கார் அதிகாரிகளையும் கண்டித்து எழுதியிருந்தோம். இப்போது சர்க்காரார் இனி அம்மாதிரி நடந்துகொள்ளுவதில்லை என்று ஒரு அறிக்கை வெளியிட்டு இருக்கின்றார்கள்.

ஷை அறிக்கை வெளியிடப்பட்ட காலத்தில் 'தமிழ்நாடு' தினசரிப் பத்திரிகை ஆரம்பிக்கவே இல்லை. வாரப்பத்திரிகை அவ்வளவு இருந்ததாக அவர்களே சொல்லுவதும் இல்லை. ஆகவே இப்புரட்டு சர்க்காருக்கு தாராளமாய் வெளிப்படுத்தப்பட்டு விட்டதால் சர்க்கார் 23-3-28ல் ஒரு அறிக்கைவெளியிட்டு அதில் 'ஜஸ்டிஸ்' பத்திரிகை இந்த இரண்டு வருஷமாய் அதிகமாய்க்கொண்டு வருவதை ஒப்புக்கொண்டு இனிமேல் விவகாரத்திற்கு இடம் கொடுக்கத் தக்கதான பத்திரிகைகளின் எண்ணிக்கைகளைப் பற்றி வெளிப்படுத்துவதில்லை என்றும் தெரிவித்து விட்டார்கள். இதிலிருந்து ஸ்ரீ வரதராஜுலுவின் சூழ்ச்சி நிஜமா அல்லது நாயக்கரின் கண்ணப்பரின் பொறாமை நிஜமா? என்பதை முடிவு செய்யும் வேலையை பொது ஜனங்களுக்கே விட்டு விடுகின்றோம்.

தொழிலாளர்களுக்கு சுயராஜ்யக்கட்சியின் துரோகம்.

இந்திய சட்டசபையில் சர்க்கார் தரப்பில், சுரங்கத் தொழிலாளர் நாள் ஒன்றுக்கு 12 மணி நேரம் வேலைசெய்யவேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானத்திற்கு, தொழிலாளிகளின் சார்பாய் ஸ்ரீ ஜோஷி அவர்களால் 8 மணி நேரந்தான் வேலை செய்யவேண்டுமென்று ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டபோது, சுயராஜ்யக்கட்சியார் அங்கிருந்து ஓட்டுக்கொடுக்காமல் நிருட்டுபாய்ந்து விட்டதால் திருத்த தீர்மானம் தோல்வியுற்று 12 மணி நேரம் வேலை செய்யவேண்டிய தீர்மானம் நிறைவேறிவிட்டது. இதுதான் தொழிலாளருக்கு காங்கிரஸ் செய்யும் நன்மைபோலும்.

கைமேல் பலன்.

சென்னை அரசாங்க சட்ட மெம்பர் பதவி 18 வருஷகாலம் பொறுத்து அநுபவம் அய்யர், ஆச்சாரி, அய்யங்கார், சாஸ்திரி ஆகிய பார்ப்பனப் பட்டங்கள் எவ்வளவு உண்டோ அவ்வளவு பட்டக்காரருக்கும் வரிசைக் கிரமமாகக் கொடுத்துவந்து இப்போது கடைசியாக அதாவது அந்த உத்தியோகமே கூடிய சீக்கிரத்தில் சாகப்போகும் தருவாயில், ஒரு பார்ப்பனரல்லாதாருக்கு கொடுக்கப்பட்டவுடன் பார்ப்பனப் பத்திரிகைகளும் பார்ப்பனரை நத்திப் பிழைக்கும் "தமிழ்நாடு" போன்ற பத்திரிகைகளும் தங்களுக்குள்ள ஒரே ஆயுதமாகிய அதுவும் பேடி ஆயுதமான "தேசத்துரோக" பாட்டுப்பாடி. பார்ப்பனரல்லாத சமூகத்தையும் அவர்களது இயக்கத்தையும் செல்வாக்கையும் விஷமப் பிரசாரத்தால் அழிக்கப் பாடுபடுகின்றன. உதாரணமாக 'சுதேசமித்திரன்' என்னும் பார்ப்பனப் பத்திரிகை "கைமேல் பலன்" என்ற தலையங்கத்தின் கீழும் 'தமிழ்நாடு' பத்திரிகை "புதிய சட்ட மந்திரி" என்கின்ற தலையங்கத்தின் கீழும் வாயில் வந்தபடி உளற ஆரம்பித்து "ஆபத்து காலத்தில் மந்திரிகளை ஆதரித்து கவர்ன்மெண்டிற்கு உதவிசெய்த 'ஜஸ்டிஸ்' கட்சியாருக்கு கைமேல் பலன் கிடைத்தது" என்று 'தேசமித்திரன்' பத்திரிகையும் "நாட்டைக் காட்டி கொடுத்து நெருக்கடியான சமயத்தில் தேசத்துரோகம் செய்து சட்டமெம்பர் பதவி ஒப்புக்கொண்டது பெரிய தப்பு" என்று 'தமிழ்நாடு' பத்திரிகையும் எழுதியிருக்கின்றன.

இவற்றுள் ஆபத்துகாலம் என்பது என்ன என்பதை முதலில் யோசிப்போம். ஸ்ரீமான் கிருஷ்ண நாயருக்கு சட்ட மெம்பர் வேலை கிடைக்கும்போதுதான் இந்தியாவுக்கு ஆபத்துக்காலமா, அல்லது அய்யர், ஆச்சாரி, அய்யங்கார், சர்மா, சாஸ்திரி முதலியவர்கள் அப்பதவியை ஒப்புக்கொள்ளும்போது ஆபத்துக்கால மில்லையா என்று கேட்கின்றோம். அன்றியும் இந்த ஸ்ரீ கிருஷ்ணன் நாயர் ஒப்புக்கொண்டது மாத்திரம் தேசத்துரோகம் செய்ததற்கு கைமேல் பலனு? அல்லது முன் குறிப்பிட்ட அ. ஆ. ச. சா. முதலியவர்கள் தேசபக்திக்கு கைமேல் பலனா என்று கேட்கின்றோம்.

முதல் முதல் ஸ்ரீமான் கிருஷ்ணசாமி அய்யர் நிர்வாக பதவி ஒப்புக்கொண்ட காலத்தில் வங்காளக் கிளர்ச்சி இருந்தது. பிறகு சர். சிவசாமி அய்யர் ஒப்புக்கொண்ட காலத்தில் ஹோம் ரூல் கிளர்ச்சி இருந்தது. பிறகு சர். சி. பி. காங்கிரசின் பெயரால் சட்டசபை மெம்பர் பதவி பெற்று, ஒரு அய்யங்கார் பார்ப்பனர் தனக்கு இன்னும் பெரிய உத்தியோகம் கிடைக்கும் என்கின்ற ஆசையின் மேல் ராஜினாமா கொடுத்த உத்தியோகத்தை ஏற்று, தேசம் ஒத்துழையா இயக்கத்தில் ஈடுபட்டு தேசபக்தர்கள் என்பவர்கள் மும்முரமாய்ப் பெரிய கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் தியாகங்களுக்கும் உள்ளாகிப் பெருத்த கிளர்ச்சி செய்த காலத்தில் 'அதாவது 'இதோ சுயராஜ்ஜியம் தெரிகிறது, அதோ சுயராஜ்ஜியம் தெரிகிறது" என்று சொல்லிக் கொள்ளப்பட்ட காலத்தில், அவ்வியக்கத்திற்கும் கஷ்டப்பட்ட மக்களுக்கும் விரோதமாய் நடந்துகொண்டிருந்து அதற்கு கைமேல் பலனாக சட்ட மந்திரி பதவிபெற்று "என்னுடைய கவர்மெண்ட்" "என்னுடைய ஆகுதி' என்பதாகக் கவர்மெண்டுக்காகப் பிறந்த பிள்ளைபோல் சொந்தம் பாராட்டி அவ்வுத்தியோகத்தைச் சர்க்காருக்கு அநுகூலமாக நடத்திக்கொடுத்தது இந்த 'மித்திரனுக்கும்' 'தமிழ்நாடு'க்கும் கடற் கரையில் நின்று கூப்பாடு போடும் ஸ்ரீமான் வரதராஜுலுவுக்கும் தெரியாதா என்று பொது ஜனங்களைக் கேட்கின்றோம்.

தவிர ஸ்ரீமான் டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரியார் எந்த தேசாபிமானத்தின்மேல் ராஜீநாமா கொடுத்தார் என்பதை யாராவது இதுவரை வெளிப்படுத்தினார்களா? அல்லது அவர் இதுவரை தேசத்திற்கு என்ன நன்மை செய்தார் என்பதையாவது வெளிப்படுத்தினார்களா? அல்லது அவருடைய பாரம்பரியம், பிறப்பு வளர்ப்பு, அறிவு சக்தி இவைகளைப் பற்றியாவது யாராவது வெளிப்படுத்தினார்களா? அல்லது அவருக்கு இந்த உத்தியோகம் கொடுக்கப்பட்ட காலத்திலாவது அவருக்கு முன்னுள்ளவர்களுக்குக் கொடுக்கப்பட்ட காலத்திலாவது இம்மாதிரி நெருக்கடியான காலத்தில ஒப்புக்கொண்டது தப்பு என்பதையாவது யாராவது வெளிப்படுத்தினார்களா என்றுங்கேட்கின்றோம். அன்றியும் இப்போதுள்ள நெருக்கடி என்ன என்பதையாவது 'தமிழ் நாடும்' ஸ்ரீ வரதராஜுலுவும் வெளிப்படுத்திப் பிறகு கிருஷ்ணன் நாயருக்கு தேசத்துரோகப் பட்டம் சூட்டிற்று என்று கேட்கின்றோம்.

1926ம் வருட முடிவில் சட்டசபை தேர்தலில் எந்தக் கட்சியாரும் மந்திரி பதவிக்கத்தக்க நிலையில்லாமல் சர்க்கார் கனி

ஸ்ரீமான் கண்ணப்பர் கேஸ்.

திருவண்ணாமலையில் நடைபெறும்—ஸ்ரீமான் கண்ணப்பரை கோவிலுக்குள் பிரவேசிக்க விடாமல் தடுத்ததாக ஏற்பட்ட—கேஸ் திருவண்ணாமலை மேஜிஸ்ட்ரேட்டிடமே விஜாரிக்கும்படி. ஏற்பட்ட ஐகோர்ட்டு தீர்ப்பை ஒட்டி சென்ற திங்கட்கிழமை ஆர்க்யுமெண்டுக்கு வாய்தா போட்டிருந்தது. ஆனால் அன்றைய தினம் எதிரி அர்ச்சகர் சம்மன் வாங்காமல் கண் மறைவாய்த் திரிவதாகத் தெரிவந்ததால் கோர்ட்டார் எதிரிக்கு வாரண்டு பிறப்பித்திருக்கிறார்கள்.

காங்கிரஸ் வரவேற்பு கமிட்டித் தலைவருக்கு சரியான மரியாதை.

ஸ்ரீமான் முத்துரங்க முதலியார் காங்கிரஸ் வரவேற்பு கமிட்டித் தலைவர்; பார்ப்பனரின கைப் பிள்ளை அப்படிப்பட்டவர் தாலூக்கா போர்டு அங்கத் தேர்தலில் நன்றாய்த் தோல்வி அடைந்து விட்டார். அய்யோ பாவம்! இதற்கு யாரிடம் துக்கம் கொண்டாடுவது என்பது தெரியவில்லை. ஸ்ரீ முதலியாரிடமா? அல்லது காங்கிரசிடமா? அல்லது, பார்ப்பனத் தலைவர்களிடமா? அல்லது அவர்கள் வால்களிடமா என்பது நமக்கு விளங்கவில்லை.

மண் உருண்டையினாலாவது மந்திரிகளை நியமிக்கவேண்டுமென்று கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கையில் இப்போது ஸ்ரீ கிருஷ்ண நாயருக்கு தேசத்துரோகப் பட்டம் சூட்டும் இதே 'தமிழ் நாடு' பத்திரிகையும் இதே வரதராஜுலுவும் காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமாக, ஓட்டர்களிடம் கொடுத்த வாக்குத்தத்தத்திற்கு விரோதமாக, தன்னாலேயே 'தேசிய அயோக்கியர்—பார்ப்பனரல்லாதாருக்கு விரோதி' என்று அழைக்கப்பட்ட ஒரு கனவானான ஸ்ரீ சத்தியமூர்த்தி சாஸ்திரியை மந்திரிவேலை ஒப்புக்கொள்ளும்படி தந்தி கொடுத்துக் கெஞ்சினதோடு லார்ட் கோஷனுக்கும் விண்ணப்பம் செய்து கொண்டாரே! இது எந்த தேசாபிமானம்? பார்ப்பன தேசாபிமானமா? அல்லது பார்ப்பனரல்லாத தேசதுரோகமா? என்றுகேட்கின்றோம். அன்றியும் அந்த காலத்து நெருக்கடியை விட இப்போது என்ன அதிகமான நெருக்கடி என்பதையும், ஸ்ரீ வரதராஜுலு, ஸ்ரீ சத்தியமூர்த்தி சாஸ்திரியைவிட ஸ்ரீ கிருஷ்ண நாயரிடத்தில ராஜியக்கொள்கைகளில் ஏதொரு மாறுதலும் கிடையாது, ஒரே நிலையில் இருக்கிறார் என்பதாக ஒப்புக்கொள்ளப்பட்ட ஸ்ரீ கிருஷ்ண நாயர் எந்த விதத்தில் தேசத்துரோகி என்று கேட்கின்றதுடன் அப்போதையதைவிட இப்போது என்ன நெருக்கடி என்று கேட்கின்றோம். தவிர மந்திரிகளுக்காகவே கட்சியை உண்டு பண்ணி அநுமதேய மந்திரிகளை ஏற்படுத்தி தங்கள் கொள்கைகளுக்கு விரோதமாக காங்கிரசின் பேரால் மந்திரிகளை ஆதரித்து வந்த ஆரியன் அயோக்கியத்தனத்தை விட "தேசத்துரோகத்தை" விட—ஸ்ரீ கிருஷ்ணன் நாயர் சட்ட மெம்பர் பதவி பெற்றது எப்படி 'சுதேசமித்திரனுக்கும்' 'தமிழ் நாடுக்கும்' அயோக்கியத்தனமாகி விட்டது என்று கேட்கின்றோம். ஸ்ரீமான் டி. ஆர் வெங்கிட்டராம சாஸ்திரி ஒரு பஞ்சாங்கப் பார்ப்பனர், மனுதர்ம சாஸ்திரி; வருணாசிரம தர்மி. ஸ்ரீ வரதராஜு உள்பட எல்லோரையுமே வேசி மகன் என்று பொருள்படும் சூத்திரர் என்று அழைப்பவர். தன் ஜாதி தவிர மற்ற ஜாதியார்களை நாயினும் பன்றியினும் பூச்சிப் புழுக்களினும் கேவலமாய் மதிப்பவர். ஆனால் ஸ்ரீ கிருஷ்ணன் நாயரோ ஒரு பரம்பரை ஜமீன்தார். மக்கள் எல்லோரும் சமம் என்பவர்; தான் ஜமீன்தாராய் இருந்தும் மலையாளத்து ஏழை மக்களுக்காக சம சுதந்திர மசோதா கொண்டு வந்தவர். தன்னுடைய சுய நலத்தைக் கருதாமல், பார்ப்பனரல்லாதார் கொள்கைக்காக ஒரே நிலையில் இருந்து உழைத்து வருபவர். திருவாங்கூரில் ஹைகோர்ட் ஜட்ஜாக இருந்தவர். திவானாயிருந்தவர்; சென்னை சட்ட சபையில் இருக்கும் எல்லாச் சட்ட சபை மெம்பர்களுக்கும் முன்னால் அதாவது சுமார் 25 வருட காலமாக சட்ட சபையில் இருந்து வருபவர். இதுவரையில ஸ்ரீமான் வரதராஜு ஒருவரைத் தவிர வேறுயாரும் அவரை 'தேசத்துரோகி' என்று சொல்ல இடம் வைத்துக்கொள்ளாதவர்.

11-ம்பக்கத் தொடர்ச்சி.

மரியாதைப்படி ஓர் பெரிய உற்சவ நகரமாகவே இருந்து விளங்கியது.

20 தேதி காலையில் ஜோலார் பேட்டையிலிருந்து திரு நாயக்கர் முதலியோர்கள் வரவேற்கப்பட்டு அலசந்தாபுரத்திற்கு வண்டியில் 8 மணிக்கு வந்து சேர்ந்தனர். இவர்களுடைய வரவை ஆவலுடன் எதிர் நோக்கிக்கொண்டிருந்து சுமார் 500 ஜனங்கள் பாண்டு வாத்தியங்கள் முழங்க, சின்ன மேளம், பெரியமேளம் ஒலிக்க, தாரை தப்பட்டைகள் முழங்க கொம்பூதி ஆரவாரஞ் செய்து ஜே! கோஷம்போட்டு ஸ்ரீமான்கள் நாயக்கர் அவர்களையும்கூட வந்த கண்ணப்பர் தண்டபாணிபிள்ளை ஆகியவர்களையும் மாலையிட்டு ஊர்வலமாய் அழைத்துக்கொண்டு கருமம் நடத்தவேண்டிய சமாதி வைத்த இடத்திற்குச் சென்றனர். இங்கே ஏற்கனவே சுமார் 100 பெண்களும், 100 ஆண்களும் கூடியிருந்தனர். எல்லோரும் வந்து சேர்ந்ததும ஆம்பூர் வாணியம்பாடி முதலிய ஊர்களிலிருந்து பண்டரி பஜனைக் கூட்டத்தார் உள்பட பலபஜனைகோஷ்டியாரும்பாடிக்கொண்டே வந்துசேர்ந்தனர். (ஊரில் ஒரு பார்ப்பனனைக்கூட கண்ணில் காணமுடியவில்லை. ஆனால் ஒரு தோப்பில் சில பிராமணர்கள் இதற்கென்றே வந்து பொங்கித்தின்று விட்டு மாலை வரையில் காத்திருந்து எதிர்பார்த்து தங்களையாரும் கவனித்தழைக்காமையால் யாரிடமும் சொல்லாமல் ஊரைவிட்டு ஓடி விட்டனர்.) உடனே பார்ப்பனரல்லாதாரின் இன்னிசைக் கருவிகளுடன் கூடிய பண்ணமைந்த பாசுரங்களுக்கிடையில் சமாதிக்கு அபிஷேக அலங்கார தூபதீப நிவேதனங்கள் செய்யப்பட்டு காரியம் சிறப்பாய் நடந்தேறியது. பகல் 1 மணிக்கு அங்கிருந்து எல்லோரும் ஊர்வலமாய்ப் புறப்பட்டு திரு சிரங்கக் கவுண்டரின் மாளிகைக்கு வந்துசேர்ந்தனர். ஏக காலத்தில் 1000 இலைகளுக்குமேல் போடப்பட்டு சமபந்தியாக வந்திருந்தவர்கள் எல்லோருக்கும் விருந்து நடத்தினார்கள். இதேமாதிரி மாலை 5 மணிவரையில் சாப்பாடு போட்டும் பந்தி காலியாகாமலே இருந்துகொண்டிருந்தது.

பிரசங்க ஆரம்பம்

சரியாக மாலை 5 மணிக்கு இதற்கென்றே அழகாக அமைக்கப்பட்ட பெரிய பந்தலின் கீழ் மீட்டிங்கு ஆரம்பமாயிற்று. பந்தலில் சுயமரியாதைக்கு ஜே! பார்ப்பனீயம் ஒழிக. தரகர்கள் ஒழிக, சகோதரத்துவம் பெருக, சமத்துவம் ஓங்குக; சமத்துவம் அடைய, சுயமரியாதை பெறுக என்று எழுதப்பட்ட தட்டிகள் தொங்கவிடப்பட்டிருந்தன. கூட்டத்தில் எள் விழ இடமில்லாதபடி வந்திருந்த ஜனங்கள் எல்லோரும் ஜாதி பேதமில்லாமல் உயர்வு தாழ்வில்லாமல் ஆணும் பெண்ணுமாய் அமர்ந்திருந்தார்கள். வந்திருந்தவர்களுள் முக்கியமானவர்கள்:—ஸ்ரீமான்கள் ஈ. வெ. ராமசாமி நாயக்கர், கண்ணப்பர், என். தண்டபாணி பிள்ளை, அம்பலூர் கரியக்கவுண்டர் இ. கே. லட்சுமண கவுண்டர், இ. லட்சுமி நாராயண கவுண்டர், அப்பாசாமி முதலியார், ஆர் துளசி கவுண்டர், சின்னப்ப முதலியார், அங்கப்ப முதலியார், பெரிய பேட்டை, குப்புசாமி முதலியார், பெரியபேட்டை, ஆர். முனிசாமி கவுண்டர், ராதாகிருஷ்ணமூர்த்தி, சகாதேவ கவுண்டர், ஷை குப்பண்ண கவுண்டர், இராமநாயக்கர் பேட்டை ஆர். ரங்கசாமி முதலியார், ஷை முனியப்ப செட்டியார். பழைய வாணியம்பாடி, முனுசாமி கவுண்டர், திருப்பத்தூர், பொன்னுசாமி முதலியார், மதராஸ் மு. தங்கவேல் முதலியார், வாணியம்பாடி, முனியப்ப கவுண்டர், வெள்ளக்குட்டை நல்லா கவுண்டர், அலசந்தாபுரம் ஆர். துளசி கவுண்டர், அம்பலூர் சகாதேவ கவுண்டர், மேற்படி மாணிக்க கவுண்டர், கூட்டப்பட்டு ஷண்முக கவுண்டர், மேற்படி அப்பாசாமி கவுண்டர். கொடையாஞ்சி ஆதிமூல முதலியார், கோவிந்தராஜு முதலியார், ஆறுமுக செட்டியார், திம்மம்பேட்டை இராமசாமி கவுண்டர், மிட்டாதார் தும்பேரி முதலியோர்களாவர். கூட்டத்திற்கு அக்கிராசனராக ஸ்ரீமான் இ. கே. லட்சுமணக் கவுண்டர் அவர்களை ஸ்ரீமான் கரியக் கவுண்டர் பிரேரணை செய்தார். இதை ஆமோதித்ததும் கரகோஷத்திற்கிடையே அக்கிராசனர் ஸ்ரீமான் நாயக்கரவர்களுக்கு மாலையிட்டு 'சுயமரியாதையும்—மதச் சடங்குகளும்' என்பது பற்றி பேசும்படி கேட்டார். பெருத்த ஆனந்தத்திடையே ஸ்ரீமான் நாயக்கர் சுமார் 2 மணி நேரம் எடுத்த விஷயத்தைப்பற்றி தொடுத்துப் பேசியது, கேட்போர்கள் மனம் கரைந்து உணர்ந்து சுயமரியாதையில் ஈடுபட்டு இன்று நடந்ததைப்போல் எல்லாரும் பின்பற்றி நடக்கும்படி செய்து விட்டது.

(பிரசங்கம் அடுத்தவாரம் வெளிவரும்) ஒருநிருபர்.

எனவே இந்த ஸ்ரீமான் கிருஷ்ண நாயர் ஸ்ரீமான் வெங்கட்டராம சாஸ்திரியை விட எந்த விதத்தில் மோசமானவர் என்றும், முன்னையவர்கள் ஒப்புக்கொண்ட காலத்தை விட இப்போது எந்த விதத்தில் நெருக்கடியான காலம் என்றும், முன்னையவர்கள் ஒப்புக்கொண்டதைவிட இப்போது எந்த விதத்தில் தேசத்துரோக மென்பதையும் எடுத்துக்காட்டும்படி பார்ப்பனர்களையும் அவர்களது வாலான 'தமிழ்நாடு' வையும் ஸ்ரீ வரதராஜுலுவையும் கேட்கின்றோம். பார்ப்பனர்கள் நம்மைப்பற்றியும் நமது இயக்கத்தைப்பற்றியும் நமக்கு உத்தியோகம் கிடைத்த சமயத்தில் வயிற்றெரிச்சலும் ஆத்திரமும் அடைவதைப் பற்றியும் நமக்குக்கவலை இல்லை. இது அவர்கள் பார்ப்பனரல்லாதாரை தாழ்த்தி அடக்கியாளப் பரம்பரியமாக ஆயிரக்கணக்கான வருஷமாக கையாளும் தந்திரம். ஆனால் கோடாலிக்காம்பான ஸ்ரீமான் வரதராஜுலுக்கு ஆத்திரமும் வயிற்றெரிச்சலும் உண்டாகிப் பார்ப்பனர்கள் பின்னால் தாளம் போடவேண்டிய இரகசியம் என்ன என்பதைக்கண்டறிய பொது ஜனங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். அல்லது ஸ்ரீ வரதராஜுலுவின் தேசாபிமானமும் தேசிய பிரசாரமும் வயிற்றுப்பிழைப்புக்காக அல்ல என்று யாராவது சொல்ல வருவார்களானால், அவர்களாவது மேல்கொண்ட விஷயங்களுக்குச் சமாதானம் சொல்லவேண்டுமாய்வேண்டிக் கொள்ளுகிறோம்.

எனவே நமமுடைய முன்னேற்றத்திற்கும் நமது விடுதலைக்கும் முதலாவது எதிரிகள் பார்ப்பனர்களும் ஸ்ரீ வரதராஜுலு போன்ற கோடாரிக்காம்புகளுமா, அல்லது அடியோடு சர்க்காரதானா? என்பதையும் யோசித்து முதலில் எதை ஒழிக்கவேண்டும் என்பதைத் முடிவு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு இவ்வியாசத்தை முடிக்கின்றோம்.

"திராவிடன்"

ஸ்ரீமான் நாயக்கர்.

ஸ்ரீமான் நாயக்கர் சென்னையிலிருந்து நேற்று வந்தவர் மறுபடியும் நேற்றிரவே மதுரை செல்கிறார். அவ்விடமிருந்து இரண்டு நாட்களில் திரும்புவார்.

மருத்துவதிலகம்.
எம், ஆர், நாராயண சாமி பிள்ளை யின்
வேண்டுகோள்.

அன்பார்ந்த மருத்துவகுல சகோதார களே, நாம் இப்போது தான் இடைவிடாது முயற்சி செய்ய ஆரம்பித்துள்ளோம். உலமானது அபிவிருத்தி யடைந்துக்கொண்டே வருகின்றது. அம் முன்னேற்ற முயற்சிக்கு, மகா நாடுகள் ஓர் சிறந்த சாதனமாகும். உலகமுன்னேற்றத்தையும் ஜனசமுகத்தின் கருத்தையும், பலர் கூடி யோசித்து ஒரு முடிவு செய்து அம்முடிவை நிறைவேற்றுவதற்கு வேண்டியன செய்து அதை செய்கையில் கொணர்வதே சரியானவழி யாகும். (இதுவே மகாநாடெனப் படும்) ஒவ்வொரு தாலுக்கா, அல்லது ஜில்லாக்கள் தோறும் நம் மருத்துவகுல மகா நாட்டைக் கூட்டி கல்வி கேள்விகளைப்பற்றியும் நாம்இனி நடந்து கொள்ள வேண்டிய கடமையையும் சகோதரர்களுக்கு எடுத்துக் காட்டி நித்திரையினின்று மீண்டும் அன்னவர்களை எழச்செய்விக்க வேண்டியது (நம் குலத்தலைவர் பண்டிட், எஸ், எஸ், ஆனந்தம் பிள்ளையவர்கள்) கடமையே யாகும்.

மருத்துவ சகோதர்களே, நம் தாய் நாட்டில் எழுதப் படிக்கத் தெரியாத நம் குலத்தவர்கள் மிக அதிகமாக வுள்ளார்களென்பது நான் சொல்லாமலே உங்களுக்குத் தெரியவரும்' பரிதாபம்! பரிதாபம்!!

கல்வி என்பது சில எழுத்துக்களைக் கூட்டிப் படித்தல் மாத்திரமன்று. அறிவின் விளக்கமே கல்வி யெனப்படும். ஆகலின் எங்குலத்தவர்களே. இனி வரும் நமது சந்ததிகளுக்கு அறிவு விளககதிற்கு வேண்டிய கல்வியும் போதிக்க வேண்டிய முயற்சி ஒவ்வொரு நண்பர்களும் செய்ய வேண்டு மென துணிந்துரைக்கின்றேன். அன்னதானத்தைப் பார்க்கிலும் வித்தியா தானமே பெரிது.

என் நேசமுள்ள மருத்துவ குல சகோதரர்களே, இந்தியாவின் ஏழ்மையையும் தாழ்மையையும் எண்ணி எண்ணி ஏக்கமுற்று இரத்தக் கண்ணீர்ச் சொரிந்த அதி மேதாவியான ஸ்ரீமத் விவேகாநந்த சுவாமிகள் எழுதின கடிதத்தி லொன்றைப் பாருங்கள அதாவது:—

வாருங்கள் "மனிதர்களாயிருங்கள், அபிவிருத்திக்கு எப்போழுதும் எதிரிடையாக விருக்கின்ற புரோகிதர்களை வெறுத்துத் தள்ளுங்கள். ஏனென்றால் அவர்கள் ஒரு பொழுதும சீர்பட மாட்டார்கள். அவர்களுடைய ஹிருதயங்கள் ஒரு போதும் விசாலமாகா. அவர்கள் நூற்றுக்கணக்கான வருஷங்களாயுள்ள மூடக் கொள்கை கொடுமை இவற்றினின்றும் முளைத்தெழுந்தவர்கள். வைதீகக் கொடுங் கோன்மையைக்களைந் தெரியுங்கள். "வாருங்கள், மனிதர்களாயிருங்கள்; உங்களுடைய நெருங்கிய பொந்துகளினின்றும வெளியில் வாருங்கள். பரந்த உலகததைப் பாருங்கள். ஜன சமூகங்கள் எங்ஙனம முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றன என்பதை இரு நேத்திரத்தாலும் பாருங்கள். மனிதனை நீங்கள் நேசிக்கின்றீர்களா? உங்களுடைய தேசத்தை நீங்கள் நேசிக்கின்றீர்களா' அப்படியானால் வாருங்கள். நாம் இன்னும் உயர்ந்ததும் நலம் தரத்தக்கதுமான விஷயங்களில் முயற்சி செய்வோம், திரும்பிப் பார்க்காதீர்கள். மிகவும் அருமையானவர்களும், மிகவும் நெருங்கியவர்களும் அழுத போதிலும் திரும்பிப் பார்க்காதீர்கள்"

ஆதலால் சுவாமி விவேகாநந்தர் கூறியுள்ள வழியே நமதுஏழை ஜன சமூகத்தில் அறிவைப் பரப்புவதற் கேதுவாகிய உபதேசம்.

சென்னை தென்னிந்திய
மருத்துவர் சங்கம்.'
பொதுக் கூட்டம்

23-3-28 வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்குச் சங்க நிலயத்தில் தென்னிந்திய மருத்துவர்களும் மற்ற அன்பர்களும் பாபு சு. ஜான்சிங் அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டமாக கூடினார்கள். சபைத்தலைவர் வட இந்திய மருத்துவ மகாஜன சங்கத் தலைவரான பாபுசுஜான்சிங் அவர்களுக்கு நல்வரவு கூறி அவர் மருத்துவர்களின் நலத்திற்காக வட இந்தியாவில் செய்து வரும் ஊழியங்களைப்பற்றி வந்திருந்தவர்களுக்கு எடுத்துக்கூறி நடை பெறும் கூட்டத்திற்கு சுஜான்சிங் அவர்களைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டார் பாபுசுஜான்சிங் தலைமை வகித்தார். பல பிரமுகர்களால் அனுப்பப்பட்ட தந்திகளும் கடிதங்களும் கூட்டத்தில்காரியதரிசியால்படிக்கப்பட்டன

தலைவர் பாபுசுஜான்சிங் இந்தியாவிலுள்ள மருத்துவர்களின் தற்கால ஏழ்மைநிலையைப் பற்றிப் பேசி மருத்துவர் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய அலுவல்களைஎடுத்துக்கூறினார்,

பின்னர் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் இண்டியன் மெடிகல் ஸ்கூலைப்பற்றியும் மற்றும் பல விஷயங்களை பற்றியும் பேசினார். பின்னர் பல பண்டிதர்கள் பேசினார்கள். பல தீர்மானங்கள் நிறைவேறின

இரவு எட்டரை மணிக்குக் காரியதரிசி அவர்கள் அவைத் தலைவருக்கும் மற்றவர்கட்கும் வந்தனம், கூறி கூட்டம் கலைந்தது.

சிவ தருநாதன்.

பூளைமேடு P S G நாயுடு அன் சன்ஸ்,
அறநிலைசருவசனம் கல்லூரி விடுதி
மாணவர் கழக ஆண்டு விழா.

இவ்வாண்டு விழா மகிலான்பட்டி உயர் திருவாளர் பண்டிதமணி மு கதிரேசசெட்டியார் அவர்கள் தலைமையில் 10-3-28 சனிக்கிழமையில் நிறைந்த சிறப்புடன் நடைபெற்றது. பல அறிஞர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் அரிய சொற் பொழிவுகள் நிகழ்த்தினார்கள். மாணவர்கள் பரிசுகள் வழங்கப் பெற்றனர். மாணவர்களும் தலைவர்களும் புகைப்பட மெடுக்கப்பெற்றார்கள், தலைவர் முடிவுரைகூற விடுதித்தலைவர் பி. எஸ். வேணுகோபால் நாயுடு வந்தனோபசாரம வழங்க ஆண்டுவிழா இரவு 9. 30, மணிக்கு இனிது நிறைவு பெற்றது.

ஒரு நிருபர்.

மருத்துவகுல சகோதரர்களுக்கு
அறிவிப்பு.

இராமனுதபுரம் ஜில்லாவைச் சேர்ந்தமுக்கிய நகரங்களிலும் முக்கிய கிராமங்களிலும் இருக்கும் நமது மருத்துவ குல சகோதரர்கள் இது காலபரியந்தம் நித்திரையை விட்டு விழிக்காதிருப்பதைப்பற்றி விசனிக்கத்தக்கதாகும்.

இவர்கள் காலவேற்றுமையால் கல்வி அறிவு இன்றி நாளடைவில் தாழ்த்தப்பட்டும் தாழ்வடைந்தும் வாலாயினர். இந்தக்குறையை நிவர்த்திக்க இதுவே தருணமாகும்.

ஜில்லா மருத்துவகுல மகாநாடு, மாகாண மகாநாடுகளைக் கூடிய சீக்கிரம் நடத்த முயற்சி செய்து வருவதால் இராமனுதபுரம் மருத்துவகுலசகோதரசகோதரிகள்முன்வர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றோம் இடம், காலம் முதலியவை பின்னுல் அறிவிக்கப்படும்.

(ஒப்பம்) வி. எம். வீரணன்.
பரமக்குடி.

மதுரை தமிழ்நாடு வாலிபர்
சங்கத்தின் அநுதாபக் கூட்டம்.

தமிழ்நாடிலுள்ள தமிழர்களுடைய முன்னேற்றத்திற்காக சதா உழைத்துவந்த உத்தம தேசபக்தர் உகதமபாளையம் ஜமீன்தார் ஸ்ரீமான் எம் டி. சுப்ரமணிய முதலியார் திடீரென்று விண்ணுலுற்றாரென்று அறிந்து "மதுரை தமிழ்நாடு வாலிபர் சங்கத்தார்" எல்லோரும் ஆற்றொணுத்துயரத்தை அடைகிறோம். இவர் பிரிவால் தமிழ்நாடு ஓர் உத்தம தியாக மூர்த்தியையும் தேச பக்தரையும் இழந்தது. இவர் இறந்தமையால் பெருந்துணையிழந்த நாம் நம் அடங்காத்துயரத்தை அவர் குடும்பத்தாருக்கு அறிவிக்கின்றோம் திரு முதலியாரவர்கள் ஆத்மாசாந்தி அடையுமாறு கடவுளை பிரார்த்திக்கின்றோம்.

காலஞ்சென்ற திருவாளர்
எம் டி' சுப்பிரமணிய முதலியார்
அவர்களுக்கு
திருப்பூர் சுயமரியாதை வீரர்களின்
அனுதாபம்.

25-3-28-உ ஞாயிற்றுக்கிழமை இரவு 8-மணிக்கு ஸ்ரீ அங்கப்ப செட்டியார் இலவச வாசகசாலையில் திருவாளா சி. பி. முத்துசாமி செட்டியார் அவர்கள் தலைமையில் கூடிய மீட்டிங்கில் அடியிற்கண்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

தீர்மானம்.

மதுரை உத்தம தேசபக்தரும், ஜஸ்டிஸ் கக்ஷி தலைவருமாகிய உயர் திரு. சைவத்திருவாளர் எம். டி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் காலஞ்சென்றதைக்குறித்து இக்கூட்டத்தார் தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை அவரது குடும்பத்தாருக்கு தெரிவித்துக்கொள்ளுவதுடன் அவருடைய ஆன்மா சாந்தி அடையுமாறு எல்லாம வல்ல இறைவனை பிராத்திக்கின்றனர்.

ஒருநிருபர்.

9-ம் பக்கத் தொடர்ச்சி.

ஆனும், அந்த ஆற்றிலே மூழ்கின பெயருக்கு அன்பும், துணிவும், தவமும், ஞானமும், அடிமைகளும் உண்டாம் என்பதே.

இப்படியே ஒவ்வொரு நதியைப்பற்றியும் ஒவ்வொரு புராணம் உண்டு. இப்படிப்பட்ட ஸ்தல புராணக் கதைகளநேகமுண்டு. அவைகளையெல்லாம் இதில் எழுதயிடம் போதாதாகையால் இம்மட்டோடே நிறுத்தி மற்றதையும் கவனிப்போமாக.

தீர்த்தங்களைக் குறித்துச் சொல்லிய புராண ஆகம சாஸ்திரங்களை நம்பி உங்களை நீங்களே மோசத்திற்குள்ளாக்கிக் கொள்ளாதீர்கள்.

ஏனெனில் சரீரத்தைத் தண்ணீரினாலே கழுவுகிறது உங்கள் ஆத்மாக்களின் பாவங்களை நீக்குமென்று நம்பாதீர்கள். உள்ளான அசுத்தத்தையல்ல, புறம்பான அசுத்தத்தையே தண்ணீர் நீக்கும் என்பது எத்தேசத்தாரும் ஒப்புக்கொள்கிற சத்தியமாயிருக்கிற அநுபவமல்லவா? ஓம் இப்படிப்பட்ட பொய்யான உபதேசத்தை பலர் நம்புகிறதினாலே கங்கை முதலிய நதிகளிலே ஸ்நானம் பண்ணி பாவத்தைத்தீர்த்துக்கொள்ளுவோமென்று துணிந்து அநேக பாதகங்களை செய்கிறார்கள்.

இவர்கள் ஸ்நானம் பண்ணுகிறதினாலே பாவந்தீர்ந்து முத்தி அடையமாட்டார்களென்று நமது முன்னோர்களில் புத்தியுள்ளவர்கள் நன்றாய்க்கவனித்து பாடல் பாடி நூல்களில் எழுதி எச்சரித்துமிருக்கிறதையும் பாருங்கள்.

அகப்பேய்ச் சித்தர்:—'தீர்த்தமாடினாலும் அகப்பேய் தீவினை போகாதே.
ஊத்தைப்போனாலு மகப்பே யுள்வினை தீராதே.
ஆறுகண்டாயோ வகப்பே யந்தவினை தீரத்
தேறித்தெளிவதெல்லா மகப்பேய் தீர்த்தமாமடியோ' என்கிறார்.

சிவவாக்கியர்,—"காசி காசியென்று நீர் கால் கடுக்க வோடுநீர்.
காசியோடி யாடினும் கறுப்பு வெள்ளையாகுமோ
ஆசை பாசம் விட்டு நீரைவருமொடுங்கினால்
காசிநீரு மும்முளேகாணலாகு முண்மையே" என்றும்
"நீரையள்ளி நீரையுன்னி நீர் நினைந்த காரியம்
ஆரையுன்னி நீரெல்லாம் அலத்திலே யிறைக்கிறீர்
வேரையுன்னி வித்தையுன்னி வித்திலே முளைத்தசீர்
சீரையுன்ன வல்லிரேல் சிவபதங்கள் சேரலாம்" என்றும்
"மயத்து நீ ரிறைத்து நீர் கைகள் சோர்ந்து நிற்கிறீர்.
மனத்துளே மொன்றிலா மதியில்லாத மாந்தரே
அகத்து நீரைக்கொண்டுனே அமுருந்தவல்லிரேல்.
நினைத்திருந்த சோதியும் நீருமல்ல இல்லையே" என்றும் போதிக்கிறார்.

தாயுமானவர்:—"ஆழித்துரும்பெனவே அங்குமிங்கு முன்னாடிமை
பாழிற்றிரிவதென்ன பாவம் பராபரமே" என்று வெளியிட்டிருக்கிறார்.

இதை வாசிக்கும் என் சகோதரர்களே, நம்மை வஞ்சிக்கிற ஆரிய பிராமணர் உண்டாக்கிய இவைகளான பாதையிலே, அதாவது விரதமிருப்பது, தீர்த்தமாடுவது, யாத்திரை செய்வது போன்றவைகளினால் பாவம் தீர்ந்து பரகதி அடைவதில்லையென்று மேலே எடுத்துரைத்திருக்கிற பாடல்களைக்கொண்டும் நியாயங்களைக்கொண்டும் திருஷ்டாந்தப்படுத்தி இருப்பதை நீங்கள் காணும் பொழுது விரதமிருப்பதும் ஸ்தலங்களை தரிசிப்பதும் நினைப்பதும் தீர்த்தமாடுவதும் பாவம்போக்கும்வழி அல்லவென்று உடன்பட்டுக்கொள்ள நியாயமுண்டாயிருக்கிறதல்லவா?

ஆகையால் இனியாவது இப்படிப்பட்ட பலனற்ற காரியவழிகளில் நாட்களை வீணில போக்கிக்கொண்டிராமல் நமது முன்னேற்றம், பிறப்புரிமை, மார்க்க சுயாதீனம், ஜாதி பேத மதமில்லா சகோதரத்துவம் முதலியவைகளை ஊக்கத்துடன் நாடெங்கும் பரப்பி தெளிவுறும்படி எழுப்பிவருகிற 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்', 'குடி அரசு', முதலான சற்போதக பத்திரிகைகளை சோர்வுபடாமல் வாங்கி நன்றாய்க் கவனித்து நற்காரிய விஷயங்களைத்தேர்ந்து நடந்து பிறரையும் முன்னேறும்படிக்கு வழி காண்பிப்பீர்களென்று நம்புகிறேன். "தாண்டுகோல்"

பார்ப்பனீய மொழிந்த சடங்குகள்

1. புதுக்கோட்டையையடுத்தலம்பிலிகுடியில் திருவாளர் துரைசாமி நாயுடு அவர்கள் 1-3-28-ல் மண்ணுலகை நீத்தார். அவர் குமாரர் திருவாளர் ராஜகோபால நாயுடவர்கள் தமது தந்தையாரின் உத்திரக்கிரியைகளை மலாக்காவில் 11-3-28-ல் முற்றிலும் பார்ப்பனரை நீக்கிய தம்பின்பாங்கர் திருவாளர் சடகோப நாயுடுகாரவர்கள் பெருமுயற்சியால் கருமாதிகளை வெகுபரிசுத்தமாகவும் விமரிசையாகவும் செய்யப்பட்டு ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது என திரு. நவநீத நாயுடு எழுதுகிறார்.

2. திரு மலையப்ப பிள்ளை குமாரர் திரு. மருதப்ப பிள்ளை அவர்கள் தமது அன்னையாரின் திதியை மூவாரில் பிராமணீயத்தைஒழித்துத்தமிழ்மக்களை வைத்தே வெகு விமரிசையாக பந்துக்களோடு நடத்தி ஏழைகளுக்கு அன்னமளித்தார்.

3. திரு. சி. ப. முத்துவடிவு பிள்ளையவர்கள் மூவாரில் தமது தந்தையாரின் திவசத்தை பிராமணீயத்தை முற்றிலும் ஒழித்துச் சுயமரியாதைத் திதியாக பந்துக்களையும் நண்பர்களையும் கொண்டு வெகு விமரிசையாக நடத்தி ஏழைமக்களுக்கு அன்னமும் அளித்தாரென்று திருவாளர் லெ. சீனிவாசம் பிள்ளை எழுதுகிறார்கள்.

4. திருத்துறைப்பூண்டி தாலூகா, கருங்குவப்புலம் கிராமத்தில் திரு எஸ் சாமிநாதலிங்கம் பிள்ளை அவர்கள் தம் தாயார் இறந்த திதிச்சடங்கை சுமார் தம் 20 வருட பார்ப்பனப் புரோகிதத்தை முற்றும் ஒழித்து பார்ப்பனரல்லாத தேசிகரைக்கொண்டே நடத்தினார். அன்று ஏழைகளுக்கும் அன்னம் அளிக்கப்பட்டது.

5. நிகழும் பிரபவ ஆண்டு பங்குனி ஏழாம் நாள் எனது பாட்டனாருடைய வருஷாப்திக தினத்தன்று நாம் ஜீவனம் செய்கிறதை விட கஷ்டமாய் ஜீவனஞ்செய்யும் சுமார் 20 ஜனங்களை அழைத்து அவர்களுக்கு அன்னமளித்து சுயமரியாதையைக்காப்பாற்றி திருப்தியடைந்தோம். இனிமேலிருந்து எங்களது குடும்பத்தில் நடக்கும் எச்சடங்குகளிலும் புரோகிதம் அறவே ஒழித்து நடத்தவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறோம் நாங்கள் திரு. ப. ராமநாதன் எழுதுகிறார்.

6. நாசையாரிம்மன்கோவில் தெருவிலிருந்த பெரியார் 60 வயதுள்ள திரு விஜயராகவலு நாயுடு என்பார் மார்ச்சு மாதம் 14ந் தேதி சனிக்கிழமை இறந்ததை முன்னிட்டு மார்ச்சு மாதம் 25ந் தேதி பார்ப்பன நாற்றத்தை அறவேஒழித்து கருமத்தைச் சிறப்பாக அவர் மைத்துனர்களான திரு பொ. லெக்ஷ்மிபதி நாயுடு அவர்கள் நடத்தினார்கள். அன்றியும் இறந்தவர் பெயரால் ஏழைகளுக்கு திருப்தியாக காலை ஆகாரமும் சாப்பாடும் அளித்தனர். ஷை சுயமரியாதை வீரராகிய பொ. லெக்ஷ்மிபதி நாயுடு என்பவரும் 3 வருஷமாக தம் இரு மனைவிகளுக்கு வரும் வருஷாந்தர திதிகளையும் பார்ப்பனரைக் கொண்டு செய்வதே கிடையாது. அவர் தம்பியாகிய திரு பொ. வேணுகோபால் நாயுடு என்பாரும் இறந்தவர்கள் பெயரால் ஏழைகளுக்கு அன்னமளிப்பதைத் தவிர வேறு எதுவும் செய்வதில்லை. மேற்படி திரு லெக்ஷ்மிபதி நாயுடு கருமம் நடக்கும் இடத்தில் இவ்வித சுப அசுப காரியங்களில் பார்ப்பனர்கள் ஏமாற்றும் வழியைப் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். அனைவரும் நியாயமென்ன ஒப்புக் கொண்டு கண்விழித்தனர்.

7. 25-3-28-ல் சென்னை ஜியார்ஜ் டவுன் அண்ணாப் பிள்ளைத் தெரு 25-ம் எண் தமிழ் மாதர் கழக காரியாலயத்தில் சங்கக் காரியதரிசியும் பிராணப்பிரசங்கியாருமாகிய பண்டிதை நாராயணி அம்மாள் அவர்கள் கணவர் M. அப்பாதுரை முதலியார் அவர்கள் தம் பிதா இறந்து முப்பது ஆண்டுகளாக பார்ப்பனரைக் கொண்டே திதிகொடுத்து வந்தார் இம் முறை பண்டிதை நாராயணி அம்மாளின் முயற்சியால் அத்திதி பார்ப்பனரில்லாமல் நடத்தப்பட்டு அன்று ஏழைகட்கு அன்னமிடப்பட்டது.

8. 26-3-28 திங்கட்கிழமை அன்றையத் தினம் நாகபட்டணம் கீரக்கொல்லத் தெருவு திருவாளர் வீராசாமி நாயுடு பெண்ஜாதி வெங்கட்டம்மாளுடைய, உத்தரக்கிரியையாகிய கருமாந்தரத்தை அந்த அம்மாளுடைய புத்திரர்கள வீ. சவுந்தரராஜ நாயுடுவும, வீ. நாராயணசாமி நாயுடுவும பார்ப்பனர்களுடைய புரோகிதத்தை விலக்கி பார்ப்பனர் அல்லாதாரைக்கொண்டு சந்தோஷத்தோடு உறவின்முறையாரும மற்றோரும கொண்டாடும்படிக்கு நடத்திவைத்து பலருக்கும் விருந்தளித்தார். அங்கு விஜயஞ்செய்திருந்த வைதீகர்களும் மற்றையோரும் பார்ப்பனர் அல்லாதாரின் இயக்கம் நீடூழி வாழ்க 'குடி அரசு' குவலயமுழுதும் பரவுக, 'திராவிடன்' தேசமுழுதும் செழித்தோங்குக. 'ஜஸ்டிஸ்' கக்ஷி சபைகளிலும் பரவுக, என வாயார வாழ்த்தினார்கள்.

அந்தோ விண்ணுற்றார்!

அருப்புக்கோட்டை பிரபல குடும்ப வழித்தோன்றலும், வைக்கம் சத்தியாக்கிரகத்தில் தொண்டாற்றியவரும் நமது 'நாடார்குல மித்திரன்' ஆபீஸ் மானேஜர் பதவி வகித்து வந்தவருமான திருவாளர் பெ. திருமேனி நாக நாடார் அவர்கள் 23-3-28-௳ வெள்ளிக்கிழமை மாலை 5-மணிக்கு விண்ணிற்றார்.

7-ம் பக்கத் தொடர்ச்சி

ண்டீர் கலிவலி மிக்கோனைக் காலால் செற்றக் கைலாயநாதனையே காணலாமே" என்று பாடுவதையும், நம்மாழ்வார், "கலியுகமொன்றுமின்றிக்கே தன்னடியார்க்கருள் செய்யும் ......" என்று உரைப்பதையும், இப்படியாகப் பலவிடங்களில் அவர்களது பாடல்களில்,—காணக்கிடைக்கும். இந்த ஞானதிருஷ்டிக்கார ஆசாமிகளுக்கெல்லாம் நம் கலியுகமானது பொல்லாத யுகமாய் தோற்றம் போலும். இந்த 'ஞானிகளைப்'போலவே பார்ப்பார 'முனிகளும்' இப்படியே நம் கலியுகத்தைப்பற்றி நடுங்கி, இழித்துக்கூறி தமது 'ஞானதிருஷ்டி' வல்லமையை நமக்குக் காட்டியிருக்கின்றனர்.

நூற்றுக்கணக்காகச் சத்திரம் கட்டிப் பார்ப்பாருக்கே எல்லாவழியாலும் உபசாரணை செய்துவிட்டு, ஏழைகளைப்பட்டினிபோட்ட அக்காலம் போல் இக்காலம் இல்லையென்றும், ஆதலால் கலியுகம் பொல்லாதது என்றும அவர்கள் அறிவின்றி மூட நம்பிக்கைக் கொண்டிட்டனர்! இக்காலம் தான் நியாயம் என்பது எப்படிப்பட்டதென்று புலப்பட்டிருக்கிறதென்றும், சகல மனிதரும் சமத்துவம் என்றும்,எவர் வேண்டுமாயினும் (ஐரோப்பியர் அமெரிக்கர் ஏனையோர் உள்பட) யோகம்செய்து பிரம ஞானநிலையடையலாமென்றும், அதற்கு ஷை வேள்விகளும் அவற்றை விழைந்த தெய்வங்களும் இடையில் வேண்டாமென்றும் அறியக்கிடக்கிறது. இப்போதுதானே, ஷையார் தம் 'அபூர்வ கொள்கை'களைப்பரப்பிய நாட்டைவிட எவ்வளவோ நூறு பங்கு பூபாகம் உளது என்று தெரியலாகி, சகல வித க்ஷேமமும் 1-க்கு 4-பங்கான விவசாய அபிவிர்த்தி மார்க்கமும், கல்வியும் ஆராய்ச்சியும் சுயமரியாதையும் பல நூறு நூதன சௌகரியங்களும் பிற மத நட்புக்கொள்கையும், அறிவு விசாலமும் இன்னும் பலவும் ஏற்படலாயிற்று. இது விரிக்கிற் பெருகும். இவ்வளவு எல்லைக்கு நான் வளர்த்தியதேனெனில், பண்டைக் கால ரிஷிகளிடம் பாடம கற்றுக் 'கடவுள் அவதாரமான' ராமன் ஏமாந்ததைப்போல, சமீப காலத்திய சைவ வைணவ 'முனி'க்கணத்தினரிடம் நாம் பல பாடங்களைக்கற்று ஏமாறக்கூடாதென்று காட்டவும், ஷை சாதாண (ஞானதிருஷ்டி) அறிவு,ஆராய்ச்சி, யூகம கூட சிறிதும் இல்லாதவரது மற்றைய பல ஆபாச உரைகளையும்,—தேசத்தைப் பாழ் செய்யக் கூடிய உரைகளையும்—சுயமரியாதைக்காகாத உரைகளையும்—பார்ப்பாரையே ஓயாது புகழ்ந்த உரைகளையும் நாம் ஒருக்ஷணமும் பின்பற்றினுல் நாம் விருத்தியாகிறகாலமாகாது என்றும் காட்டவுமே. (ஷை ஆழ்வார்கள்—நாயனர்கள் பிரபந்தங்கள்-தேவாரப்பாடல்கள், பெரிய புராணம் இவற்றையெல்லாம் ஆபாச அநாகரீகம் புதைந்த கிடங்கு என ரூபித்து எவரும் சிரிக்கச் சிரிக்க, தனிப்பட நான் கட்டுரை யெழுதி எடுத்துக்காட்டுவேன்) பண்டைய ரிஷிகளும் ஷை பெரியார்களும் தற்கால மிருக்க நேர்ந்தால் நம் தற்கால சுயமரியாதைப் போக்கையே நன்றென்பர் எனவும் நான் கூறுவேன். "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்று பாடிப் பாடி இன்னும் இன்புறும் கணத்தைப்பற்றி எனக்கு லட்சியமில்லை.

ராமனை விட்டு விலகி இன்னும் ஒருவரியும் எழுதவேண்டியேற்படுதற்கு வருந்துகிறேன். பலர் 'தெய்வங்களையும்' 'அவதாரங்களையும்' குற்றத்திற்குட்படுத்திக் கூறக்கூடாதென்றும், ஷை ரிஷிவர்க்கமும் பயமுறுத்தியுள்ள தன்றியும் ஷை சமீபகாலத்த 'பெரியவர்'களும், யமன் உளன் என்று தம் பதிகங்களிலெல்லாம் சொல்லமுற்படுவதையும் காட்டுகிறார். நான்ஒரு உதாரணம் மட்டும் காட்டுகிறேன்:—"......தடுத் தாட்டித் தருமனார் தமர் செக்கிலிடும் போது தடுத்தாட்கொள்வான்......" என்று சுந்தரமூர்த்தி நாயனர் என்பவர் சில அசட்டுவார்த்தைப் பாட்டுகள் பாடுகிறார். இதற்காகவே யமன் இப்பொழுது இல்லை யென்று எடுத்துக்காட்டி விட்டு நான் பயப்படுபவரைத் தைரியப்படுத்தி மேற்செல்ல வேண்டியதாக,விருக்கிறது.

பாகவதத்தில் கூறப்பட்டதாயுள்ள, இயமனைப்பற்றிய ஒரு கதை:-இயமன்நீதிதிரிப்புச் செய்கையில் அவனது தலைக்குமேல் ஒரு மயிர்க்காம்பில் கட்டித்தொங்கவிட்டுள்ள ஒரு மலையுள்ளது. அதன் கீழ் அவன் உட்கார்ந்து விசாரிக்கும் ஆசனமும், அவ்வாசனத்தின் கீழ் ஒரு அக்கினி ஆறும் ஓடுகிறது. எமன் நியாயம் தவறினுல், ஷை மலை அறுந்து விழுந்து அவன தீயில் அமுங்கி ஒழிவான். இப்படியிருக்க ஒரு நாள் அவன் மார்க்கண்ட ரிஷியென்ற ஒரு வரைக் கழுவேற்றி விட்டான். அவர்காரணம் கேட்டபோது, அவன்,அவர் சிறு வயதில், பறக்கும் பூச்சிகளைப் பிடித்து ஊசியால் குற்றினுர் என்ருன். இதைக் கேட்ட ரிஷி, நான் இளவயதில் செய்த பாவத்திற்குப் பெற்றோர் அல்லவா ஜவாப்தாரி யென்று கூறி யமனை மனிதனுய்ப் பிறக்கச் சபித்தார்.

வாசிப்பவர்களே, இந்த ரிஷியானவர் தான் தவசி என்ற தன்மையினுல், யமனுக்குச் சாபம் கொடுத்திட்டார். ஆனுல், அவனது தலைக்குமேல்உள்ள கல்மலையானது அவன் அநியாயத்தைச்செய்கையில்ஏன் அவனை அக்கினியாற்றில் தள்ளி புதைக்க வில்லை? இந்த ரிஷியை அக்கிரம தண்டனை செய்தது போல் சாதாரண ஜனங்களையெல்லாம் அவன் தவறியேதண்டித்திருந்திருப்பானே. அப்பொழுது அந்தப் பாவம் போன வழி எது? மேலும் ஆராய்வோம்; தொங்கிய அம்மலை அவனது தலைக்குமேல் விசித்திரமாய் தொங்கிக்கொண்டே தானே சும்மா விருக்கும் அதற்கு மனமும் கண்ணும் இருந்தால்தானே அது சமயம் பார்த்து அறுந்து விழும. அல்லது அந்தக் கல்லை யாரேனும் தள்ளினுல்தானே விழும். அப்படியெல்லாம் இருப்பதாகச்சொல்லியில்லையே.

இனிமேல் ஒருவேடிக்கையைநோக்குங்கள்:எமன் செக்கிலிட்டுஆட்டுவான்எனசுந்திரமூர்த்திநயனுர்என்ற ஆசாமி தான்பயப்படுவதாகக்கூறிப்பாடி எல்லாரையும் மூடராக்கினுனே.யமனும் எமலோகத்திலுள்ளவேலைக்காரர்களும்இப்பொழுது எப்படியிருக்கின்றனர் தெரியுமா? இந்தியாவில்-பொதுவாய் ஐரோப்பிய உலகில் பாவம் குறைந்து வருவதால் யமலோகத்தில் எத்தனையோ'செக்கு'களும் குத்தாயுதங்களும் வெட்டாயுதங்களும் உபயோக மற்றுப் போய்ச் சும்மா கிடக்கும். செக்குகள் யாவும் வேலையின்றிக் கெட்டுப் போய்க்கிடப்பதன்றியும் எமலோகத்தில் 1 கோடி வேலையாட்கள் வேலையில்லாமல் எடுபட்டு வருகின்றனர். மேலும் அவர்களும் எமனும் நம கவர்மெண்ட் விதிக்கும் தண்டனை மார்க்கங்கள் இலகுவானதாயும் நாகரீகமானதாயும் நீதியானதாயும் அறிவுபொருந்தியும் இருப்பதைக் கண்டுவெட்கி,பாடம் கற்றவராய்,செக்கு முதலியவற்றைஒழித்துவிடஎண்ணியுள்ளனர். அல்லதுதாம் இதுவரை செய்து வந்த பாவங்களுக்காகத் தவம் செய்து அவற்றை ஒழித்துக் கொள்ள எண்ணி, வேலையை விட்டுப் போகப்போகின்றனர் என்பேன். ஒருக்கால் எமன் சிவனிடம் ராஜிநாமா தந்திருப்பான். அன்றியும் அவனும் அவனது வர்க்கமும் ருஷியாவிலுள்ள தண்டனை முறைகளைக்கற்று வரவாவது போயிருப்பார். எமன் நம் சுயமரியாதை உணர்ச்சியைக் கண்டு திடுக்கிட்டுப் போய், சாதிபிரித்துப் படைத்த பிர்மனையும், ஒழுங்கான சமத்துவ நீதி காட்டாத அவதார விஷ்ணுவையும், அக்கிரமங்களை வேடிக்கை பார்த்து நேற்று வரைக்கும் களித்த சிவனையும் தூற்றிக் கோபித்துவிட்டு, எங்கேனும் போயிருப்பான். இப்படியெல்லாம் அவன் செய்தில்லாவிடில், பரசுராமன் என்ற ஒரு விஷ்ணுவை ராமன்என்ற இன்னொரு விஷ்ணு ஒடுக்கியதுபோல அவனைச் சிவன் ஒடுக்கியிருக்கவேண்டும். சிவன் இப்படிச் செய்து தானும் திருந்தியில்லாவிடில, நரசிம்மனைச் சாபம் கிழித்தது போல பிரம்மமானது மேற்படி சிவனைக் கிழித்தெறியவோ, ஒடுக்கவோ, தண்டிக்கவோ கூசாது என்பேன். பின்னர் எப்படித்தான் மேற்படி தெய்வக்கார ஆசாமிகளின் கொடுமைகளுக்குத் தண்டனையும் கர்மவிதியும் வாய்ப்பது? ஆகவே; நம் சுயமரியாதை நெறியினின்றும் நம்மைப் பிரித்து ஏமாற்றிய அயோக்கியப்பாவிகள் யாவராயிருப்பினும் நாம ஏன் பயப்படவேண்டும்?

இனி ராமனையே தடையின்றி தொடர்வேன். (தொடரும்) ஞானனந்தன்.

சென்னிமலை யூனியன் போர்டு, பிரசிடெண்டு தேர்தல்.

சென்ற 26-3-28 தேதி திங்கள்கிழமை மாலை டெம்பாரி பிரெசிடெண்டு மிஸ்டர் செ ராமசாமி முதலியார் அவர்களின் தலைமையின்கீழ்க்கூடிய சென்னிமலை யூனியன் போர்டு ஸ்பெஷல் மீட்டிங்கில் யூனியன் போர்டு மெம்பர் மிஸ்டர் மு. பழனியப்ப முதலியார் அவர்கள் எல்லோராலும் ஏகமனதாகப் பிரசிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

ஓர் நிருபர்.

இரு சிறுர் உரையாடல்.

இலங்கை குலசேகரப் பாவலர் எழுதுவது.

கனகசபாபதி:— என்ன நண்ப, எப்போதும் 'குடி அரசு' பத்திரிகையுங் கையுமாயிருக்கின்றீரே,

முருகேசன்:— ஆம் தடை என்ன. இப்பத்திரிகையை எத்தனை முறை வாசித்தாலும் தெவிட்டாதல்லவா.

கன:— ஓ! உமக்கு ஆசையை விளைவித்தது என்னவென்று எனக்குத் தெரியும். சொல்லட்டுமா?

முரு:— சொல்.

கன:— அப்பத்திரிகை பார்ப்பனருக்குச் சரியான பூசை போடுகிறதல்லவா? நீரும் அக்கொள்கை உடையவராதலின் அதைப்போற்றுகிறீர். நான் 'குடி அரசை' முற்றும் வெறுக்கிறேன். 'வேதியரோடெதிர்த்து வென்றாலும் வசை, தோற்றாலும் வசை' என்ற முதுமொழிச் சின்படி ஏழைகளாகிய பிராமணருடன் எதிர்ப்பது நன்றல்ல.

முரு.— ஏழையா, நன்றாய்ச் சொன்னீர். அவர்கள் தானே சோம்பேறிகளாய் இருந்து கொண்டு மற்றவர்களை ஏமாற்றி உலகத்தில் உள்ள எல்லா தொழில்களிலும் பிரவேசித்து சகலத்தையும் கைப்பற்றி பெரும் பணக்காரராய் விட்டனர். அதனால்தானே, நம் தாய்நாடாகிய இந்தியாவில் பிராமண ஆதிக்கம் மேலோங்குகின்றது. இந்த அழுக்குப் பெயர் வழிகளே உண்மையில் தீண்டாதவராவர். – இந்த 'வேதியர்' என்று பெயர் கூறினீர். இப்பெயர் அவர்களுக்குப் பொருத்தமே. எப்படியெனில் வேதித்தல் என்றால் மாறு படுத்தல், மயக்குதல், ஏமாற்றல என்று பொருள்.

எனவே வேதியர் என்றால் மாறுபாடான கொள்கையுடையவர், ஏய்ப்பவர், ஏமாற்றும் கொள்கையுடையவர்கள் எனலாம். இவர்கள் எவ்விஷயத்திலும் உண்மைக்கு மாறுபாடானவர்களென்பதையும், மேற் கூறிய பெயர் அதனாலேயே அவர்களுக்கமைந்த தென்பதையும் பின்வருஞ் செய்யுட்களாலும் மற்ற நூல்களாலும் அறிக.

"தாதையாய்த் தம்மை நல்கித்தந் தொழிற்கரிய ஞானி,
ஆகியாய்த் தங்கட்கின்றியமைவுறச் சிவனை நீங்கி
எதிலார் பக்கமாகி இல்லொழுக்கிறந்தா போலும்
வேதியர் முறையே செய்தாய் வெறுப்பதென் கின்னையானே"

இதன் பொழிப்பு:— தமது நாயகரை விட்டு அன்னிய நாயகரைச் சேர்ந்த மாறுபாடான கொள்கையுடைய பெண்களைப் போன்று மெய்க் கடவுளை நீத்துப்படிற் றொழுக்குடையோர் ஆகிய வேதியர் என்பது.

'சத்தியமின்றித் தனி ஞானந்தானின்றி
ஒத்தவிடயம் விட்டு உருமுணர் வின்றிப்
பத்தியு மின்றிப்பரனுண்மை யின்றி
பித்தேறும் மூடர் பிராமணர்தா மென்றே'

இது நிற்க பிராமணர் என்று ஓர் பெயரினைக் கூறுவீர். அதற்குப் பிரமத்தை அணவினேர் என்றோர் பொருளுண்டாயினும் அது நம்நாட்டுப்பிராமணர்க் கொவ்வாது. பின் அப்பொருள்தான் யாதோவென்றால், பிராம்—பிச்சை, அணர்—அணவினேர். எனவே பிச்சைக்குப் போகிறவர்கள் என்றபடி இது தற்காலம் மாறுபட்டுள்ளது.

கன.— மாறுபாடான கொள்கையுடையவர்களென்கின்றீர். அவர்களெப்படி இருந்தாலுமுமக்கென்ன. நீர் ஏன் அவர்களைக் கண்டிக்க வேண்டும்.

முரு.— நன்று சொன்னீர் நண்ப, பிராமணதாசன் என்பது கண்டேன். இவர்களுடைய மாறுபாடான கொள்கைகளைக் கண்டியாது விட்டால் அம்மாறுபாடான கொள்கைகளே உலகிற் பரவி விடுமல்லவா! மனுஸ்மிருதி, இராமாயணம், பாரதம், சிவராத்திரி புராணம் போன்ற பொய் நூற் கொள்கைகளே உலகில் மேலானவைகளாயோங்குமல்லவா. மனுஸ்மிருதி இராமாயணம் முதலியவற்றைப் பலரும் கண்டித்திருக்கிறார்கள். கண்டித்தும் வருகிறார்கள். அவற்றை அப்பத்திரிகையில் பார்த்தறியும். சிவராத்திரி புராணத்தைப் பற்றி பின்னர் வெளியிடுவேன். இப்புராணங்களைக் கண்டிக்கிற மாத்திரத்துடன் விடாமல் இப்புராணங்கள் கண்களிற் புலப்பட்டவுடன் அவற்றை நெருப்பிற்போட்டு பொசுக்கி சாம்பரையும் சமுத்திரத்திற் றள்ளி விடவேண்டும்.

கன.— பிராமணர் வேதியர் என்ற சொற்களுக்குப் பொருள் கூறினீர். அவர்களுக்குள் பிற பெயர்களாகிய ஐயர், அறுதொழிலாளர், இருபிறப்பாளர், என்ற இவைகளின் பொருள் என்னை?

முரு:— ஐயர் எனபது ஐயம் என்னும் பகுதியும் அர் என்னும் விகுதியும் புணர்ந்து வந்தது. ஐயம்—பிச்சை; எனவே பிச்சைக்காரர் என்பதாம். அன்றேல் சந்தேகமுடையார் என்னும் பொருள் படும்.

அறுதொழிலாளர் என்பது சிவவேள்வி வேட்டல் முதலிய ஆறு தொழிலுடையோர் எனப் பொருள்படுமாயினும் இவ்வாரியப் பிராமணருக்குக் கொள்ளுங்கால் அறுந்த தொழிலை உடையோர் என்பதாம். எனவே நன்மையற்ற தொழிலுடையோர் எனப் பொருள்படும். இருபிறப்பாளர் என்பது இரண்டு சாதியிற் பிறந்தவர்களென்று பொருள்படும். எப்படியெனில் பிரமனுக்கு கூத்தி வயிற்றிற் பிறந்தவன் வசிட்டன். வசிட்டனுக்குச் சண்டாளி வயிற்றிற் பிறந்தவன் சத்தியன். சத்தியனுக்குப் புலைச்சி வயிற்றிற் பிறந்தவன் வியாசன். இதனை பிரமர்க்குக் கூத்தி வயிற்றிற் பிறந்த வசிட்டரும், வசிட்டருக்குச் சண்டாளி வயிற்றிற் பிறந்த சத்தியரும், சத்தியருக்குப் புலைச்சி தோள் சேர்ந்து பெற்ற பராசரரும், பாராசருக்கு மீன்வாணிச்சி வயிற்றிற் பிறந்த வியாசரும் எனவரும் கபிலரகவலடிகளாலறிக. மேற்சொன்ன இவ்விருடிகளே இவரின் பழய சந்ததியாராகலின் இவரின் சந்ததி நெடுக இருபிறப்புடைய தென்பதையறிக.

கன,— சாதி வேற்றுமை பாராட்டப்படாதென்று பல முறைகளிலும் போதித்தீர். ஈண்டு சாதியைப்பற்றிப் பேசியது யாது காரணமோ தெரியவில்லை.

முரு;— நான் ஆரியரைப்போல் பிறப்பினுலுயர்வு தாழ்வு கற்பிக்கவில்லை. ஆனுல் குணம் செயல்களால் உயர்வு தாழ்வு உண்டு. "பிறப்பொக்கு மெல்லாவுயிர்க்கும்; சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்" என்ற பொய்யாமொழியையுங்காண்க. இதன்படியே பிராமணர்கள் தீண்டத்தகாதவர்களே.

கன.— ஆகா! இன்று பல விஷயங்களையறிந்தேன். எனக்கின்னும் பல சந்தேகங்களுண்டு அவைகளையும் நீரே நீக்கல் வேண்டும்.

முரு.— எனக்குப்பல வற்றைச் சொல்லவேண்டுமென்ற அவாவுண்டெனினும் கால தாமதமாய் விட்டது. வரும் ஞாயிற்றுக்கிழமை மற்றையவற்றைப் பேசிக்கொளவோம். இதுநிற்க இனிமேல் 'குடி அரசை' கவனமாய் வாங்கிப் படித்தும் படித்தவற்றை மற்றவர்களுக்குச் சொல்லியும் வருவீரென நினைக்கிறேன்,

கன:— ஆம் அப்படியே வருகிற ஞாயிற்றுக் கிழமையை (8—4—28) எதிர் பார்க்கிறேன்.

(பிரிகிருர்கள்.)

வாலாஜாபாத்,
மெய் கண்டார் மாணவர் கழகம்,
இந்துமத பாடசாலை.

மேற்படி கழகத்தின் பத்தாம் ஆண்டு நிறைவு விழா நேற்று மாலை 5 மணிக்கு செங்கல்பட்டு ஜில்லா கல்வியிலாகா ஆபீசர் திருநிறைச்செல்வர் ஏ. ராமராவ். பி. ஏ. ஐ. இ. எஸ். அவர்களின் சிறந்த தலைமையின் கீழ் வெகு விமரிசையாக நடந்தேறியது. காலையில் பந்தய விளையாட்டுகள் நடைபெற்றன. மாலை 3 மணிக்கு கல்வி ஆபீஸர் பாடசாலையைப் பார்வையிட்டார். ஆரம்ப வகுப்பில் நூதன (Daniels method) முறையில் தமிழ் கற்றுக் கொடுப்பதையும் ஆரம்ப வகுப்புப்பிள்ளைகள் வெகு சுலபமாக ஆங்கிலத்தில் பேசியதையும் கண்டு மெச்சினர். மாலை 5 மணிக்கு இளஞ்சிறுர்கள் "ஜீவகாருண்யம்" என்ற இனிய நாடகத்தை நன்கு நடித்தனர். நாடகத்தின் நேர்மையையும் மாணவர்களின் நடித்தலையும் கண்டு எல்லோரும் மிக்க மகிழ்வெய்தினர். பின்னர் தலைவராய கல்வி ஆபீசர் இப்பாடசாலை மாணவர்கள் வெறும் புஸ்தகப்பூச்சியாக ஆகாமல் திறமை வாய்ந்தவர்களாக பயிற்றப்பட்டிருப்பதை பாராட்டி நிர்வாகஸ்தர்களையும் ஆசிரியர்களையும் புகழ்ந்து பேசினர். கடவுள் வாழ்த்துடன் கூட்டம் கலைந்தது.

கல்வி ஆபீஸர் தமது பரீக்ஷை ரிப்போர்ட்டில் பல செகண்டரி பாடசாலைகளை விட இப்பாடசாலை அநேக விதங்களில் மிகவும் திறமையாக நடத்தப்படுகிற தெனக் கூறியுள்ளார்.

வா. தி. மாசிலாமணி.

குளிர்ச்சிபெற நேர்வழி.

மூலங்களுக்கெல்லாம் முதல்தரமானது, தேகத்திலுள்ள சூட்டைத் தணிப்பதில் நிகரற்றது. ஒரு முறை பரீக்ஷித்தால் அடிக்கடி இதனை வாங்கி ஆனந்தமடைவீர்கள்.

அயன்மஹா மூலிகை சந்தனாதி தைலம்.

3 மீ' வரை வரக்கூடிய அளவு டின் 1-க்கு ரூ. 1—8—0. தபால் செலவு 0—10—0. கேட்லாக் இனம்.

விலாசம்:—

சத்தியவேத வைத்தியசாலை,
வாகனேரி, நெ. 51. திருச்சி.

விழிமின் எழுமின்
பார்ப்பனீயத்தை ஒழிமின்

மதுரை பிராமணரல்லாதார் அரசியல் கமிஷன் முன் அளித்துள்ள திட்டங்கள்.

மாட்சிமை தங்கிய ராயல் கமிஷன் உறுப்பினர்களுக்கு,

மதுரை மாநகர் பிராமணரல்லாத ஜாதி இந்துக்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள், கிருஸ்துவர்கள், முகமதியர்கள் அடங்கிய கழகத்தார் 2-2-28ல் தாங்கள் செய்துள்ள அடியில் கண்டுள்ள தீர்மானங்களை மிகவும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்வதாவது.

1 மதுரை நகர் பிராமணரல்லாதார் ஜனாப் கே எ. அலாவுதீன் இராவுத்தரவர்கள் தலைமையின் கீழ் கூடி ராயல் கமிஷனை முழு மனதுடன் வரவேற்பதோடு அவர்கள் காரிய சித்தி பெற வேண்டுமென்றும் கோருகிறார்கள்.

2 முகமதியர்கள், கிறிஸ்துவர்கள், ஜாதி இந்துக்கள் தாழ்த்தப்பட்டவகுப்பினர்கள் ஆகிய ஒவ்வொரு வகுப்பினருக்கும் தனித்தனி வாக்காளர் தொகுதி வேண்டும்.

ஜனத்தொகை ஈவுப்படி ஸ்தானங்களைபிரித்துக் கொடுக்க வேண்டும்.

3 ஒரு தொகுதிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் தேர்ந்தெடுப்பது கூடாது. தேர்ந்தெடுப்பவர் தொகுதி கூடுமானவரையில் சிறிதாக இருக்கவேண்டும்.

4. வாக்காளர் உரிமையை கூடுமானவரையில் அதிகப்படுத்தவேண்டும். அதிலும் வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்காளர் உரிமை கொடுத்தல் நலமாயிருக்கும்.

5. தற்காலத்தில் சர்க்கார் உத்தியோகங்கள் பூராவும் மேல் ஜாதிக்காரர்களே அதிலும் முக்கியமாக பிராமணர்களே ஏக போக மிராசாக அநுபவித்து வருகிறார்கள். ஜனங்களுடைய சுதந்திரங்களை பாதுகாப்பதற்கு உத்தியோகங்களில் வகுபபு வாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுவது இன்றியமையாததாயிருக்கிறது.

6 எந்த விஷயத்திலும் மதசம்பந்தமென்று சொல்லி விட்டால் சர்க்கார் பிரவேசிப்பதில்லை யென்ற திட்டத்தை விட்டுவிட வேண்டும். சமூக முன்னேற்றத்திற்கு வேண்டிய சட்டங்களைத் தயார் செய்து அவைகளை அமுலுக்கு கொண்டு வரவேண்டும். என்ன வந்தாலும் சண்டை சச்சரவில்லாமல்பார்த்துக் கொள்ளுகிறோமென்று சொல்லிக் கொண்டு அரசாங்கததார் சமூக முன்னேற்ற விஷயங்களில் தலையிடாமலும் கொடுமைக்காரர்களுடைய அக்கிரமத்தை தடுக்காமலுமிருத்தல கூடாது.

7. வகுப்பு வாத சச்சரவுகள் ஏற்பட்டால் சாதாரண நீதிஸ்தலங்கள் ஒரு வகுபபைச் சாரக்கூடியதா யிருப்பதால் அதை விசாரிக்க விசேஷ நீதிஸ்தலங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

8. மாகாண கவர்மெண்டார் சட்டசபைக்கு ஜவாப்தாரியாயிருக்க வேண்டும்.

அயல்நாட்டு சம்பந்தங்கள் சைன்யம் கப்பற்படை ஆகாய விமானம் இவைகளைத் தவிர மற்றவைகளை பூராவும் மாகாண கவர்மெண்டுக்கு மாற்றி விட வேண்டும்.

வரி முதலிய சகல வருமானமும்மாகாண கவர்மெண்டையே யடையச் செய்யவேண்டும்.

எல்லா மாகாண கவர்மெண்டாரும் இந்திய சுதேச ராஜாங்கங்களும தாவாரியாக மத்திய கவர்மெண்டார் செலவுக்கு கொடுத்து வரவேண்டியது.

ஒவ்வொரு மாகாணமும் தனக்குச்சொந்தமாய் உள்நாட்டுச் சங்கம் துறைமுகச் சங்கம் ஏற்படுத்திக் கொள்ளும் படிக்கும் அதன் கைத்தொழில்வியாபாரம்முதலியவைகளை விருத்தி செய்து கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொள்ளும் படிக்கும் விடப்படவேண்டும்.

கே. அலாவுதீன் இராவுத்தர்.
வியாபாரி முனிசிபல் கவுன்சிலர்,
சபைத்தலைவர் மதுரை.

இஹும்! இனும்!! இஹும்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கோக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப் பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனும்.

ஸ்ரீ கோக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

சிந்தாமணி லேஹியம்.

(அயகாந்த செந்தூரம்.)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனானி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அசன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உறவாக்கி, நை பாகம், செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சீதோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.

2. தளர்ந்து துவண்டு மெலிவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.

3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.

4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.

5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.

6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஓடுவாதம், அஜீர்ணம் முதலியவையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், செட்டில் முதலிய பல தேசங்களில் நிகரற்ற தென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்ற நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

தெ. இ. ந. உ. சங்க கிளை
மருங்காபுரி ஜமீன் சீகம்பட்டி

17-3-28 பகல் 2 மணியிலிருந்து மாலை 7 மணிவரை காந்தி பலாவில் திரளான ஜனம் கொண்ட மகத்தான கூட்டம் ஒன்று கூடிற்று. திரு துங்கன் சொக்கனுண்டித்தேவர் தலைமை வகித்தார்.

தேவஸ்தான மசோதா, தேவதாசி சீர்திருத்த மசோதா, பௌண்டரீக யாகம், காட்டுப்பருத்தி, ஆதிராவிடர் நிலமை, குறள் விதவா விவாகம் முதலியவைகளைப் பற்றிப் பல பிரமுகர்கள் பேசினார்கள். பிறகு வந்தனோபசாரமளிக்கப்பெற்று கூட்டம் வெகு இனிமையாய்க் கலைந்ததும் 7-50க்கு மேல் சீகம் பட்டி அ. முத்துசாமி பிள்ளை, ஆ. வெள்ளைச்சாமி நாயக்கர், வெ. ஆண்டியப்ப நாயக்கர் இவர்களால் சந்தனம் தாம்பூலம் சாப்பாடு முதலியவைகள் குதூகலத்துடன் அளிக்கப்பட்டது புகழத்தக்கது.

வி. பெரியாண்டி மூப்பனார் காரியதரிசி,
தென்னிந்திய நலவுரிமைச்சங்கக்கிளை.

தமிழ் 'சுயராஜ்யா' பத்திரிகை நிருபரின் பொய்க் கூற்றுக்கு ஓர் மறுப்பு.

கடந்த 8-3-28 வியாழக்கிழமை யன்று வெளி வந்துள்ள தமிழ் 'சுயராஜ்யா' பத்திரிகையில் 'குடியாத்தம் ஐக்கிய நாணயசங்கம்' என்று தலையங்கம் கொடுத்து புனை பெயரால் வியாசம் எழுதியுள்ள நிருபரே!

நீர், ஏழைகளுக்கு பணத்தை தராமல பணக்காரர்களுக்கே சங்கத்தின் நிர்வாகிகள் கொடுத்து வருவதாய் கூறுகின்றீர். ஆனால், சங்கத்தில் வாங்கும் கடனை திருப்பிக்கொடுக்கும் யோக்கியதை யுடையவர்களுக்கே சங்கம் ஏற்படுத்தியிருப்பதே தவிர அநாமதேய பேர் வழிக்காக கொடுக்க சங்கம் ஏற்படுத்தப் படவில்லை. சங்கத்தின் கொள்கையும் அவ்வகையிலேயே இருந்து வருகிறது. அவ்வகை பொறுப்பும் அற்றவர்களுக்குப் பணத்தைக் கொடுத்து திருப்பப் பெறுவிட்டால் அந்த நஷ்டம் யாரைச் சேரும் என்பதை நீர் அறிந்திருப்பீராகில் உமது அவ்வியாசத்தை வரைந்திருக்க மாட்டீர்.

இச்சங்க நிர்வாக அங்கத்தினர்களில்சிலர் நீங்கி விட்டதாகவும் இன்னும் இரண்டொருவர் நீங்க எத்தனித்திருப்பதாகவும் கூறுகின்றீர் நீர் அதை ருஜுப்படுத்த முடியுமா? நீர் எப்போதேனும் சங்கத்திற்கு வந்து அங்கு நடைபெறும் நடவடிக்கைகளை கவனித்ததுண்டா? உண்டாயின் நீர் ஏன் ஏழைகளின் கஷ்டநஷ்டங்களை நிவர்த்திக்க ஓர் அங்கத்தினராய்ச் சேரக்கூடாது? மேல் அதிகாரிகள் மேல் பார்வை பார்ப்பதில்லை என்று எழுதியிருக்கின்றீர். அப்படியும் ஒரு சம்சயம் உண்டா?

நிர்வாக அங்கத்தினர் கல்வியற்றவர் என்பதாக கூறுகின்றீர். நீர் எவ்வளவு தூரம் கல்வியில் பயின்று இருக்கின்றீர்? நீர் எழுதியுள்ள வியாசத்தில் 'குடியாத்தத்தில் உள்ள மக்கள் அறிவு அற்றவர்களாக தோன்றுகிறது' என்றிருக்கிறது. அதில் நீரும் ஒருவர் என்று ஏற்படுகிறது. உமது வியாசம் முழுமையும் 'சொல்லப்படுகிறது' 'தெரியவருகிறது' 'இருந்துவருகிறது' என்றமுறையிலேயே ஜோசிய தன்மையில் எழுதியிருக்கின்றீர்.

இனியேனும் நீர் எவ்விஷயத்தையும் ஆராய்ந்தறிந்து நேரான புத்தியுடன் முன் வந்து நமது ஆற்றலை காண்பிக்க கடவுள் அருள் புரியுமாறு அவனடியை பிரார்த்திக்கின்றேன் பத்திராதிபர்களும் தக்க யோக்கியதையுடைய நிருபர்களையே நியமிக்கவேண்டுகிறேன்.

ஜி. அண்ணாமலை முதலியார்.

நாகர் கோவில் "குடி அரசு" நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு.

நாகர் கோவிலில் 'குடி அரசு' பத்திரிகை விற்பதற்காக (Primier News Agency) பிரிமியர் நியூஸ் ஏஜன்சியார் அவர்களை நியமித்திருக்கிறோம்.

5-ம் பக்கத் தொடர்ச்சி

தவனிக்கிறார்கள்" என்று சொல்லக்கூடும். மனுதர்மத்தை ஆதாரமாகக்கொண்டே அநேக நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன வென்பது கவனிப்பவர்களுக்கு விளங்கும். மனுதர்மத்தைப்பற்றியே அநேக வித்வான்களும் பக்திமான்களும் செய்த நூல்களிலெல்லாம் விபசாரத்தை பக்தி என்றும், அன்பென்றும், எழுதப்பட்டிருக்கிறது. மதசம்பந்தமாக எழுதும் புஸ்தகங்களில் வரும் ரிஷிகள், அவர்கள் பத்தினிகள், வரும் தெய்வங்கள், தெய்வங்களின் பெண் ஜாதிகள், இவர்களை எல்லாம் விபசார தோஷத்திற் குட்படுத்தி அதுவே அவர்கள் கருணை என்று சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா தேசத்திற்கு முன் மனுஷ்ய சிருஷ்டி உண்டாயிற்று என்று சொல்லும் நம் தேசத்தில் எழு பெண்களை கற்புடையவர்களென்று சொல்லி அவர்களையும் விபசார தோஷமுடையவர்களென்று எழுதின கதைகள் மனுதர்ம சாஸ்திரத்தின் வாக்கியத்தை நிலை நிறுத்தவா அல்லவா? பார்வதி அர்ச்சுனனைக் கண்டு ஆசைப்பட்டாள்; பிரமனைக் கண்டு மோகித்தாள். கார்த்தவீரிய அர்ச்சுனனைக் கண்டு பரசுராமரின் தாயார் மனதில் நினைத்தாள். அர்ச்சுனன் மகனென்று தெரிந்தும் திரௌபதி மோகித்தாள். சீதை ராவணனுக்கு வசப்பட்டுப் போய்விட்டாளோவென்று அனுமார் நினைத்தார் என்ற இந்தக் கதைகளெல்லாம் மனுதர்ம சாஸ்திரத்தில் எழுதப்பட்டிருக்கும் மானசீக விபசாரத்தை மெய்ப்பித்துக் காட்டவென்று என் சொல்லப்படாது? சிவபெருமான் மன்மத ரூபமாக அமைந்து பெண்கள் தாராளமாகத் தன்னிடம் வரவேண்டுமென்று பிச்சைப் பாத்திரமேந்தி பிச்சை போடவந்த ரிஷி பத்தினிகளின் கற்பைக் கெடுத்ததும், விஷ்ணு மோகினி வேஷமெடுத்து ரிஷிகளுக்கு காமவிகாரத்தை உண்டுபண்ணி அவர்கள் வழியில் போகிறபெண்களை எல்லாம்கற்பழித்ததும், ஒருவான சங்கராச்சாரி ராஜஸ்திரீகளை எல்லாம்கற்பழித்ததும் ஆகிய கதையும், பெண்களே கற்பில்லாதவர்கள், பெண்களுக்கு விபசார தோஷம் பிரமா சிருஷ்டித்தார் என்று எழுதியிருக்கும் மனுதர்ம சாஸ்திரத்தின் 'நீதியை' நிலை நிறுத்திக்காட்டத்தானே? ரிஷியின் மனைவிகளை கடவுள் கற்பழிக்கிறதும்ராஜாவின் மனைவிகளை குரு கற்பழிக்கிறதும் மனுதர்ம சாஸ்திரத்தின் 'நீதி'யை நிலை நிறுத்தத்தானே? இந்த ஆபாசமான கதைகளை நம்பியும் ஆதாரமாக வைத்துக்கொண்டுந்தானே மலையாளத்தில் அநேக கொடுமைகள் நடக்கின்றன. அவைகள் ஒழியவேண்டுமென்றே நாயக்கர் பிரசாரம் செய்கிறார். மிஸ், மேயோ புஸ்தகத்திற்குத் துள்ளிக் குதித்த 'தேசாபிமானிகள்' இருக்கும் தேசத்தில் மனுதர்ம சாஸ்திரம் இருப்பது ஞாயமா? மனுதர்ம சாஸ்திரமும் அதை அடிப்படையாக உடைய கொள்கைகளும் இனியும் நம் தேசத்தி லிருந்தால், (இப்போது வந்திருக்கும் மேயோவிற்கு இந்த சங்கதி தெரியாது). இந்த சங்கதிகளெல்லாம் தெரியும் மேயோ ஒருவருக்குள் அக்கிரமங்களும் அபாசக்கொள்கைகளும் நிறைந்திருக்கும் சாஸ்திரமென்று சொல்லப்பட்டவைகளும் அது சம்மந்தமான வழக்கங்களும் ஒழிந்து போகாவிட்டால் வருகிற மேயோ அவைகளையும் வெளியாககித்தான் தீருவாள்என்றே 'குடி அரசு' சொல்லுகிறது.



ஆயிரக்கணக்கான குஷ்டரோகிகளை குணமாக்கினவர்!
உலகப்பிரசித்திபெற்ற பரம்பரை வைத்தியர்!!
வைத்திய ஆசிரியர் பட்டம் பெற்றவர்!!
அநேக டாக்டர்களாலும், பல பிரபுக்களாலும் நன்கு மதிக்கப்பட்டது. சகல வியாதிகளுக்கும் கைகண்ட

பழநி சி. எம். சாமி முதல் நெ.

குருதாம்பர பஸ்பம்.

இது அபார சக்தி வாய்ந்தது. குஷ்டம், மேகம், ரணம், திமிர், சூலை, கிரந்தி, மதமதப்பு, பந்துகள், தடிப்புகள், பிளவை, ஆறாத குழிப்புண், பவுத்திரம், கண்டமாலை முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். வி. பி. வேறு.

100 வேளை பஸ்பம் அனுபானத்துடன் ரூ. 50
50 வேளை ரூ. 25. ஏழைகளுக்கு பாதி விலை.

என் கடையிலிருக்கக்கூடிய ஒரு பையனுக்கு 2, 3 வருஷமாயிருந்த குஷ்டரோகப் புண்கள் எல்லாம் தங்கள் குருதாம்பர பஸ்பத்தால் பூர்ணகுணமாயிற்று.

K. K. பக்கிரி முகமது காப்பர் F. M. S. 12—8—27.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற பழநி சி. எம். சாமி,

மன்மத கோலாகல குளிகை.

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

தாதுபுஷ்டிக்கு இது நிகரற்றது. இதற்கு நிகரான மருந்து புவியிலெங்குமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். இல் வாழ்வில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. 120 குளிகை விலை ரூ. 10. 60 குளிகை ரூ. 5. மாதிரிக்கு 20 குளிகை ரூ. 2. வி. பி. சார்ஜ் வேறு.

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய அபீஸர்களின் நற்சாட்சிகளையும் கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுர்வேத வைத்திய ஆசிரியர். **C. மலையப்பசாமி.** நித்தியானந்தவைத்திய சாலை, பழனி

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:- முருகன் ஏஜன்ஸி, 43, அரமனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை.

தமிழ்ப் புக்கீப்பிங்.

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப்பதிவு, இரட்டைப்பதிவு இரண்டு பாகங்களுமடங்கியிருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையுமுடையது. வியாபாரிகள், மாணாக்கர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தேவி ஆஸ்ரமம்,
திரௌபதையம்மன் கோவில் வீதி,
புதுச்சேரி.

இனும்! இனும்!
ஸில்க் அங்க வஸ்திரம்.

பிரைஸ் சீட்டு.

என்ற இந்த சீட்டை ரூபாய் 1 விலைகொடுத்து வாங்கினவர்களுக்கு ஒரு ரூபாய் விலையுள்ள 5 சீட்டு அனுப்பப்படும். ஷ சீட்டு 5-ம் விற்று ரூபாய் 4-ம் சீட்டின் டூப்ளிகேட்டும் அனுப்பினவர்களுக்கு 4 ரூபாய் பொறுமான ஒரு சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் இனும் அனுப்பப்படும். நண்பர்களே, கவனியுங்கள். ஷ சீட்டு 5-ம் விற்று தாங்கள் கொடுத்த ரூபாய் ஒன்றும் எடுத்துககொண்டு மீதம் ரூபாய் நாலும் எங்களுக்கு அனுப்பிவிடவேண்டும். ஆகவே தாங்களுக்கு ஒரு நஷ்டமுமின்றி சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதமுள்ளது இனும் இடைப்பதை கவனியுங்கள். எட்டணு ஸ்டாம்புடன் இன்றே எழுதவும். 'ஜவுளி கேட்லாக் இனும்' மானேஜர்,

எம். ஆர். வீவிங் பாக்டரி,
கோட்டார், திருவாங்கூர்.

ஏஜண்டுகள் தேவை.

தக்க கமிஷன கொடுக்கப்படும்.

கேட்லாக் இனும்,

ஸ்ரீ கிருஷ்ணநந்த கௌதம பரிமளசாலை.

ஆண்மை தரும் அமிர்த ரச தாது புஷ்டி லேகியம், அங்க நோயகற்றும் அநுமாஞ்சனம், வாய் நாற்றமகற்றும் வாசனைப் புகையிலை, நற்சுகமளிக்கும் நறுமண சந்தனுதித் தைலம், நலம்மிகுந்த நறுமண அரைக்கீரை விதைத் தைலம், நாளுக்கு நாள் குணமளிக்கும் நறுமண கூந்தல் தைலம், பாங்குடனமைந்த வாசனைப் பாக்குத்தூள், கண்டோர் வியக்கும் கஸ்தூரி பற்பொடி. சாதுக்கள் இன்புறும் ஊதுபத்தி தினுசுகள், பூஜைக்குகந்த வாசனை தசாங்கம். தேஜஸ் கொடுக்கும் ஸ்நானப் பவுடர். மந்தகாசம் பொருந்திய நறுமண சந்தன பில்லை. சித்தரை மகிழ்விக்கும் பல அத்தர் தினுசுகள்.

அடியிற்கண்ட விலாசத்தில் கிடைக்கும்.

ஸ்ரீ கிருஷ்ணநந்த கௌதம பரிமள சாலை,
வலங்கைமான் போஸ்டு,
தஞ்சை ஜில்லா.

"அறிவு விளக்கம்"

ஓர் மாதாந்திரப் பத்திரிகை

வருட சந்தா தபாற்கூலி உள்பட 6 அணு

மாதிரிப்பிரதி இனும்.

'அறிவுவிளக்கம்' ஆபீஸ், உடுமலைப்பேட்டை

முந்துங்கள்! முந்துங்கள்!!

'இந்திய-மாதா'

மிஸ். காதரைன் மேயோ என்னும் அமெரிக்க மாது தன் இந்திய—சுற்றுப்பிரயாணத்தில் கண்டவைகளையும், கேட்டவைகளையும் கொண்டு பெரும் பிறட்டாக நம்மையும் நம் சகோதரிகளையும் தூஷித்து எழுதியிருக்கும் புரட்டுப் புராண புஸ்தகத்தின் சுத்த மொழி பெயர்ப்பு.

இதை ஒவ்வொரு இந்தியரும் வாசித்து, அயல் நாட்டார் நம்மை எவ்வளவு இழிவுபடுத்தத் தயாராயிருக்கிறார்களென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

பெரிய புஸ்தகம் உயர்ந்த பைண்டு.

புஸ்தகத்தின்பேரில் பாரத மாதாவின் படம் கண்ணைக் கவரும்படியாக பல கலர்களில் அச்சிடப் பட்டிருக்கிறது.

இங்கிலீஷ் பதிப்பு ரூ. 8—0—0 ஆக விற்கப்படுகிறது. தமிழர்கள் படிக்க வேண்டும் என்ற உத்தேசத்துடன் அசல் விலைக்கே விற்கிறோம். முன்பணம் ரூ. 1—8—0 அனுப்பிப் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

விலை ரூ. 1—8—0.

முன்பணம் அனுப்புவோருக்கு தபாற்செலவு இனும்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
Book-Depot, சென்னை.

சிருங்காரமான போட்டோ படங்கள்.

பாரிஸ் மாதர்கள், ஐரோப்பிய மாதர்கள் முதலோரின் அழகையும், அவர்களின் விநோத நடை உடை பாவனைகளையும் விளக்கும் போட்டோ கார்டுகள் படுக்கையறையைச்சிறப்பிக்க ஒவ்வொரு வீட்டிலும் முக்கியமானவை. படங்களைப் பார்க்கப்பார்க்கப் பேரின்பம். உயர்ந்த கலர் கிளேஸ் படங்கள். பல ரகங்கள் கொண்ட டஜன் கார்டுகள் விலை ரூ. 1-15-0.

ப்ரெஞ்சு வாசனைக் கார்டுகள்.

வாசனைப் புட்டி வேண்டுமென்ற அவசியமில்லை. எப்பொழுதும் உயர்ந்த வாசனையோடு கூடிய ஷ கார்டுகள் டஜன் ரூ. 1 தான்.

☞ ஸ்ரீ: கிருஷ்ணு ஏஜன்சி,
26, வெள்ளாளத் தெரு, புரசபாக்கம், மதிராஸ்

பார்த்தீர்களா! இரகசிய நூல் படித்தீர்களா!!

ஹிப்னுடிஸ மெஸ்மரிஸ மென்னும்
மனோவசிய ரகசிய சாஸ்திரம்.

இப்புத்தகம் ஆங்கில நாட்டார் செய்து அனுபவ மடைந்தது. இதில் தூங்காமல் தூங்குதல், தூக்கத்திலிருப்பவனைப் பலவித வேலை செய்வித்தல், பிறரை வசியப்படுத்தல், புலி முதலிய மிருகங்களைத் தன் வசப்படுத்தல், தூர சங்கதி அறிதல், மருந்தில்லாமல் நோய் தீர்த்தல் முதலிய பல ரகசிய மெஸ்மரிஸ சாஸ்திரம் சித்திரப் படங்களுடன் அடங்கியிருக்கிறது. விலை ரூ. 1—8—0. ஸ்ரீ பானுமதி புஸ்தகசாலை, சூளை போஸ்டு, மதராஸ்.

மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd

ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷ கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பக்ட்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.

நாவல் உலகத்தின் ஒளி,

ஸ்ரீலோலன்

ஓர் அரிய இனிய அபூர்வ

துப்பறியும் நாவல்,

விலை ரூ. 1-4-0.

விலாசம்:—

T. S. ராஜம் & சன்,

காஞ்சீபுரம்.

டிடக்டாஸ்கோப்

அல்லது

துப்பு இரகசியம் அறியும் கருவி.



இதன் உபயோகம் மற்றொருவர் இருப்பிடத்திலிருந்தே உங்களுடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன் மூலமாய்ப் பார்க்கலாம். உங்களுடைய வீட்டிலும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை வெகுகாலத்திற்கு இரகசியமாயும் இதன் மூலமாய்க் கண்டுபிடிக்கலாம். மனைவிக்குத் தெரியாமல் உம்மைப் பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல வர்ணங்களால் தயாரித்த படிக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் கூடி கருவி விலை ரூபா 2 தான்.

வெளி நாடுகளுக்கு முன்பணம் அனுப்பாமலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில் அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி. மதராஸ்.

ஆநந்த குணபோதினி.

இரண்டாம் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இதுவரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அறிவகம், எல்லாம் புத்தி போதனையே. யாவும் கண்களுக்கினிய, செவிக்கினிய அலங்காரமுள்ள மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000-சந்தாதாரர்களுள்ளது. வருட சந்தா ரூ. 1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனாம். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்

402, தங்கசாலை வீதி, மதராஸ்.

மூன்றாவது வருஷம்! மூன்றாவது வருஷம்!!

தமிழ் மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றதும், பல்லாயிரக்கணக்கான சந்தாதாரர்களுடையதும், தமிழ் அறிஞர்கள் எல்லோரும் போற்றி வருவதுமான

ஆனந்த விகடன்

இதற்கு மூன்றாம் வருஷம் பிறந்து விட்டது. இப்பத்திரிகையின் நன் மதிப்பு தமிழ்நாட்டு ஜனங்களிடம் நன்கு பதிந்து விட்டபடியால் புகழ்ச்சியாக நாம் ஒன்றும் கூறத் தேவையில்லை. இவ்விரண்டு வருஷங்களாக இதற்கு வருஷ சந்தா இரண்டு ரூபாயாக இருந்தது. இந்த வருஷத்திலிருந்து இதை ஏழை முதல் எல்லோரும் படிக்க வேண்டுமென்ற கருத்துடன் ஒரு ரூபாயாக குறைக்கப்பட்டிருக்கிறது. இதில் மாதா மாதம் பல பெரிய மேதாவிகளால் எழுதப்படும் அரிய கட்டுரைகள் வெளிவரும். தேச நன்மைக்காகவும், தமிழரின் சுயமதிப்புக்காகவும், அநுபவபேதம் யாருக்கும் அஞ்சாமல் தனது அபிப்பிராயத்தை தயங்காமல் வெளியிடும் தமிழ் மாதப்பத்திரிகை இது ஒன்றே. யாரும் விரும்பும் விநோதமான விஷயங்களும், விகடப்பேச்சுகளும், வாழ்க்கையின் மர்மங்களும், வியாபாரக்குறிப்புகளும், வைத்திய விவசாயங்களும் அநுபவசாலிகளால் எழுதப்பட்டு இப்பத்திரிகையில் இடங்கொள்கின்றன.

சற்று ஆலோசித்து முடிவு செய்யுங்கள்.

பிரதி மாதமும் 48 பக்கங்களுடன் அடக்கமாய்ப் புஸ்தகம் போன்று வெளிவரும் இந்த உயர்வான செந்தமிழ்ப் பத்திரிகைக்கு வருஷ சந்தா ரூபாய் ஒன்று தான் என்பதை யோசிப்பீர்களானால், வாசகர்களே இப்பத்திரிகை அச்சிடப்படுகிறதென்பது தமிழ் நாட்டிற்கு இப்பத்திரிகை உலாவ வேண்டுமென்ற பரோபகார எண்ணத்துடனேயே இது வெளிவருகிற தென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கும். இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு வருஷ சந்தா தபால் கூலியுள்பட ரூ. 1—0—0. வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூ. 1—4—0.

மாதிரி காப்பி இனாம்!

விலாசம்:—

"ஆனந்த விகடன்" ஆபீஸ்,

244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:— "விகடன்" சென்னை. டெலிபோன் 3311.

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலவேறிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.

நமது வைத்தியசாலை பழனியில் ஸ்தாபித்து 26-வருஷமாகிறது. பழனியில் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்டு
உலகமெங்கும் நல்ல பேர் எடுத்த வைத்தியசாலை இதுவேயாகும்.
வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர், முப்புவைக் கண்டுபிடித்தவர்.

ரிஜிஸ்டர்
TRADE MARK

இம்மருந்துகள் முதல்தரமான தேவ ஔஷதங்களென்று 1923-ல் திருநெல்வேலியில் கூடிய சித்தர் ஆயுர் வேத மெடிகல் கான்பரன்சிலும் 25—8—23-ல் சென்னையில் நடந்த மேற்படி கான்பரன்ஸ் அண்டு எக்ஸிபிஷனிலும், தங்கமெடலும் "வைத்திய ஆசிரியர்" என்று பட்டமும் பெற்றவர். ஒவ்வொரு மருந்துகளுக்கும் கணக்கற்ற நற்சாக்ஷிப்பத்திரங்கள் வந்தவண்ணமாயிருக்கின்றன. அவற்றுள் சில அடியில் காண்பன.

தாளகபற்பம்.

இருமலுக்கு அனுபவத்தில் கைகண்டது.
உத்திரவாத முள்ளது. புகையாது.

நமது பற்பம் முப்புவால் செய்ததால் நெருப்புக்கு ஓடாது. மற்றவர்கள் பற்பத்தை நெருப்பில் வைத்தால் புகைந்து ஓடிவிடும்.

எவ்வளவு நாட்பட்ட ரத்தகாசம், க்ஷயம், ஈளை, இருமல், கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு, பீனிசம், ஜுரம் இருந்தாலும் சரி 8 வித காசமும் இதில் அவசியம் தீரும். 20-நாள் மருந்து அனுபான சூரணத்துடன் விலை ரூ. 25—0—0 ஏழைகளுக்கு ரூ 12—8—0.

நற்சாக்ஷி:—நமது தாளகபஸ்பம் 6 நாளைக்குள் ரத்தகாசத்தால் உயிரைக் காப்பாற்றியதாக சொல்வதை கவனியுங்கள்.

நான் 8 மாதகாலமாய் ரத்தகாச வியாதியால் கஷ்டப்பட்டு ஒவ்வொரு நாளும் சாயந்திரம் 6 மணிக்கு இருமல் வந்துவிடும். ராத்திரிகளில் சாதம் சாப்பிட்டால் அதிக உபத்திரவத்துடன் வாந்தியாய்விடும். உடனே விசம்படி ரத்தம் விழும். அதுமுதல் விடியும் வரைக்கும் இமைகொட்டும் நேரங்கூட இடைவிடாது இருமிக்கொண்டே கபம், கோழையாக வந்து வெளிப்படுக்கொண்டே அழுகிய கோழி முட்டையைப்போல் நூர்வாடையுடன் வரும். காலையில் பார்த்தால் ஒருபடி கடம் இருக்கும். தலை சாய்த்து தூங்கி 8 மாதம் ஆகிறது. சரீரம் நாளுக்குநாள் மெலிந்து விட்டது. நடக்க சக்தியில்லை. இந்த நிலைமையில் மதுரை ஆஸ்பத்திரியில் மருந்து சாப்பிடலாமென்று போனேன். செல்லிஷன் செட்டியார் நான்படும் கஷ்டத்தைப்பார்த்து, தானும் இந்தப்படியே கஷ்டப்பட்டதாயும், தங்களுடைய தாளக பஸ்பம் சாப்பிட்டு சொஸ்தமடைந்ததாயும் சொல்லி தங்கள் விலாசத்தைக்கொடுத்தார். அந்தப்படியே தங்களுக்கு எழுதி 6 நாள் மருந்து சாப்பிட்டேன். ஏழாம்நாள் நல்ல எண்ணை தேய்த்து தலைமுழுகியதில் அந்த ராத்திரி நன்றாய் தூங்கினேன். ரத்தம் விழுவதும், இருமல், வாந்தி, கபம்விழுவதும், நூர்வாடை வீசுவதும அன்றே நின்றுவிட்டது. அதிலிருந்து எல்லோரும ஆச்சரியப்பட்டார்கள். நல்ல பசி எடுக்கிறது. ஆகாரம் நன்றாய்ச் சாப்பிடுகிறேன். சரீரம் நல்ல திடத்துடன் நல்ல நிலைமையிலிருக்கிறேன், தூக்கம் நன்றாய் தூங்குகிறேன். இப்படியுள்ள வியாதியில் போன உயிரைக் காப்பாற்றிய மகான் யாரோ அவரை நேரில் போய் தரிசித்து நல்ல வாக்கு வாங்கிக்கொண்டுவா என்று இவ்விடத்திலுள்ளவர்கள் சொன்னார்கள். அந்தப்படி நான் நேரில் வந்து தரிசித்தேன். ப. வீரமலை செட்டியார், சிங்கம்பிடாரி, ராமநாட்: 10—12—24.

ஆஸ்தமா என்பது தீராத ரோகம். அப்படியுள்ள ரோகத்திற்கு நமது தாளபஸ்பம், வகையரா சேர்த்து 20-நாள் சாப்பிட்டு பூரண சொஸ்தமாகி புகழ்ந்து எழுதியதைக் கவனியுங்கள்:— அகண்ட பரிபூரண மண்டாலகார சர்வ பரிபூரண சச்சிதானந்த மயமாய் விளங்கும், கதிர் வேலுக்கு எதிர் வேலில்லை என்கிற வாக்கியம் தங்களுக்கே தகுதியானது. என் சம்சாரம், கமலத்தம்மாளுக்கு 10 வருஷகாலமாயிருந்த ஆஸ்தமா என்ற வியாதி தங்களுடைய மருந்தினாலும் பழனி ஆண்டவர் அருளாலும் மேற்படி வியாதி படாபஞ்சாக பறந்துவிட்டது. (அதாவது) சூரபத்மனுடைய சைமனயங்களும், சிம்ம மகா சூரனென்ன, தாருகா சூரனென்ன, பானுகோப சூரனென்ன, இவர்களை தன் சக்தி வேலாயுதத்தினால் அந்த அசுரர்களை வென்று தேவர்களுக்கு அபயம் கொடுத்தார். அந்த வேலே நீங்கள் "தெய்வம் மானுஷ ரூபேண," என்கிற பிரகாரம் தங்களை தன்னுடைய அடிவாரத்தில், பக்தனாக வைத்துக்கொண்டு உலகப்பிரசித்தியாக்கி எங்களைப் போன்ற ஏழை எளியதுகளுக்கு தங்களை ஒரு சிரோரத்தினமாக வைத்திருக்கிறார். ஏதோ இப்படிக்கெல்லாம் ஸ்துதிசெய்து எழுதினேனென்று வருத்தப்படக்கூடாது. நான் பட்ட அவஸ்தை அந்த பகவானுக்குத்தான் தெரியும். தாங்கள் அந்த அவஸ்தையை நீக்கியதால் நான் ஆனந்த கடலில் மூழ்கி ஆனந்த கண்ணீர் பெருகி இந்த கடிதத்தை எழுதினேன். தங்களை தெய்வமாக நம்பியிருக்கிறேன். ஆ. கைலாச சாஸ்திரி, பிராமண சங்க உபாத்தியாயர், 38 தெரு, 29-ம் நெம்பர் வீடு, ரங்கூன். 15—7—26.

வைத்திய ஆசிரியர்,

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை, சித்த வைத்தியசாலை, பழனி.

தந்தி விலாசம் "சித்தர்" பழனி

நமது பிராஞ்சு வைத்தியசாலை 29, பிராட்வே மதராஸ்.

1928 1928

இந்துசமயக் காலண்டர்

ஒரே காலண்டரில் அழகான 14 படங்களுள்ளது!

ஒவ்வொரு படமும் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கும் தத்துவங்களை விளக்கிக் காட்டுவது.

நேர்த்தியான ஆர்ட் பேப்பரில் கண்ணாடி போடத் தகுந்ததாய் அச்சிடப்பட்டுள்ளது.

இக்காலண்டரில் அடங்கியுள்ள 14 படங்களின் விவரம்:—

1	திருமகள்	8	பாலகிருஷ்ணன்
2	கலைமகள்	9	இராதாகிருஷ்ணன்
3	ஆண்டாள் சூடிப்பார்த்தல்	10	சிவபெருமான் கங்கையைத் தரித்தல
4	உமை சிவலிங்கத்தைத் தழுவியிருத்தல்	11	முருகன் சிவபெருமானுக்கு உபதேசித்தல்
5	பார்வதி பரமேஸ்வரன்	12	காளிங்கமர்த்தனம்
6	மகாவிஷ்ணு	13	துருவன் அருள்பெறுதல்
7	ஷண்முகம்	14	ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்

விலை அணா 8. தபாற்கூலி வேறு.

இம்பீரியல் டிரேடிங் கம்பெனி,

585, பைகிராப்ட் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.